
கல்கி

KALKI 13-2-1972

45 காசு



for that millionaire look



Century
for 100% cotton
textiles


CENTURIZED

THE
CENTURY
SPG. & MFG. CO. LTD.,
BOMBAY 25 DD

Century's
Cosy-Cot
cotton SHIRTINGS
with Rich Woollen Fee'

For Fashion Fabrics choose
Century Shirtings!

NPS-CM 16



ASP/9/C-4

உங்கள் உடலுக்குத் தேவை 23 ஊட்டச் சத்துக்கள்



பாலிலே உள்ளவை 9



காம்ப்ளான்® 23சத்துக்களும் கொண்டது

(புரதம், வைட்டமின்கள், தாதுப்பொருள்கள் உள்பட)

காம்ப்ளானில் உள்ள 23 சத்துக்களும் அவை உங்களுக்கு அளிக்கும் நலன்களும்

புரதம்	திசுக்களையும் தீய அணுக்களையும் வளர்க்கவும் சரி செய்யவும் இன்றியமையாதது.
லிபிட்ஸ்	ஆற்றலில் அடர்ந்த உணவுப்பொருள்
கார்போஹைட்ரேட்	உடல் ஆற்றலுடன் இயங்க
கால்ஷியம்	ஆரோக்கியமான பற்களையும் எலும்புகளையும் வளர்க்கிறது.
பாஸ்பரஸ்	உடல் திரவங்கள், எலும்புகள் மற்றும் பற்களுக்கு
ஸோடியம்	சாதாரண இரத்த ஓட்டத்திற்கு
குளோரைடு(ன்)	ஆகாரம் ஜீரணத்திற்கு அவசியமானது. பசியினைத் தூண்டுகிறது.
பொட்டாஸியம்	இதன் பற்றாக்குறை மனச்சோர்வையும் தசைத் தளர்ச்சியையும் அளிக்கும்
இரும்புச் சத்து	ஆரோக்கியமான இரத்தத்திற்கு
அயோடின்	தைராய்டு சுரப்பிக்கு அவசியமானது. [illegible]
வைட்டமின் ஏ	கண்கள் மற்றும் சருமம் [illegible] ஆரோக்கியமாக வைக்கிறது
வைட்டமின் பி-1	வளர்ச்சிக்கும், வலிமையான நரம்புகளுக்கும், பெரி-பெரி நோயைத் தடுப்பதற்கும் தேவை
ரிபோஃப்ளேவின்	ஆரோக்கியமான வாய், நாக்கு, உதடுகள் கண்கள் முதலியவற்றிற்கு
நியாசினமைடு	சருமம் ஆரோக்கியமாகவும் பொலிவுடனும் திகழ
கால்ஷியம் பேன்டோதினேட்	காயங்களையும், தசைகளையும் இறுக்க மாக்குகிறது
கோலின்	ஆரோக்கியமான ஈரல் இயக்கத்திற்கு
பேரிடாக்ஸைன் (பி6)	நரம்புகளுக்கு இதமளிக்கிறது
வைட்டமின் பி 12	இரத்த சோகையை எதிர்க்கிறது
ஃபோலிக் அமிலம்	புதிய இரத்த அணுக்களை உருவாக்குகிறது.
வைட்டமின் ஸி	நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது. [illegible]
வைட்டமின் டி	வலிமையான எலும்புகளுக்கும் பற்களுக்கும்
வைட்டமின் இ	திசு உற்பத்திக்கு
வைட்டமின் கே	சாதாரண இரத்தக் கட்டுக்கு
டிரேஸ் எலிமென்ட்ஸ்	வைட்டமின்களின் உபயோகத்தை உடல் நன்கு பெறவும் ஆரோக்கியமான சுரப்பிகளின் இயக்கத்திற்கும் இன்றியமையாதது

ஊட்டச் சத்துப் பற்றாக்குறை உங்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடும். காம்ப்ளான் ஒரு முழுமையான உணவு—சிறந்த துணை உணவு-முழுமையான மாற்றுணவு.

காம்ப்ளானை நீரில் கரைக்கவும். நீங்கள் விரும்பினாலொழிய பால் சேர்க்கத் தேவையில்லை. ஏனெனில், காம்ப்ளானில் ஏடு நீக்கிய பால் ஏற்கனவே சேர்க்கப் பட்டுள்ளது. பின்னர் காம்ப்ளானை உங்களுக்கு விருப்பமான காபி, வனில்லா, கேசர் முதலியவற்றோடு கலந்து பருகுங்கள். (ஆரஞ்சு அல்லது எலுமிச்சை சாற்றோடு கலக்காதீர்கள்.)

காம்ப்ளான் எளிதில் சீரணிக்கக்கூடியது. அதுவனரும் குழந்தைகள், சுறுசுறுப்பாக இயங்கும் பெரியவர்கள், கருவுற்ற பெண்மணிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதியவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்குச் சிறந்தது.

நோயாளிகளுக்கும் பிணியாறி வருபவர்களுக்கும் அது உன்னதமான திரவ உணவு.

காம்ப்ளான் பருகும் பழக்கத்தை மேற்கொண்டு, சத்துப் பற்றாக் குறைகளிலிருந்து உங்கள் உடலுக்குப் பாதுகாப்பளியுங்கள்.



250 கிராம் காம்ப்ளான் தேனின்டி பேக்


500 கிராம் காம்ப்ளான் எகானமி பேக்

250 கிராம் காம்ப்ளான் வாழைப்பழச்சுவை

காம்ப்ளான்® — முழுமையான உணவு

சத்துப் பற்றாக்குறைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.

கிளாக்ஸோ ஆராய்ச்சியின் உலகறிந்த தயாரிப்பு.


மகிழ்ச்சிதுள்ளும்
வளமான வாழ்வு
கிராமங்களிலே..
பல்வேறு தேசிய கட்டட நிர்மாண வேலைகளுக்கென்றே தேர்ந்தெடுக்கப்படுவது ராக்ஃபோர்ட் ப்ராண்ட் டால்மியா சிமெண்ட். பரிசோதிக்கப்பட்ட திடத்திற்கும், சிறந்த உழைப்பிற்கும் முதலிடம் பெறுவது.
வளர்ச்சியும், மகிழ்ச்சியும் இணைந்த பெருவாழ்வு அளிப்பதுதான் கிராம வாழ்க்கைக்கு ராக்ஃபோர்ட் ப்ராண்ட் தரும் சிறந்த காணிக்கை.
ராக்ஃபோர்ட் டால்மியா சிமெண்ட்
உறுதியான எதிர்காலத்திற்கு எழுப்பப்படும் இன்றைய கட்டடம்.
டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் தொழிற்சாலை
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
தலைமை அலுவலகம் 4, சிந்தியா ஹவுஸ், புது டெல்லி 1.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிட்.
டால்மியாபுரம், (தமிழ்நாடு).

கல்கி
பொருளடக்கம்



விரோதிகிருது, மாசி 1. - பிப்ரவரி 13, 1972

அட்டைப்படம் : (ஆசாரிய சுவாமிகள்) சந்தரேசன்.

சந்தா விவரம் :	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 23-00	ரூ. 11-50

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




நீங்கள்...
தன்னம்பிக்கையுடன்,
உங்களுக்கே உரிய தனிப்
புதுமைத் தோற்றத்துடன் திகழ
ஹகோபா
எம்பிராய்டர்ட் துணிவகைகள்

மகேந்திரர் மறைந்தார்; வீரேந்திரர் வாழ்க!

இவ்வுலகிலுள்ள ஒரே ஹிந்து ராஜ்யமாகிய நேபாளத்தில் பதினாறு ஆண்டுகள் நல்லாட்சி நடத்திய மன்னர் மகேந்திரர் மறைந்துவிட்டார். மகேந்திரர் ஐம்பத்தியோராவது வயதிலேயே மரணமடைந்தது குறித்து வருந்தாதார் இல்லை. இதற்கு முன் நேபாளத்தை ஆண்ட பல மன்னர்களும் ஐம்பத்திரண்டு வயது முடியுமுன்பே காலமாகிவிட்டிருக்கின்றனர். இது இந்த ராஜ வம்சத்தின் தலைவிதி போலும்!

இமாலய நாடாகிய நேபாளம், பசுபதிநாதர் ஆலயத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் ஆத்மிகத்தில் மதிப்புப் பெறுகிறது. வீரத்துக்கும், கடமை உணர்வுக்கும் நமது துணைக் கண்டம் முழுவதிலும் பெயரெடுத்துள்ள நேபாளியர்களைப் பிரஜைகளாகக் கொண்டிருப்பதால் ராணுவ ரீதியிலும் மதிப்புக் கொண்டுள்ளது. ஆயினும், விஞ்ஞான வசதிகளைப் பார்க்குமிடத்து நேபாளம் பின்தங்கிய நாடேயாகும். இந்த நாட்டினை நவயுகத்தில் முன்னுக்குக் கொண்டு வருவதில் குறிப்பிடத்தக்க சாதனை செய்தவர் மன்னர் மகேந்திரர். இதனை நேபாளியர் என்றென்றும் நன்றியுடன் நினைவுகொள்வர்.

இந்தியர்களைப் பொறுத்தமட்டில் எல்லை நாடாகிய நேபாளத்துக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் உண்டு. மகேந்திரர் மறைவில் நாம் ஒரு நல்ல நண்பரை இழந்து விட்டோம். நேபாளத்தின் முன்னேற்றத்துக்காக நாம் மிகுந்த உதவி செய்து வந்திருக்கிறோம். துரதிருஷ்டவசமாக, துர்நோக்கம் கொண்ட செஞ்சீனமும் நம்முடன் போட்டி போட்டுக் கொண்டு, உதவி வழங்கி, நேபாளத்தை வசியப்படுத்த முயன்று வருகிறது. அந்நியர் எவரையும் சாராமலே தமது ராஜ்யம் தனித்தன்மையுடன் வாழ வேண்டும் என்று உறுதி கொண்டிருந்த மகேந்திரர், பாரதத்துக்கும் சீனத்துக்கு மிடையே 'நடுநிலைமை' வகிப்பதாகக் கருதி, சீனத்தின் உதவியையும் ஏற்றிருக்கிறார். நேபாள — இந்திய நல்லுறவுகளைப் பற்றி நம்பிக்கை சிறிதே தளரக்கூடிய சந்தர்ப்பமும் சமீப காலத்தில் தோன்றியது. ஆயினும், இவ்விரு நாடுகளிடையே வர்த்தக உடன்படிக்கை சுமுகமாக உருவாகத் தொடங்கியது. சீனம் பாகிஸ்தானின் நெருங்கிய நண்பனாகிவிட்டபின் நிலைமை புதுத் திருப்பம் அடைந்தது. ஆயினும், போர் முடிந்து வங்காள தேசம் உருவானவுடன் அதனை நேபாளம் அங்கீகரித்துவிட்டது. இதனால் மன்னர் மகேந்திரர் நடுநிலைமை என்ற பெயரில் அக்கிரமத்தையும், ஆக்கிரகத்தையும் ஒப்பவில்லை என்ற நன்னம்பிக்கை எழும்பியது. நல்ல தருணத்தில் அவர் மறைந்தது பேரிழப்பாகும்.

தந்தை விட்டுச் சென்ற நற்பணிகளைத் தனயர் சிறப்புற நிறைவேற்றுவார் என நம்பி, புது மன்னர் வீரேந்திரருக்கு வாழ்த்துக் கூறுகிறோம். வீரேந்திரர் வாலிபரே ஆயினும் உயர் படிப்பும், தொழிலறிவும், பல நாட்டு அரசியல் முறைகளில் ஈடுபாடும் கொண்டவர். தமது ராஜ்யத்தில் ஜனநாயக மரபுகளை விரிவுபடுத்துவதில் அவர் சிறப்பாகச் செயலாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கம்யூனிஸ சீனத்தின் ஆதரவைப் பெற்று ஜனநாயக மரபுகளை வளர்க்க முயல்வது மாயமான் வேட்டையே ஆகும் என்பதை அறிவாளியாகிய வீரேந்திரர் உணர்ந்து, பாரத ஜனநாயகத்துடன் நட்பைத் தங்கச் சங்கிலியாக உறுதி செய்து கொள்வார் என நம்புகிறோம்.



மறைந்த மன்னர் மகேந்திரர்

ராஜாஜியின் கருத்துக்கள்

இந்தியாவும் இந்திராவும்

ஸ்ரீமதி இந்திரா காந்தியின் கட்சிக்குப் பலமான அஸ்திவாரம் இல்லை. எனவே, அவருக்குக் கட்சியினால் சக்தி இல்லை, உதவியும் இல்லை. பிரதமர் பதவியில் இருப்பவரோடு சேர்ந்திருப்பதால் சொந்த லாபம் பெறலாம் என்று ஆசை கொண்டவர்களே அவரது கட்சியில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் ஸ்ரீமதி இந்திரா காந்தி செயலாற்றுவது எளிதான காரியமல்ல. இந்தப் பெரிய இடுக்கண் இருந்தும்கூட, ஸ்ரீமதி இந்திரா தைரியமாகச் செயலாற்றி வருகிறார். பயங்கரப் பொருளாதாரப் பிரச்னையில் சிக்கியுள்ள நமது தேசம் இத்தலைமைக்கு மாறாகத் தார்மிக சக்தி பொருந்திய இன்னொரு தலைவரைக் கண்டுகொள்ள முடியாமல் இருக்கிறது. இதனால் தேசத்துக்கு நம் அநுதாபம் உரித்தாகிறதா, ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு நம் அநுதாபம் உரித்தாகிறதா என்றே சொல்ல முடியாமலிருக்கிறது. இன்றைய நிலையில் இந்திரா, இந்தியா என்ற இரண்டில் அதிக அநுதாபம் யாருக்கு என்று காண்பது கடினம். இன்றைய தலைமை இப்படியே உள்ளமட்டில், ஸ்ரீமதி இந்திரா தோள் கொடுக்க வேண்டிய பொறுப்புக்களுக்கு உகந்த விவேகத்தை அவருக்கு பகவான் அநுக்கிரகிக்க வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக !

இளைஞர்கள் ஆக்க ரீதியில் சுதந்திரமாகச் சிந்திக்கும் ஆற்றலைப் பெற வேண்டும் என ஸ்ரீமதி இந்திரா காந்தி விரும்புகிறார். நியாயமான விருப்பம். ஆனால் ஒரு செடி வளர வேண்டும் என்று விரும்பினால் அதற்கு நீர் ஊற்றியாக வேண்டும். நம் மக்கள் சுதந்திரமாக இயங்குவதற்குத் தேவையான நீர் ஊற்றப்படவில்லை. அத்தியாவசிய விஷயங்கள், விசேஷ சலுகைகள் அனைத்திலுமே மக்கள் சுதந்திரமிழந்து, பிரதமரைச் சார்ந்து நின்று, அதிலே கிடைக்கிற 'பிரசாத'த்தை மட்டும் உண்ணுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர். தேசிய உற்பத்திக்கு வளர்ச்சி தராமல் சோஷலிஸ கோஷத்தை எழுப்பியிருப்பது, மக்கள் சுய பலத்தைப் புறக்கணித்து அரசாங்கத்தையே நாடி நிற்குமாறு செய்துவிட்டது.

'தன்னைத்தானே சார்ந்து வாழ வேண்டும்' என்று பிரதமர் கூறுவதைச் சுயநல நோக்கத்துடன் அர்த்தம் செய்து கொண்டு, எல்லா தர்ம நெறிகளையும் புறக்கணித்து, தகாத முறைகளில் பணம் பண்ணுகிற 'நிபுணர்'களும் இருக்கிறார்கள். இவர்களே பிரதமருக்கு உதவி வழங்கி நமது நாடு விமோசனமற்ற ஏகாதிபத்தியத்தின் கீழ் வருவதற்குத் துணை செய்கிறார்கள். பணம் என்ற ஒரே குறியில் மூழ்கி, நாட்டுக்கு மட்டுமின்றித் தங்களுக்கும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய தீங்கை இவர்கள் உணராமல் இருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் உண்டாகும் மனத் தளர்ச்சியிலிருந்து விடுபட ஒரே வழி பகவானை நம்புவதுதான். பகவானை நம்பினால் அவன் நிச்சயமாகத் தனது கிருபையைச் செயலாக்குகிற கருவிகளை ஊக்கிவைப்பான். இன்று நம்மை வருத்த சோதனைகளுக்கு ஆளாக்கினாலும் பகவான் நம்மைக் கைவிட மாட்டான். உபநிஷதம் கண்ட ரிஷிகளின் குழந்தைகளான நாம் இந்த உலகில் ஆற்ற வேண்டிய சிறப்புப் பணிகள் உள்ளன. பாரத தேசத்தைப் பகவான் கைவிட மாட்டான்.

வங்காள தேச விஷயம்

நியூஜிலந்து, ஆஸ்திரேலியா, ஃபிஜி ஆகிய நாடுகள் வங்காள தேசத்தை அங்கி

கோபாலபுரம் கோபாலனுக்குக் கோபுரம்

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கோபாலபுரம் காலனி ஆரம்பிக்கும் போது நிர்மாணிக்கப்பட்டது ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி ஆலயம். இக் கோயிலில் மகா கணபதி, சுப்ரமணிய ஸ்வாமி, கோதண்டராமர், ஆஞ்சநேயர், நவகிரஹங்கள் முதலிய மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டு எல்லா தேவதைகளுக்கும் பூஜை, உத்சவங்கள் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. 1965ம் வருடம் இக்கோயில் கும்பாபிஷேகம் நடந்த சமயம் ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு இரண்டு நாட்கள் கோவிலிலேயே தங்கியிருந்து ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி பிரதிஷ்டையையும், கும்பாபிஷேகத்தையும் நடத்தி அனுக்கிரகித்தார்கள்.

பக்தகோடிகள் ஆலயத்துக்கு ராஜகோபுரம் அமைக்க வேண்டியது அவசியமென விரும்பி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் நல்லாசிகளுடன் மேற்படி திருப்பணியை மேற்கொண்டுள்ளனர். கும்பாபிஷேக சமயம் ஸ்ரீ சங்கர பகவத்பாதாள், ஐயப்பன் ஆகிய மூர்த்திகளின் பிரதிஷ்டைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆஸ்திகப் பெருமக்கள் இப்பெரும் பணியில் ஈடுபட்டுத் தங்களாலான பொருளுதவியைச் செய்ய வேணும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ டி. வி. ஸ்ரீநிவாஸன், **Gopalapuram Hindu Religious Society**, 3, கணேஷ் தெரு, கோபாலபுரம், சென்னை – 6.

கரித்துள்ளன. கடைசியாகப் பிரிட்டனும் புது நாட்டை அங்கீகரித்துவிட்டது. கடைசியாக வந்த செய்தி ஆயினும் இதுவே முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் விளைவாக பாகிஸ்தான் காமன்வெல்த்தை விட்டே வெளியேறிவிடுவதாகக் கூறியிருக்கிறது.

என் அறிவுக்கு எட்டியமட்டில், காமன்வெல்த்தில் உள்ள அதிகபட்சசுதந்திரம்பெற்ற டொமினியனும் கூட இன்னொரு டொமினியன் மீது போர் தொடுக்க உரிமை இல்லை. இந்த உரிமையைப் பாகிஸ்தான் மீறிவிட்டது. அப்படிச் செய்ததற்காக பாகிஸ்தானை காமன்வெல்த்திலிருந்தே வெளியேற்றியிருக்கலாம். இவ்விதம் வெளியேற்றப்படாததற்காக பாகிஸ்தான் திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டிருக்க வேண்டும். மாறாக, வங்காள தேச அங்கீகாரத்தை ஆட்சேபித்து காமன்வெல்த்தை விட்டு வெளியேற முடிவு செய்திருக்கிறது. இது கேலிக்கூத்தாகும். பாகிஸ்தானின் இப்போதைய முடிவும், அதனுடைய மனஸ்தாபமும் இறுதியாகிவிட்ட விஷயம் என்று சொல்வதற்கில்லை. அரசியல் நிலைமையில் தெளிவு ஏற்பட்டு, அமைதியாகச் சிந்திக்க அவகாசம் ஏற்படும்போது புனர்ப்பரிசிலனை செய்யப்படலாம்.

எல்லா அரசுகளும் வங்க தேசத்தை அங்கீகரித்துவிட்ட பின், இப்போது ஐ. நா. முன் இவ்விஷயம் வந்தால் அமெரிக்கா எத்தரப்புக்கும் வோட் தராமல் வாக்கெடுப்பிலிருந்து ஒதுங்கி யிருக்கக் கூடும். பிரத்தியட்ச உண்மையாக உதயமாகியுள்ள சுதந்திர வங்க தேசத்தை மற்ற நாடுகள் அங்கீகரித்திருப்பதே அமெரிக்காவின் தவற்றை வலியுறுத்திக் காட்டுகிறது. இதற்குத் தார்மிக ரீதியில் முக்கியத்துவம் உண்டு. வங்க தேச மக்கள்மீது யாஹ்யாகான் தமது காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளை இழைப்பதற்கு உதவி செய்தது குறித்து அமெரிக்கா வெட்கமடைய வேண்டும். நமது துணைக் கண்டத்தின் அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் பாதகமாக நடந்துகொண்ட அமெரிக்கா இதனை ஈடுகட்ட ஏதும் செய்ய இயலாது. அமெரிக்காவிடம் நமக்கு மனக் கசப்பு இல்லை. தனது சிக்கல்களை அது நல்லமுறையில் சமாளித்து மகிழ்ச்சி காண வேண்டும் என்றே விரும்புகிறோம். அமெரிக்க மக்கள் உண்மையான கிறிஸ்து மதத்துக்குத் திரும்புவராக. மனம் போனபடி நடக்க அநுமதிப்பதே ஒரு பண்பாடு என்கிற பெயரில் பயங்கர சாகஸங்களை ஊக்கும் போக்கினை அம்மக்கள் கைவிடுவராக.

நிதி இனத்தில் வங்க தேசத்தைத் தூக்கி நிறுத்துகிற பொறுப்பு இந்தியாவின் மீது பெரும் சுமையாக விழுந்திருக்கிறது. இந்தியாவே பொருளாதாரத்தில் சௌகரியமான நிலையில் இல்லை என்பது கவனிக்கத் தக்கது. இச்சமயத்தில் சர்வதேச நிதி உதவிக் குழுவிலும், சர்வ தேச புனர் நிர்மாண பாங்கிலும் வங்க தேசம் அங்கத்தினராவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முதலில் எடுக்க வேண்டும் என உலக பாங்குத் தலைவர் ஸ்ரீ மக்நமாரா யோசனை சொல்லியிருப்பது நல்ல செய்தியாகும். இது ஓரளவுக்கு இந்தியாவின் சுமையைக் குறைக்கலாம்.

அறுபது லட்சத்துக்கு மேற்பட்ட அகதிகள் கிழக்கு வங்கத்துக்குத் திரும்பிவிட்டனர். தங்களது பாழான இல்லங்களுக்கு இத்துணை பெரிய மக்கட்தொகை திரும்பியிருப்பது அந்நாட்டு மக்களுக்கு முஜிப் உர் ரஹ்மானிடமும் அவரது அரசாங்கத்திடமும் உள்ள நன்னம்பிக்கைக்கு அழுத்தமான அத்தாட்சியாகும்.

லட்சியமும் அல்ல; தேசியமும் அல்ல!

சமூகத்தில் அனைவருக்கும் சமநீதி வழங்க வேண்டும் என்பது ஒரு தேசிய லட்சியமாகும்.

இதற்கான உபாயங்களில் ஒன்றே சோஷலிஸம் என்று அந்தக் கொள்கைக்காரர்கள் கருதுகிறார்கள். ஆனால் இன்று இந்தியா உள்ள நிலையில் சம நீதியை எய்த சோஷலிஸம் உதவாது. மாறாக, சோஷலிஸம் என்ற பெயரில் உலவும் கொள்கைகளால் உற்பத்திப் பெருக்கம் தடைசெய்யப்பட்டு மக்களின் முன்னேற்றமும் தடுக்கப்படும் — அதாவது சமநீதி அடைகிற முயற்சி மந்தமாகும்.

சோஷலிஸம் என்பது ஒரு தேசிய லட்சியம் என்று அகில இந்திய வானொலியில் கூறப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். முதலாவதாக, சோஷலிஸம் லட்சியம் அல்ல, லட்சியத்தை அடையச் சிலர் பின்பற்றும் ஓர் உபாயமே அது. இரண்டாவதாக, பல எதிர்க்கட்சிகள் சோஷலிஸத்தை ஏற்கவில்லை. ஆனபடியால், அதைத் 'தேசிய' லட்சியம் என்று சொல்வது தவறாகும். வானொலியானது ஆள்கிற காங்கிரஸுக்குச் சாதகமாக இருந்தாலும் கூட, தவறான வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும்.

ராணுவ வெற்றியும் உண்மை வெற்றியும்

இன்றைய நிலவரத்தை நேரில் கண்டு மதிப்பிடுவதற்காக இந்தியத் துணைக் கண்டத்துக்கு வந்துள்ள எனது பெருமதிப்புக்குரிய அமெரிக்க நண்பர் ஒருவர், "இப்போது இந்தியா பலம் பொருந்திய நாடு என்று உறுதிப்பட்டு விட்டதால், இனி அது தன் பலத்தை எப்படிப் பிரயோகிக்கும் என எண்ணுகிறீர்கள்?" என்று என்னிடம் வினவினார். நான் அவரிடம் சொன்னதின் சாரம் வருமாறு:

பாகிஸ்தான் மீது இந்தியா வெற்றி பெற்றிருப்பதை நமது பலத்துக்கு நிரூபணமாகச் செய்த காரியம் என வர்ணிப்பதற்கில்லை. உண்மையான, நிரந்தரமான பலம் என்பது பாகிஸ்தானின் நட்பையும் ஒத்துழைப்பையும் பெறும் முயற்சியில் நாம் வெற்றி கொள்ளும் போதே நமக்குக் கிட்டும். ராணுவ ரீதியில் இப்போது நாம் பாகிஸ்தான் மீது பெற்ற வெற்றி பாராட்டுக்குரியதே. ஆயினும் இது தவறான வழியைக் காட்டிப் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே பகையை நீடிக்கக் கூடும். பாகிஸ்தான் பலவீனமான நாடாகவே இருக்கலாம்; தன் நண்பர்கள் என்று அது எண்ணிக் கொண்டிருக்கும் நாடுகள் அதற்கு ஸ்தூலமான எந்த உதவியும் அளிக்காமலே போகலாம் — இப்படியெல்லாம் இருந்தாலும் கூட அந்த நாட்டைப் பகை நாடாகக் கொண்டுள்ளவரையில் இந்தியாவும் பலவீனமாகவே இருக்கும். பாகிஸ்தானின் ஐயங்களையும் கெட்ட எண்ணத்தையும் களைகிறபோதுதான் இந்தியா உண்மை வெற்றி பெற்றதாகும். ராணுவச் செலவால் நமக்குப் பாதுகாப்புக் கிடைத்தாலும் இது காரணமாக ஏற்படும் வரி, பண வீக்கம் இவற்றால் பொருளாதாரம் நலிந்து தேசத்துக்கும் பலவீனம் உண்டாகிறது. போர் மூலம் வெல்வதை விட நட்பு மூலம் ஐக்கியப்படுவதே சிலாக்கியமானது. இதனால் தெற்காசியாவிலே ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஜனநாயகத்தைக் காத்த பெரும் பணியை இந்தியா ஆற்றியதாகும்.

"ஹரே கிருஷ்ணா!"

சென்னைக்கு வந்துள்ள ஹரே கிருஷ்ணா சங்கத்தின் ஆற்றல் படைத்த நாலு அங்கத்தினர்கள் சென்ற வாரம் என்னைக் காண வந்தனர். அவர்களுடன் நீண்ட நேரம் உரையாடினேன். அவர்களது ஆதார நூல் பகவத் கீதை என அறிந்து மிகவும் மகிழ்ந்தேன். யூதர், கிறிஸ்தவர், முஸல்மான் என்றிப்படி எம்மதத்தில் ஒருவர் இருப்பினும், அந்த மதக் கோட்பாடுகளை மறுக்காமல் அவற்றுக்கு நிறைவு தருகிற தத்துவங்களை ஸ்ரீ கிருஷ்ணனின் உபதேசத்தில் பெற முடிகிறது என்று அவர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் உள்ளார்ந்த சாகஸ உணர்வில் 'ஹரே கிருஷ்ணா சர்வ தேச இயக்கம்' ஓர் அங்கமாகும்.

ஒரு சங்கம் என்று ஏற்பட்டு விட்டால், அதன் பின் அது தனி மதமாகி விடக் கூடும். இவ்விதம் ஏற்படக்கூடாது என்று அங்கத்தினர்கள் முயன்றாலும் கூட, கடைசியில் சபலம் ஏற்பட்டுத் தனி மனிதர்களைப் போலவே சங்கத்துக்கும் ஓர் 'அகங்காரம்' உண்டாகி விடுகிறது. இப்போதுள்ள மதங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தெளிவு தருவதற்குப் பதிலாக, தமது சங்கத்தைப் புது மதமாக்கிவிடுகிற சபலத்துக்கு ஆளாகிவிடக் கூடாது என்று ஹரே கிருஷ்ணா அங்கத்தினர்களுக்கு எச்சரிக்கை செய்தேன்.

ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா!

ஹரே கிருஷ்ணா இயக்கத்தின் தலைவரும் உலகின் பல நாடுகளில், சிறப்பாக அமெரிக்காவில் கிருஷ்ணப் பிரேமையை வளர்த்து வருபவருமான ஸ்ரீ ஏ. ஸி. பக்தி வேதாந்த ஸ்வாமி ப்ரபுபாதா அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்கிறார்கள். ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் பிப்ரவரி 12ந் தேதி முதல் 14ந் தேதி வரை பிரதி தினமும் மாலை ஏழு மணிக்கு பாகவத தர்மம் பற்றிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறார்கள். பல நாடுகளிலிருந்தும் வரும் அவரது சீடர்கள் நாமசங்கீர்த்தன நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்கள். ஹரே கிருஷ்ணா இயக்கம் உலகம் முழுவதும் எப்படி வியாபித்துள்ளது என்பது பற்றிய கண்காட்சியும் திரைப் படக் காட்சியும் உண்டு. பிப்ரவரி 12ந் தேதி மாலை நாலு மணி முதல் தொடர்ந்து நடைபெறும் பல நிகழ்ச்சிகளுக்கும் பொதுமக்கள் திரளாக வந்திருந்து பயன் அடையுமாறு கோரப்படுகிறார்கள்.



கொஞ்சுமிளம் தென்றலோ, குலவ வரும் மல்லிகையோ!

கம கமக்கும் மல்லிகை மணம். இளமை கொழிக்கும் மேனியெழில். இரண்டையும் உங்களுக்கு வழங்கவே ஜேய் அழகு சோப். வில்லை கரைந்தாலும் சுகந்தம் குறையாத அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. உங்கள் பைந்தளிர் மேனி என்றும் பதினாறுகப் புதுமையுடன் பொலிய உபயோகியுங்கள் ஜேய்—ஜிகினைத் தாளுறை தரித்த ஒரே அழகு சோப்!



உங்கள் புத்தெழில் பெருக ஜேய் அழகு சோப் மனங்கவர் மல்லிகை மணம் கமழ்வது.

டாடா தயாரிப்பு.

இ—13—2

(சரியாக அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் 1907 பிப்ரவரி 13ந் தேதியன்று நிகழ்ந்த ஒரு புண்ணிய சம்பவத்தால்தான் இன்று நமது சநாதன தர்மம் உயிர் பிழைத்திருக்கிறது. ஆம், அதுதான் பதின்மூன்று வயதுப் பாலன் சுவாமிநாதன், ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாக ஞான சிம்மாதனம் ஏறிய மங்கள தினம். இவ் வருடம் இதே தினத்தில் மகா சிவராத்திரியும் நிகழுவது அதிவிசேஷம். சிவஸ்வரூபமேயான நமது காமகோடி பெரியவாளின் திருஉருவை இவ்விதழ் அட்டையில் வெளியிட்டு வணங்குகிறோம். - ஆசிரியர்)

சிவராத்திரி

அநேக சிவாலயங்களில் கர்ப்பக் கிருஹத்தின் மேற்குப் பாகத்தில் லிங்கோத்பவமூர்த்தியின் பிம்பம் இருக்கும். லிங்கோத்பவமூர்த்தி என்பது பரமேசுவரனுடைய அறுபத்து நான்கு மூர்த்திகளுக்குள் ஒன்று. விருஷபாரூடர், அர்த்தநாரீசுவரர், ஹரிஹரர், நடராஜர், காமாரி, பைரவர், தக்ஷிணாமூர்த்தி, ஸோமாஸ்கந்தர், பிக்ஷாடனர், ஊர்த்வ நடனர், ஜலந்தராஸுர ஸம்ஹாரர், கால ஸம்ஹாரர் இப்படி அறுபத்துநான்கு மூர்த்திகள் உண்டு. அவைகளுக்குள் ஒன்று லிங்கோத்பவ மூர்த்தி.

அந்த மூர்த்திதான் சிவாலயத்திலுள்ள லிங்கத்துக்குப் பின்புறம் காணப்படும். அதற்குக் கீழே ஒரு வராக மூர்த்தி இருக்கும்; மேலே ஹம்ஸரூப மூர்த்தி ஒன்று இருக்கும். இந்த லிங்கோத்பவர் யார்?

ஸ்ரீ ருத்திராபிஷேகம் பண்ணுவதற்குமுன்பு 'ஆபாதாலநப: ஸ்தல' எனத் தொடங்கும் தியான சுலோகம் சொல்லிவிட்டு அப்புறந்தான் அபிஷேகம் பண்ணுவது வழக்கம்.

ஆபாதாலே நப: ஸ்தலாந்த புவன
ப்ரஹ்மாண்டமாவிஸ்புரத்
ஜ்யோதி: ஸ்படிக லிங்க மௌலிவிலஸத்
பூர்ணேந்து வாந்தாம்ருதை:!
அஸ்தோகாப்லுதம் ஏகம் ஈசம் அநிசம்
ருத்ராநுவாகான் ஜபன்
த்யாயேத் ஈப்ஸித ஸித்தயே (அ)த்ருதபதம்
விப்ரோஷிஞ்சேத் சிவம் !!

இந்த சுலோகத்தில் என்ன தெரியுமா சொல்லியிருக்கிறது? பாதாள முதல் ஆகாச பரியந்தம் எல்லையில்லாத அநந்த ஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்ற ஸ்படிக லிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறது. ஸ்படிக லிங்கத்துக்கு ஒரு வர்ணமும் சொல்ல முடியாது. எந்த வஸ்துவை அதில் வைக்கிறோமோ அதனுடைய வர்ணத்தை அது பிரதிபலிக்கும். குணதோஷம் இல்லாதது அது. ஞானம் எப்படிப் பரிசுத்தமாக இருக்கிறதோ அப்படி அந்த ஸ்படிக லிங்கம் இருக்கிறது. அதன்பின் பச்சை வில்வத்தை வைத்தால் பச்சையாகத் தோன்றும். சிவப்பரளியை வைத்தால் சிவப்பாகத் தோன்றும். அது நிர்விகாரமானது. பரப் பிரம்ம ஸ்வரூபம் நிர்விகாரமாக இருந்தாலும் நம்முடைய மனோபாவத்தை எப்படி வைக்கிறோமோ அப்படித் தோன்றும் என்பதற்குத் திருஷ்டாந்தமாக இந்த ஸ்படிக லிங்கம் இருக்கிறது. அது எதையும் மறைக்காது. அதற்கு அப்புறம் உள்ள வஸ்துக்களையும் அதன் வழியாகப் பார்க்கலாம். பரம சுத்தமாக நிஷ்களங்கமாக இருக்கும். நிர்க்குணமான பரமாத்ம வஸ்துவுக்கு அது திருஷ்டாந்தம். நினைக்கிற ரூபமாக அது ஆகும்.

அதன் சிரஸில் பூர்ண சந்திர கலை இருக்கிறது. யோகிகள் தமது சிரசில் ஸஹஸ்ரார கமலத்தில் சந்திர மண்டலத்தில் ஜ்யோதி ஸ்வரூபத்தைத் தியானம் பண்ணுவார்கள்; அந்த சந்திர பிம்பத்திலிருந்து அமிருதம் ஒழுகும். அதனால் அவர்களுக்குப் பரமானந்தம் உண்டாகிறது. ஸமஸ்த பிரபஞ்சஸ்வரூபமான ஜ்யோதிர் லிங்கம் குளிர்ந்தால் லோகமெல்லாம் குளிரும். இதனால்தான் சிவலிங்கத்துக்கு ஓயாமல் அபிஷேகம் செய்வது. ருத்திர அபிஷேகத்துக்கு முன்பு சொல்லும் சுலோகம் இதை எல்லாம் அறிவுறுத்துகிறது.

ஸகல பிரம்மாண்டமும் சிவலிங்கம்தான். ஸ்ரீ ருத்திரத்தில் இப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வ பதார்த்தங்களும், நல்லது கெட்டது எல்லாம் சிவ ஸ்வரூபம் என்று ஸ்ரீ ருத்திரம் சொல்லுகிறது.

லிங்கம் ஏன் வட்டவடிவமாயிருக்கிறது? வட்டமான ஸ்வரூபத்துக்குத்தான் அடிமுடியில்லை; ஆதியில்லை, அந்தமுமில்லை. மற்றவைகளுக்கு உண்டு. முக்கோணத்துக்கு, சதுரத்துக்கு உண்டு. ஆதியந்தம் இல்லாத வஸ்து சிவம் என்பதை லிங்காகாரம் காட்டுகிறது.

யாராவது பந்துவை நினைக்கிறோம், சந்தோஷமாயிருக்கிறது; ஆனால் அவருடைய உருவத்தையும் பார்த்தால்தான் சந்தோஷம் பூரணமாகிறது. அவ்வாறே உருவற்ற சிவமும் ஒரு மூர்த்தியோடு வந்து அநுக்கிரகம் பண்ணினால் மனத்துக்கு சந்தோஷமாக இருக்கும். ஞானிகளுக்கு மட்டுமே பரமாத்ம ஸ்வரூபத்தின் நிராகார (அருவ) உண்மை புரியும். உருவத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தம் அநுபவிக்கிறவர்களுக்கு உருவத்தோடு கண்டால்தான் ஆனந்தம் உண்டாகும். அதற்

க.ராஜேந்திரன் எழுதும் ஸைக்கோ வைரநாதன்" தொடர்கதை மார்ச் 5' இதழில் ஆரம்பம்

பெரியவாள் சொன்ன கதை



"வாளாடி ஜவந்திநாதய்யர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்!"

"அப்படியா? இந்த ஜவந்திநாதர்ங்கிற பேரு எந்த ஸ்வாமியுடையது?"

"திருச்சிராப்பள்ளி மாத்ருபூதேசுவரருக்குத்தான் ஜவந்திநாதர்ன்னு இன்னொரு பேரு!"

"அப்படியும் ஒரு பெயர் உண்டா? — செட்டிப் பெண்ணுக்குப் பிரசவம் பார்த்ததாகக் கதை உண்டு. அதே போல் ஜவந்திநாதர்னு பெயர் வந்ததற்கும் ஏதாவது கதை உண்டோ?"

"கதை உண்டோ இல்லையோ, தெரியாது! அந்த ஸ்வாமிக்கு ஜவந்திநாதர்னு ஒரு பெயர் இருக்கிறது மட்டும் தெரியும்!"

சிறிது நேரம் மௌனம். பெரியவர்களது முகத்தில் சாந்தமான முறுவல்.

"திருச்சிராப்பள்ளியிலே மலைக்கோட்டைக்குக் கீழே நாகநாதஸ்வாமி கோயில்னு ஒன்று இருக்கிறதே, தெரியுமோ?"


"தெரியும்!"

"அந்தக் கோயில் குளக்கரையிலே ஸாரமா முனிவர், ஸாரமா முனிவர்னு ஒரு தபஸ்வி இருந்தார். அவருக்குத் தாயுமானவர் இஷ்ட தெய்வம். நல்ல நல்ல புஷ்பங்களாகத் தேடி அவருக்கு அர்ச்சனை செய்வதில் ஸாரமா முனிவருக்கு ஓர் ஆனந்தம். ஒரு நாள் இந்திரலோகத்திலிருந்து அவருக்கு ஒரு புஷ்பம் கிடைத்தது. நல்ல பொன் நிறம். மணமும் அபாரம். 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்னும் பழமொழியே அம்மலரைப் பார்த்த பின்தான் தோன்றியிருக்குமோ, என்னமோ? அதுதான் ஜவந்தி புஷ்பம்! இந்தக் காலத்துக்கு ஜவந்திக்கு அந்தக் காலத்து வாசனை கிடையாது. அந்தப் புஷ்பச் செடியைத் தமது நந்தவனத்துக்கே கொண்டு வந்து பயிரிட்டார், ஆண்டவனுக்கு அன்றாடம் அர்ப்பணம் செய்ய வேண்டும் என்ற ஆசையில். செடி வளர்ந்து புஷ்பித்தது. முனிவர் ஜவந்தி புஷ்பத்தால் ஈசுவரனை அர்ச்சனை செய்து ஜவந்திநாதராக்கினார்.

பக்கத்தில் இருந்த உறையூர் தான் அந்தக் காலத்திலே சோழ ராஜாவுக்குத் தலைநகரமாயிருந்தது. அப்போதிருந்த சோழ மன்னருக்கு இரண்டு ராணிகள். எல்லாக் கதைகளிலும் வருகிறாற்போல் இளைய ராணியிடம் தான் அரசருக்குப் பிரியம் அதிகம். ஆனால் இளைய ராணிக்குக் குழந்தையில்லை; மூத்த ராணிக்கு மட்டும் ஒரே ஒரு குழந்தை உண்டு.

முனிவரது ஆசிரமம் இருக்கும் வழியாக அரச குடும்பம் ஒரு நாள் ஸ்ரீரங்கத்துக்குப்





கி.ராஜேந்திரன் எழுதும் ஸைக்கோ ஸாரநாதன்" தொடர்கதை மார்ச் 5' இதழில் ஆரம்பம்

பெரியவாள் சொன்ன கதை



"வாளாடி ஜவந்திநாதய்யர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்!"

"அப்படியா? இந்த ஜவந்திநாதர்ங்கிற பேரு எந்த ஸ்வாமியுடையது?"

"திருச்சிராப்பள்ளி மாத்ருபூதேச்வரருக்குத்தான் ஜவந்திநாதர்னு இன்னொரு பேரு!"

"அப்படியும் ஒரு பெயர் உண்டா? — செட்டிப் பெண்ணுக்குப் பிரசவம் பார்த்ததாகக் கதை உண்டு. அதே போல் ஜவந்திநாதர்னு பெயர் வந்ததற்கும் ஏதாவது கதை உண்டோ?"

"கதை உண்டோ இல்லையோ, தெரியாது! அந்த ஸ்வாமிக்கு ஜவந்திநாதர்னு ஒரு பெயர் இருக்கிறது மட்டும் தெரியும்!"

சிறிது நேரம் மௌனம். பெரியவர்களது முகத்தில் சாந்தமான முறுவல்.

"திருச்சிராப்பள்ளியிலே மலைக்கோட்டைக்குக் கீழே நாகநாதஸ்வாமி கோயில்னு ஒன்று இருக்கிறதே, தெரியுமோ?"


"தெரியும்!"

"அந்தக் கோயில் குளக்கரையிலே ஸாரமா முனிவர், ஸாரமா முனிவர்னு ஒரு தபஸ்வி இருந்தார். அவருக்குத் தாயுமானவர் இஷ்ட தெய்வம். நல்ல நல்ல புஷ்பங்களாகத் தேடி அவருக்கு அர்ச்சனை செய்வதில் ஸாரமா முனிவருக்கு ஓர் ஆனந்தம். ஒரு நாள் இந்திரலோகத்திலிருந்து அவருக்கு ஒரு புஷ்பம் கிடைத்தது. நல்ல பொன் நிறம். மணமும் அபாரம். 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்னும் பழமொழியே அம்மலரைப் பார்த்த பின்தான் தோன்றியிருக்குமோ, என்னமோ? அதுதான் ஜவந்தி புஷ்பம்! இந்தக் காலத்துக்கு ஜவந்திக்கு அந்தக் காலத்து வாசனை கிடையாது. அந்தப் புஷ்பச் செடியைத் தமது நந்தவனத்துக்கே கொண்டு வந்து பயிரிட்டார், ஆண்டவனுக்கு அன்றாடம் அர்ப்பணம் செய்ய வேண்டும் என்ற ஆசையில். செடி வளர்ந்து புஷ்பித்தது. முனிவர் ஜவந்தி புஷ்பத்தால் ஈசுவரனை அர்ச்சனை செய்து ஜவந்திநாதராக்கினார்.

பக்கத்தில் இருந்த உறையூர்தான் அந்தக் காலத்திலே சோழ ராஜாவுக்குத் தலைநகரமாயிருந்தது. அப்போதிருந்த சோழ மன்னருக்கு இரண்டு ராணிகள். எல்லாக் கதைகளிலும் வருகிறாற்போல் இளைய ராணியிடம்தான் அரசருக்குப் பிரியம் அதிகம். ஆனால் இளைய ராணிக்குக் குழந்தையில்லை; மூத்த ராணிக்கு மட்டும் ஒரே ஒரு குழந்தை உண்டு.

முனிவரது ஆசிரமம் இருக்கும் வழியாக அரச குடும்பம் ஒரு நாள் ஸ்ரீரங்கத்துக்குப்





''ஜாக்கிரதையாகக் கையாளவும்' என்று எழுதட்டுமா?''

''அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம்?''

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்ஸல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்ஸல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.


ஆகவே உங்கள் பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம்பூராவையும் தன் பார்ஸல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று

மதுரை



இளையராணிக்கு மூத்த ராணியிடம் ஒரு பொறாமை. தனக்குக் குழந்தையில்லை. தன் மூத்தாளுக்குக் குழந்தை இருக்கிறது: அது தான் பட்டத்துக்கு வரும் என்று!

கொள்ளிடத்தைக் கடக்கும்போது அவன் மனத்தில் ஒரு சதித் திட்டம் உருவாகியது. இப்பொழுது பிறர் அறியாமல் மூத்தாளையும் அவள் குழந்தையை யும் நீரில் தள்ளிவிட்டால் யாருக்கும் ஐயம் ஏற்படாது என்று முடிவுக்கு வந்தான். தருணம் பார்த்துத் தள்ளியும் விட்டான். தள்ளிவிட்டதோடு நில்லாமல், ''ஐயையோ! ராணியும் குழந்தையும் ஆற்றோடு போகிறார்களே!'' என்று குரலும் கொடுத்தான்.

ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போகும்பொழுது யாராலும் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. அந்த நேரத்தில் அவரவருக்கு அவரவர் உயிர் வெல்லமாக இருந்தது.

கொள்ளிடம் மூத்த ராணியையும் குழந்தையையும் அடித்துக் கொண்டு போய் விஷ்ணம்பேட்டைக்கு அருகில் கரை சேர்த்தது. நினைவு இழந்து கிடக்கும் அவர்களை ஒரு குயவன் எடுத்துக் காப்பாற்றினான்.

இன்றைக்கும் மாத்ருபூதேசுவரரின் நெற்றிக் கண் நெருப்புக்கு இலக்காகி மணல் மேடிட்ட பல இடங்கள் இருப்பதைக் காண லாம். ஆனால் மூத்த ராணியும் குழந்தையும் கரையேறிய ஊர் 'திருக்கானூர்' என்னும் பெயரில் லட்சுமிகரமாக இலங்கியது.

இளையராணியின் உள்ளம் அறிந்த மூத்த ராணி, தன்னை இன்னார் இனியார் என்று இனம் காட்டிக் கொள்ளவில்லை. தன் பிள்ளை அரசனாகாவிட்டாலும், எங்கேயாவது உயிர் பிழைத்து நல்லபடியா யிருந்தால் சரி என்று எண்ணித் தன்னை ஓர் அநாதை என்றே சொல்லிக் கொண்டாள்.

குயவன் அவர்களை அன்போடு பராமரித்து வந்தான். ஆண்டவன் அருளில் அந்தக் குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக என்பார்களே, அப்படித் திடகாத்ரமாக வளர்ந்து வந்தான். ஆண்டு ஒன்றுக்கு ஒரு யானை பலம் அவனுக்குக் கூடி வந்தது. ஐந்தாவது ஆண்டில் ஐந்து யானை பலம் பெற்றவனாகத் திகழ்ந்தான்.

இன்று திருவானைக்கா என்கிறோமே, அது அன்று பெரிய யானைக்காடாக இருந்தது. ஐந்து வயது பாலகன் யானைகளின் பல்லைப் பிடித்துப் பார்க்கத் தொடங்கி விட்டான்.

குயவனுக்குக் கவலையாகப் போய்விட்டது. ஆண்டுதோறும் இவனுக்கு இப்படி பலம் வளர்ந்தால் உலகம் தாங்காது. நல்ல வழியில் அந்தப் பலம் செலவானால் பரவாயில்லை. தீ வழியில் சென்றால் என்ன ஆவது? நல்ல படியே வளர்த்தாலும்கூட மிதமிஞ்சிய அதிக பலம் ஓரிடத்தில் சேரக் கூடாது என்பதை அவன் நன்கு அறிந்து வைத்திருந்தான்.

எனவே, ஆண்டவனின் பெயரைக் கூறிக் குறிபோடும் கரிக் கட்டியைக் கையில் எடுத்துக்கொண்டான். 'ஒரு யானை பலம் போச்சு! இரண்டு யானை பலம் போச்சு! மூன்று யானை பலம் போச்சு! நான்கு யானை பலம் போச்சு!' என்று சொல்லியவாறே சிறுவனின் கால்களில் கோடு இழுத்தான். ஒவ்வொரு கோடு இழுக்கும்போதும் ஒரு யானை பலம் குறைந்தது. ஒரு யானை பலம் மட்டும் மிகுதி இருக்க விட்டான். கரியினால் காலில் கோடு இழுத்துக் கரி (யானை)யின் பலத்தைக் குறைத்ததனால் அந்தப் பையனுக்குக் கரிகாலன் என்ற பெயர் வழங்கலாயிற்று. நல்ல குயவன் கைப்பாண்டமாகக் கரிகாலன் உருப்பெற்றான்.

இங்கே இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன. அங்கே உறையூர்க் கதை என்ன ஆயிற்று, தெரியுமா?

இளைய ராணிக்குக் குழந்தையே பிறக்காததால் சோழ வம்சம் வாரிசு அற்றதாகிவிட்டது. அரசரும் வயோதிகம் எய்தி விண்ணுலகம் சென்றுவிட்டார்.

நாட்டை ஆள அரசன் ஒருவன்வேண்டுமே' மந்திரிகள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். பட்டத்து யானையின் துதிக்கையில் ஒரு பூர்ண கும்பத்தையும் பூமாலையையும் கொடுத்து நாட்டுக்கு ஓர் அரசனைத் தேடி வர அனுப்பினார்கள். அந்த யானை ஊர் ஊராகச் சென்றது. திருக்கானூரை அடைந்தது.

கரிகாலன் மணல்மேடிட்டிருந்த இடங்களை யெல்லாம் செப்பனிட்டு வாய்க்கால் வெட்டி வளமையுள்ள நாடாக்குவதில் முனைந்திருந்தான்.

அவனைக் கண்டதும், யானை தான்கொண்டு வந்திருந்த நீரால் முழுக்காட்டியது. பிறகு மாலையை அணிவித்தது.

வளமைக்கு வழிகோலிய வளவனைத் தன் முதுகில் தூக்கி வைத்துக் கொண்டது.

கரிகாலன் ஒரு யானை பலம் உள்ளவனாக இருந்தானா? தனக்குச் சம பளுவைத் தூக்குவது அந்த யானைக்குச் சிரமமாகத்தான் இருந்தது. இருந்தாலும் நாட்டுக்கு ஒரு நல்ல அரசனைக் கண்டுபிடித்துவிட்ட மகிழ்ச்சியில், பளுவின் காரணமாக அது தட்டுத் தடுமாறினாலும் உற்சாகம் பொங்கத் தூக்கிச் சென்றது.

யானை பலம் கொண்ட கரிகால் வளவனை உறையூர் மக்கள் தங்கள் மன்னனாக்கி மகிழ்ந்தார்கள். அரச குடும்பத்தின் வாரிசு அவன் தான் என்பதை அறியாமலே, அவனுக்கே உரிமையான பதவியை அளித்துப் பரவசமானார்கள்.

சோழ வள நாட்டுக்கு ஒரு கரிகால் வளவனைத் தந்த பெருமை யாருக்கு? ஐவந்தி நாதனான மாத்ருபூதேசுவரனுக்குத்தானே?

* * *

கதை சொல்லி முடித்த பெரியவர்கள் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள். குறுநகையோடு மௌனகுருவின் வாயிலிருந்து ஒரு கேள்வி எழுந்தது: ''நான் கதை நன்றாகச் சொல்கிறேனா?''

கற்கண்டைத் தின்ற ஊமையர்களாக நின்ற மக்கள் மீது பெரியவர்களின் அருட் பார்வை ஓடியபோது புல்லரித்தது.

கேட்டு எழுதியவர்: ரா. வீழிநாதன்

“‘ஜாக்கிரதையாகக் கையாளவும்’ என்று எழுதட்டுமா?”

“அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம் ?”

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்ஸல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்ஸல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.

ஆகவே உங்கள் பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.


வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம்பூராவையும் தன் பார்ஸல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.



ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்


டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று

மதுரை



விஜய பாங்கிற்கு

ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு மிக்க ஆண்டு



Bensons-2077-TAM




விஜய பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: லைட் ஹவுஸ் ஹில் ரோடு, மங்களூர்-3

அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீஸ்: ரேஸ் கோர்ஸ் ரோடு, பெங்களூர்-1

சேர்மன்: எம். சுந்தர் ராம் ஷெட்டி



அலை ஓசை

அமரர் கல்கி

9. கதவு திறந்தது

வாசலில் வந்து நின்றவர்கள் யாசகர்கள் அல்ல, சந்தா வசூலிக்க வந்தவர்கள் அல்ல, பொங்கல் இனாம் கேட்க வந்தவர்களும் அல்ல என்பது நிச்சயமான பின், 'தேவி ஸதனத்'தின் வாசற் கதவு திறக்கப்பட்டது.


''வாருங்கள், ஐயா! வாருங்கள்! நீங்கள்தானா? யாரோ என்று பார்த்தேன். இந்தக் காலத்தில் வாசற் கதவைத் திறந்து வைக்க முடியவில்லை. திறந்தால் போச்சு! யாராவது வீண் ஆட்கள் திறந்த வீட்டில் நாய் நுழை

கிறது போல நுழைந்து விடுகிறார்கள்'' என்று சொல்லிக் கொண்டே பத்மலோசன சாஸ்திரி வந்தவர்கள் இருவரையும் உள்ளே அழைத்துச் சென்றார்.

''உட்காருங்கள்! ஏன் நிற்க வேண்டும்?.... பாதகமில்லை. சுப்பய்யரே! சோபாவிலேயே தாராளமாய் உட்காருங்கள். நீங்கள் உட்கார்ந்ததினால் சோபா தேய்ந்தா போய்விடும்? அந்த மாதிரி 'நாஸூ'க்கு ஆசாமிகளைக் கண்டால் எனக்குப் பிடிக்கிறதேயில்லை. தரையில் ஆயிரம் ரூபாய் ரத்தினக் கம்பளத்தை விரிப்பார்கள். அப்புறம் யாராவது அதில் கால் வைத்து நடந்து விட்டால், 'ஐயையோ! அழுக்காய்ப் போகிறதே!' என்று அவஸ்தைப் படுவார்கள். இரண்டாயிரம் ரூபாய் செலவுசெய்து சோபா வாங்கிப்போட்டு விட்டு அதன் மேலே அழுக்கும் சிக்கும் பிடித்த உறையைப் போட்டு மூடி வைப்பார்கள். உங்களுக்குத் தெரியுமா? நான் ராமநாதபுரம் ஜில்லாவிலே ஸப் ஜட்ஜ் உத்தியோகம் பார்த்தபோது ஒரு தனிகர் வீட்டுக்குப் போயிருந்தேன். அந்த வீட்டின் தூணுக்கு உறை போட்டு வைத்திருந்தது. ஸார்! தூணுக்கு உறை போட்டு வைத்திருந்தது! கரும் சலவைக் கல்லில் தூண்; ஒவ்வொரு தூணுக்கும் செலவு ஐயாயிரம் ரூபாய்! அவ்வளவு வேலைப்பாடான தூணைச் செய்துவிட்டு அதை உறை போட்டு மூடி வைத்துவிடுகிறார்கள். எப்படி இருக்கிறது கதை! பரவாயில்லை, நீங்கள் உட்காருங்கள்!'' என்று பத்மலோசன சாஸ்திரியார் மூச்சு விடாமல் பேசிக் கொண்டேயிருந்தார். சுப்பய்யரும் கிட்டாவய்யரும் இடம் பார்த்து மெதுவாக உட்கார்ந்துகொண்டார்கள்.

சாஸ்திரிகள் சிறிது மூச்சு விட்ட சமயம் பார்த்துச் சுப்பய்யர், ''போன ஞாயிற்றுக்கிழமை சர்வக்ஞ சங்கத்தில் பாகவத உபந்நியாசம் நடந்ததே? அதில் ரொம்ப ரசமான கட்டம் எது தெரியுமா? தாங்கள் பாகவதருக்கு உபசாரம் சொன்ன கட்டம்தான். ஆஹா! எவ்வளவு கச்சிதமாகப் பேசினீர்கள், போங்கள்! பேசினால் அப்படி அழகாகப் பேச வேண்டும்; இல்லாவிட்டால் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும்! எல்லாரும் பேசுகிறார்களே!'' என்றார்.

சுப்பய்யருக்கு இன்ஷியூரன்ஸ் ஏஜெண்டு உத்தியோகம். யாராயிருந்தாலும் சமயம் கிடைத்தபோது ஒரு நல்ல வார்த்தை சொல்லி வைத்தால் எப்போதாவது பயன்படும் என்பது அவருடைய நம்பிக்கை. இந்தக் கல்யாணம் மாத்திரம் நிச்சயமானால் மாப்பிள்ளைப் பிள்ளையாண்டானைப் பத்தாயிரம் ரூபாய்க்கு இன்ஷியூர் செய்துவிடுவது என்று



மனத்துக்குள் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்.


ஆனால், சாஸ்திரிகள் இலேசான ஆள் அல்ல. முகஸ்துதிக்கு மசிந்து ஏமாந்து போகிறவரும் அல்ல.

''ஆமாம், ஐயா, ஆமாம்! உம்மைப் போல இதுவரை தொண்ணூறு பேர் இப்படி என்னை ஸ்தோத்திரம் செய்து விட்டார்கள். அபாரமாய்ப் பேசிவிட்டேன் என்று சர்டிபிகேட் கொடுத்து விட்டார்கள். ஆனால், நான் பேசியதன் தாத்பரியம் யாருடைய மனத்திலாவது பதிந்ததோ என்றால் கிடையவே கிடையாது!...'' என்று சாஸ்திரிகள் கூறி வந்தபோது, ''அது என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று சுப்பய்யர் குறுக்கிட்டுக் கேட்டார்.

''எது என்ன எப்படிச் சொல்கிறீர்கள்? — எல்லாம் சரியாய்த்தான் சொல்கிறேன். ஏதடா, காவேரி நதி தீரத்திலிருந்து ஒரு பௌராணிகரை அழைத்திருக்கிறோமே, அவருக்கு ஏதாவது மரியாதை செய்து அனுப்ப வேண்டும் என்று யாருக்காவது தோன்றுகிறதோ? — தானாகத் தோன்றாவிட்டாலும் நான் சொன்ன பிறகாவது தோன்ற வேண்டாமோ? ஊஹூம், இன்றுவரையில் ஒரு காலணா ஒருவரும் கொடுத்தபாடில்லை. பட்டண வாசம் அப்படியாக ஜனங்களின் மனத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டது. ஏதோ நம்முடைய கிராமாந்தரங்களில் மட்டும்தான் இன்னமும் தான தருமம் என்பது கொஞ்சம் இருந்து வருகிறது. பட்டணங்களிலே தர்மம் அடியோடு பாழ்த்துப் போய் விட்டது. ஒரு சமாசாரம் சொல்லுகிறேன், கேளுங்கள். ஹைகோர்ட் ஜட்ஜ் சுந்தரமய்யங்காரைத் தெரியுமோ இல்லையோ?.... சொல்லும் சுப்பய்யரே! ஹைகோர்ட் ஜட்ஜ் சுந்தரமய்யங்காரை உமக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்...''

''பேஷாகத் தெரியும். ஹைகோர்ட் ஜட்ஜ் சுந்தரமய்யங்காரைத் தெரியாமலிருக்குமா?'' என்று பெரிய போடா கப் போட்டார் சுப்பய்யர்.

''ஓய்! சுப்பய்யரே! உம்முடைய குட்டு வெளியாகி விட்டது பார்த்தீரா? சுந்தரமய்யங்கார் என்று ஒரு ஹைக் கோர்ட் ஜட்ஜ் எந்தக் காலத்திலும் இருந்தது கிடையாது. நான் சொல்லுகிற ஜட்ஜின் பெயர் வேறே ஒன்று. 'பகலிலே பக்கம் பார்த்துப் பேசு, இராத்திரியிலே அதுவும் பேசாதே' என்று பழமொழி இருக்கிறதோ இல்லையோ? அதனாலேதான் ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாது என்று அசல் பெயருக்குப் பதிலாக ஒரு புனை பெயரைக் கற்பனை செய்து சொன்னேன். நீரும் ஏமாந்து போனீர்! இருக்



கட்டும்; ஹைகோர்ட் ஜட்ஜ் சுந்தரமய்யங்கார் ஒரு தர்மப் பள்ளிக்கூடத்துக்கு ஐயாயிரம் ரூபாய் நன்கொடை தருவதாக ஒப்புக் கொண்டார். கையெழுத்தும் போட்டார். பத்திரிகைகளிலே பெயரும் வெளியாகி விட்டது. ஆசாமி என்ன செய்தார் தெரியுமோ?.. நான் சொல்லுகிறேன், சுப்பய்யரே! நல்ல காரியங்களுக்குப் பணம் கொடுக்காதவன் நீசன். ஆனால், அவனையாவது ஒரு விதத்தில் சேர்த்துக் கொள்ளலாம். பணம் கொடுப்பதாகக் கையெழுத்துப் போட்டுவிட்டுக் கொடுக்காமல் டிமிக்கி கொடுக்கிறவன் பெரிய சண்டாளன். அவனையும் போனால் போகிறதென்று சேர்த்துக் கொள்ளலாம். நன்கொடை கொடுப்பதாகக் கையெழுத்துப்போட்டு விட்டு நல்ல பெயரை வாங்கிக்கொண்ட பிறகு பணத்தைக் கொடுக்காமல் செத்துப் போய்விடுகிறானே, அவன் அதமாதமன்! அவன் இந்த உலகத்தையும் ஏமாற்றிவிட்டுச் சொர்க்க லோகத்தையும் ஏமாற்றப் பார்க்கிறான். இந்த ஹைகோர்ட் ஜட்ஜ் சுந்தரமய்யங்கார் அந்த மாதிரி செய்து விட்டார். நன்கொடைப் பணத்தைக் கொடுக்காமல் ஆசாமி வைகுண்டத்துக்கே போய் விட்டார். கொஞ்ச நாள் கழித்து அவருடைய அருமைப் புதல்வனிடம் மேற்படி நன்கொடை விஷயமாகப் போயிருந்தோம். தகப்பனார் இருபது லட்ச ரூபாய்க்கு மேல் இந்தப் பையனுக்கு ஆஸ்தி சேர்த்து வைத்து விட்டுப் போயிருக்கிறார். தகப்பனார் கொடுத்த வாக்கைப் பிள்ளையாண்டான் நிறைவேற்றக் கூடாதோ? 'அதெல்லாம் முடியவே முடியாது' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான். பணம் கேட்கப் போன எங்களுக்கு ஒரேயடியாகக் கோபம் வந்து விட்டது. 'அப்பா லக்ஷ்மணா! நீ இப்படிக் கண்டிப்பாய்ச் சொல்வதாயிருந்தால் ஓர் ஏற்பாடு செய்கிறோம். **'ஹைகோர்ட் ஜட்ஜ் சுந்தரமய்யங்கார் வாக்குப் பரிபாலன நிதி'** என்பதாக ஒரு நிதி ஆரம்பிக்கிறோம். உன் தகப்பனாரிடம் நாங்கள் ரொம்ப மரியாதை உள்ளவர்கள். அவர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்கு ஏதாவது நாங்கள் முயற்சி செய்தாக வேண்டும்!' என்றோம். அதற்கு அந்தப் பிள்ளையாண்டான் என்ன சொன்னான், தெரியுமா? 'பேஷான ஏற்பாடு! அப்படியே செய்யுங்கள். அதற்கு என்னுடைய பூரண சம்மதத்தையும் அநுமதியையும் கொடுக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. அந்த நிதிக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு மேலே வசூலானால் அதிகப்படி தொகையை என்னிடம் சேர்ப்பித்து விடவேணும், தெரியுமா? என் தகப்பனாருக்கு நான் ஏகப் புத்திரன்; வேறு வாரிசு கிடையாது!' என்றான் அந்தக் கருமியின் மகன். நாங்கள் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பினோம். நான் சொல்கிறேன், சுப்பய்யர்வாள்! நிறையப் பணம் சம்பாதித்துத் தான தருமம் செய்யாமல் அப்படியே பணத்தை வைத்துவிட்டுப் போகிறார்களே, அவர்களுக்கெல்லாம் நிறைய மரண வரி போட்டுச் சொத்தைச் சர்க்காரே எடுத்துக்கொள்ளவேண்டும். ஒன்றரை லட்ச ரூபாய்க்கு மேலே உள்ள சொத்துக்களுக்கெல்லாம் முக்கால் பங்குக்குக் குறையாமல் வரி போட்டுச் சர்க்கார் எடுத்துக்கொண்டு விட வேண்டும்!'' என்று சொல்லிச் சாஸ்திரியார் கொஞ்சம் மூச்சுவிட நிறுத்தினார்.

சாஸ்திரியார் கடைசியில் சொன்ன வார்த்தைகளிலிருந்து அவருக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்து இருக்கிறது என்று ஊர்ஜிதப்படுத்திக் கொண்ட சுப்பய்யர் அர்த்த புஷ்டியுடன் கிட்டாவய்யரை ஒரு பார்வை பார்த்தார்.

இதைக் கவனித்த சாஸ்திரியார், உடனே, ''அதெல்லாம் இருக்கட்டும், சுப்பய்யரே! யாரையோ நீர் அழைத்து வந்திருக்கிறீர்; நான் வேறு என்னமோ பேசிக் கொண்டிருக்கிறேனே? இவர் யார், சொல்லவில்லையே? பார்த்தால் பெரிய மனுஷராகத் தோன்றுகிறது. காவேரி ஜலம் சாப்பிட்டு வளர்ந்தவர் என்று முகத்திலே எழுதி ஒட்டியிருக்கிறது. உண்டா, இல்லையா?'' என்று கேட்டார்.

''முன்னமே தங்களுக்குச் சொல்லியிருந்தேனே, ராஜம்பேட்டை பட்டாமணியம் என்று. அந்தக் கிட்டாவய்யர் தான் இவர்! நேரில் ஒரு தடவை வந்து விட்டுப் போகும்படி கடிதம் எழுதியிருந்தேன். வந்திருக்கிறார்!'' என்றார் சுப்பய்யர்.

''சுப்பய்யரே! நன்றாயிருக்கிறது! இவர் இன்னார் என்று முன்னமே சொல்லியிருக்கக் கூடாதோ? காரியமாக ஒருவரை அழைத்துக் கொண்டு வந்துவிட்டு இத்தனை நேரம் வெறும் வம்புப் பேச்சுப் பேசிக் கொண்டிருந்து விட்டீரே! போகட்டும். இவர்தான் ராஜம்பேட்டைப் பட்டாமணியமோ? நான் சொன்னேனே பார்த்தீரா? முகத்தில் காவேரி தீரத்தின் களை பிரகாசிக்கிறது என்று சொன்னேனா இல்லையோ? ரொம்ப சந்தோஷம்! இவர் தான் கிட்டாவய்யராக்கும்! பட்டாமணியம் உத்தியோகம் மட்டும்தானா?

இன்று—ராஜன் எடுத்த ரன்கள் 27. அடுத்து தங்கையுடன் சைக்கிள் சவாரி. பின் முடித்தது வீட்டுப்பாடம்.
இனி—அடிக்கப்போவது மாங்காய்.



"என்ன இருந்தாலும் 'ஹார்லிக்ஸ்' தரும் முழுமையான ஊட்டச்சிறப்பே தனி"

என்கிறாள் ராஜனின் தாய்.

முழு ஆடைப்பால், செழுமையான கோதுமை இவை தரும் நிறைவான பயனும் புரதச்சத்தும் நிரம்பியது 'ஹார்லிக்ஸ்'.

அன்றாட உணவில் விட்டுப்போகும் ஊட்டக்குறையை 'ஹார்லிக்ஸ்' ஈடுசெய்து உடலுக்கு உறுதியும் அதிக சக்தியும் அளிக்கிறது.

80 ஆண்டுகளுக்கும் மேலாக டாக்டர்கள் சிபாரிசு செய்து வரும் 'ஹார்லிக்ஸ்' தாய்மார்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது.


'ஹார்லிக்ஸ்' அருந்துங்கள். தரமான சத்தும் அதிக சக்தியும் அளிப்பது அதுவே.



முழுமையான ஊட்டம்பெற—'ஹார்லிக்ஸ்'

'ஹார்லிக்ஸ்' பதிவு பெற்ற டிரேட் மார்க்.

HL 2918A



விக்ஸ் வேபோரப் மூக்கு அடைப்பை உடனேபோக்குகிறது. தாராளமாக மூச்சுவிட உதவுகிறது. குழந்தை சுகமடைந்து நிம்மதியாகத் தூங்குகிறது.

விக்ஸ் வேபோரப்பின் சிறப்பு, அதை ஜலதோஷம் பிடிக்கும் இடங்களான மூக்கு, தொண்டை மார்பு, முதுகு இங்கெல்லாம் நேரடி யாகத்தடவலாம். ஜலதோஷத்தின் தொல்லைகளிலிருந்து குழந்தை உடனே நிவாரணம்பெறுகிறது. தாராளமாக மூச்சு விடுகிறது. சுகம் அடைகிறது.

விக்ஸ் வேபோரப் குணமளிப்பதன் காரணம் அது ஜலதோஷத்தை எதிர்த்து உள்ளும் புறமும் இரு வழிகளில் போராடுகிறது.

1 

உடம்பின் மேலே

2. 

உடம்பின் உள்ளே

1) விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்தால் ஏற்படும் உடல் வலியைப் போக்குகிறது.

2) வேபோரப் ஆவியாக மாற்றப்படுகிறது. இந்த ஆவியில் மருந்து இருக்கிறது. ஒவ்வொரு முறை சுவாசிக்கும்போதும் இது உள்ளே ஆழச்சென்று, மூக்கு அடைப்பைப் போக்குகிறது. தொண்டை கரகரப்பை நிறுத்துகிறது. மார்பு கபத்தை நீக்கு கிறது. ஜலதோஷத்தின் தொல்லைகள் மறைகின்றன.

முக்கியமான குறிப்புகள்

விரைவில் குணம்பெற விக்ஸ் வேபோரப்பை கணிசமாகத் தடவவும்—ஒரு ஸ்டாண்டர்ட் சைஸ் (19 கிராம்) ஜாடி குழந்தைக்கு ஏழு எட்டு முறையும், வயதுவந்தவருக்கு மூன்று நான்கு முறையும் தடவப் போதுமானது.



விரைவாக குணம்பெற, மூக்கு தொண்டை, மார்பு, முதுகு இங்கெல்லாம் விக்ஸ் வேபோரப்பை நன்கு தேயுங்கள். ஜலதோஷம் நீங்கும்வரை இதைத் தொடர்ந்து செய்துவரவும்.



12 கிராம் பெரிய டின்

ஜலதோஷத்திற்கு மருந்து விக்ஸ் வேபோரப்

ரிச்சர்ட்ஸன் ஹிந்துஸ்தான் லிமிடெட்டின் தயாரிப்பு.

அதற்கு மேலே நிலம் நீச்சு, கொடுக்கல் வாங்கல் ஏதாவது உண்டோ?''

''எல்லாம் உண்டு. அய்யர்வாளுக்கு அகண்ட காவேரிப் பாசனத்தில் அறுபது ஏக்கரா நன்செய் நிலம் இருக்கிறது; அவ்வளவும் இரு போகம்.''

''ரொம்ப சந்தோஷம். பண்ணையார் இவ்விடம் வந்த காரியம் என்னவோ? பட்டணம் பார்ப்பதற்காக வந்திருக்கிறாரோ?''

''பண்ணையார் முன்னமே பட்டணம் பார்த்திருக்கிறார். பம்பாய்கூடப் பார்த்திருக்கிறார். இப்போது வந்திருப்பது மாப்பிள்ளை பார்ப்பதற்காக!''

''ஓகோகோ! மாப்பிள்ளை பார்ப்பதற்காக வந்திருக்கிறாரா? பலே! பலே! இன்ஷியூரன்ஸ் வேலையோடே இந்த வேலையும் நீர் வைத்துக் கொண்டிருக்கிறீரா? இதுவரையில் எத்தனை வீட்டுக்கு அழைத்துப் போனீர்? எத்தனை மாப்பிள்ளைகளைக் காட்டினீர்? இந்த நவநாகரிக காலத்தில் 'மாப்பிள்ளை பீரோ' என்றும், 'கல்யாணக் கம்பெனி' என்றும் ஏற்படுத்தி யிருக்கிறார்களாமே? நீரும் அப்படி ஏதாவது கம்பெனி வைத்திருக்கிறீரோ?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை, ஐயர்வாள்! எனக்குத் தெரிந்தது இந்த ஒரே இடம்தான்! நேரே இவ்விடத்துக்குத்தான் இவரை அழைத்து வந்தேன். போன தடவை இந்த விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோது தாங்களும் வீட்டிலே அம்மாளும் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து பையனுக்குக் காட்டி விட்டால் தேவலை என்று சொன்னீர்கள்! ஞாபகம் இருக்கிறது அல்லவா?''

''ரொம்ப சரி; ஞாபகம் வருகிறது. இரைந்து பேசாதீர். மாடியிலே பையன் இருக்கிறான். அவன் காதிலே விழுந்து வைக்கப் போகிறது!.... என்னுடைய அபிப்பிராயம் அதுதான். இந்த விஷயத்திலே நான் கூடக் கொஞ்சம் 'மார்டன்' ஆசாமி என்றே வைத்துக் கொள்ளுங்கள். பிள்ளைக்குப் பெண்ணைப் பிடித்திருக்க வேணும். பெண்ணுக்குப் பிள்ளையைப் பிடித்திருக்க வேணும். அப்புறம் பையனாவது பெண்ணாவது, 'இப்படி என்னைக் கெடுத்து விட்டீர்களே!' என்று கேட்பதற்கு இடமிருக்கக் கூடாது. பெண் கண்ணைப் பிசைந்து கொண்டு நிற்கக் கூடாது. பிள்ளை முகத்தைத் துருத்திக் கொண்டு நிற்கக் கூடாது. சாஸ்திரமும் இதைத்தான் சொல்லுகிறது. இந்தக் காலத்திலே வரதட்சிணை, கிரதட்சிணை என்று சொல்கிறார்களே, அதெல்லாம் சுத்த



'நான்சென்ஸ்!' எனக்குப் பிடிக்கிறதேயில்லை. சாஸ்திரத்துக்குச் சர்வ விரோதம். நான்கூடப் பையனுக்கு வரதட்சிணை கேட்பதா யிருந்தால் 'முப்பதினாயிரத்தைக் கொண்டுவா!' 'ஐம்பதினாயிரத்தைக் கொண்டு வா!' என்று கேட்கலாம். ஒன்றுமில்லாத வறட்சிப் பயல்களெல்லாம் இந்தக் காலத்தில் அப்படிக் கேட்கிறார்கள். நம்முடைய யோக்கியதைக்கு அதெல்லாம் சரிக்கட்டி வருமா? என்னுடைய சமாசாரமே ஒரு தனி மாதிரி. எனக்குத் தர்மம் தான் பெரிது; பணம் பெரிதல்ல. இல்லாவிட்டால் இவ்வளவு காலம் உத்தியோகம் பார்த்துவிட்டு இப்போது இப்படிக் கடனாளியாக இருப்பேனா?

என்னைப் போல உத்தியோகம் பார்த்த வர்கள் இரண்டு கைகளையும் நீட்டி லஞ் சம் வாங்கி ஒவ்வொருவரும் நாலு வீடு ஐந்து வீடு கட்டி வாடகைக்கு விட் டிருக்கிறார்கள். நான் இந்த ஒரே ஒரு வீடு கட்டியிருக்கிறேன். இதற்கும் கடன் வாங்க வேண்டியிருந்தது. கோவாப ரேடிவ் சொஸைட்டிக்குக் கொடுக்க வேண்டிய கடன் பதினையாயிரம் ரூபாய் இன்னும் கொடுபடவில்லை. யாராவது பெண்ணைக் கொடுக்க வருகிறவர்கள் அந்தக் கடனை அடைத்து வீட்டை மீட் டால், அவர்களுடைய பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் நல்ல வீடாயிற்று. ஆனால், அது அவர்களுடைய இஷ்டம். என்னைப் பொறுத்தவரையில் வரதட் சிணை என்று காலணா கைநீட்டி வாங்க மாட்டேன்.''

சுப்பய்யர் குறுக்கிட்டு ''ஐயர்வாள்! அதைப் பற்றி யெல்லாம் நீங்கள் பேச வேண்டியதேயில்லை. பெண்ணின் கல் யாணத்துக்கென்று கிட்டாவய்யர் முப் பதினாயிரம் ரூபாய் எடுத்து வைத்து விட்டார். லௌகிக விஷயங்கள் எல் லாம் ஒரு குறைவும் இல்லாமல் திருப்தி கரமாய் நடந்துவிடும்...'' என்றார்.

''லௌகிகம் கிடக்கட்டும், ஐயா, லௌகிகம்! கல்யாணம் என்பது பரம வைதிக விஷயம். அக்கினி சாட்சியாக விவாகம் செய்து கொண்ட பிறகுதான் பிராமணனுக்கு வைதிகக் கிரியைகள் செய்ய உரிமைகள் ஏற்படுகிறது. ஆனால் பிள்ளையையும் பெண்ணையும் கேட்கா மல் கல்யாணம் நிச்சயம் செய்யும் காலம் போய்விட்டது. பிள்ளைக்குப் பெண்ணைப் பிடித்திருக்க வேண்டும்; பெண்ணுக்குப் பிள்ளையைப் பிடித் திருக்க வேண்டும். அதுதான் முக்கிய மான விஷயம். பண்ணையார் கல்யா ணப் பெண்ணையும் அழைத்து வந் திருக்கிறாரோ?''

இத்தனை நேரமும் வாய் திறக்க வழி யில்லாமல் உட்கார்ந்திருந்த கிட்டா வய்யர் இப்போது கொஞ்சம் தைரிய மடைந்து, ''அழைத்து வரலாம் என்று தான் எண்ணி யிருந்தேன். அதற்கு இந்தத் தடவை சௌகரியம் இல்லாமல் போய்விட்டது. என்னுடைய தங்கை பம்பாயில் இருக்கிறாள். அவளுக்குக் கொஞ்சம் உடம்பு அசௌகரியம் என்று கடிதம் வந்தது. அவளைப் பார்ப்பதற்காக பம்பாய் போகிறேன். தாங்கள் சொன் னால் பம்பாயிலிருந்து திரும்பி வந்ததும் கிராமத்துக்குப் போய்க் குழந்தையை அழைத்து வருகிறேன்!'' என்றார்.

''அதற்கென்ன? சௌகரியம்போல் செய்யுங்கள். அவசரம் ஒன்றுமில்லை. இப்போதுதானே தை பிறந்திருக்கிறது? ஆனால் பிள்ளையாண்டானுக்கு ரஜா முடிவதற்குள் கல்யாணம் நடந்தாக வேண்டும். அதிகமாய்த் தாமதிக்க இடமில்லை. பையனுடைய தாயார் வேறு ரொம்ப அவசரப்படுகிறாள்!.... கையிலே முப்பது ஜாதகம் வைத்துக் கொண்டிருக்கிறாள். தினம் ஜோசியரை வரவழைப்பதும் பொருத்தம் பார்ப் பதும்தான் அவளுக்கு இரண்டு மாத மாக வேலை. காமாட்சி! இங்கே கொஞ் சம் வந்துவிட்டுப் போ!'' என்று சாஸ் திரிகள் சத்தம் போட்டுக் கூவினார்.


10. காமாட்சி அம்மாள்

வீட்டின் பின்கட்டிலிருந்து ''இதோ வந்துவிட்டேன்'' என்று ஸ்திரீயின் குரல் கேட்டது. சாஸ்திரிகள், ''வா! வா! நீ வந்தால்தான் விஷயம் முடி வாகும்!'' என்று உரத்துக் கூவினார்.

மறுபடியும் சுப்பய்யரைப் பார்த்து சாஸ்திரிகள் கூறினார்: ''இந்தக் 'கல் யாண டிபார்ட்மெண்டை' நான் அகத் துக்காரியிடமே ஒப்படைத்து விட்டேன். காமாட்சியைப் போல் பரம சாதுவை இந்தத் தேசத்திலே பார்க்க முடியாது. நான் படுத்திய பாட்டை யெல்லாம் பொறுத்துக் கொண்டு இத்தனை நாள் காலம் தள்ளி யிருக்கிறாளே, இதி லிருந்தே தெரியவில்லையா?''

''போதுமே! நம்ம வீட்டுக் கதையை யெல்லாம் யாரோ வந்தவர்களிடம் சொல்வானேன்?'' என்று கூறிக் கொண்டே அந்தச் சமயம் ஸ்ரீமதி காமாட்சி அம்மாள் அங்கு வந்து சேர்ந் தாள். அவளைப் பார்த்தவுடனேயே — தாரிணியின் கடிதத்தில் அந்த அம்மா ளைப்பற்றி வருணித்திருந்தது முற்றிலும் சரியென்று நமக்குத் தோன்றும். நெற் றியில் பெரிய குங்குமப் பொட்டும், முகத்தில் சாந்தமும், கண்களில் பிர காசமும், குடித்தனப்பாங்கான நடை உடை பாவனைகளும் அந்த அம்மாளை நல்ல குடிப்பிறப்புக்கும் தெய்வ பக்திக் கும் இந்து தர்மத்தின் பண்பாட்டுக் கும் சிறந்த பிரதிநிதி என்று தோன்றச் செய்தன.

அந்த அம்மாளைப் பார்த்துச் சுப் பய்யர், ''வாருங்கோ, அம்மா! இவ் விடம் 'யாரோ' ஒருவருமில்லை. நான் தான் வந்திருக்கிறேன்; இதோ இந்தப் பிராமணர், நான் சொன்னேனே, அந்த



Shilpi JI-1A/72 tam



பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதிவேலையைத்தான் செய்யும்
*
இன்க்ரிமின் பெறுவீர்..
உண்ணும் மிகையான உணவை
ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
*
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே !
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமி . . னிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச்சத்து அடங்கிய ▶ இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி. இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் — 10 மிலி.
Incremin syrup
* இன்க்ரிமின்
டானிக்
* அமெரிக்கன் ஸையனமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
எல்லா மருந்துக்
கடைகளிலும் கிடைக்கின்றன.
லின்டாஸ்–INC. 21-140 TM

ராஜம்பேட்டை கிராம முன்சீப் கிட்டா வய்யர்!'' என்றார்.

''சந்தோஷம்! குழந்தையையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாரோ?'' என்று காமாட்சி அம்மாள் கேட்டாள்.

''இந்தத் தடவை அழைத்து வரவில்லை. இவருடைய தங்கைக்கு பம்பாயில் உடம்பு சரியில்லை என்று கடிதம் வந்திருக்கிறது. அதற்காக பம்பாய் போகிறார். திரும்பி வந்ததும் தாங்கள் சொன்னால் குழந்தையைக் கூட்டிக் கொண்டு வருவதாகச் சொல்கிறார். ஜாதகம் கொண்டுவந்திருக்கிறார். ஜாதகம் பொருத்தமாயிருந்து மற்ற எல்லா விஷயங்களும் பேசித் திருப்திகரமாக முடிந்துவிட்டால் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வருவதில் என்ன கஷ்டம் இருக்கப் போகிறது? சென்னைப் பட்டணம் என்ன காடா, பாலைவனமா? நான் ஒருவன் இங்கே இருக்கிறேனே இல்லையோ? குழந்தையைப் பட்டணம் பார்ப்பதற்கு என்று அழைத்து வந்தாலும் போச்சு! மற்ற விஷயங்கள் எல்லாம் பேசி முடித்தால்...''

''மற்ற விஷயங்கள் பேசுவதற்கு என்ன இருக்கிறது? உங்களுக்கு எது இஷ்டமோ எப்படி இஷ்டமோ அப்படிச் செய்யுங்கள்! பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து காட்டிப் பையனுக்குப் பிடித்துப்போய்விட்டால், அப்புறம் ஒரு பேச்சும் வேண்டியதில்லை. கல்யாணத்துக்கு முகூர்த்தம் வைக்கவேண்டியதுதான்'' என்றாள் காமாட்சி அம்மாள்.

இப்படி அவள் சொல்லி வாய் மூடும் சமயத்தில் மேல் மாடியிலிருந்து மச்சுப் படி வழியாக யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்டது.

இறங்கி வந்தவன் நம் கதாநாயகன் ராகவன்தான். சற்று முன்னால் கவலையும் வேதனையும் குடிகொண்டிருந்த அவனுடைய முகத்தில் மேற்படி கல்யாணப் பேச்சு இலேசான புன்னகையை உண்டாக்கியிருந்தது.

மச்சுப் படியில் சத்தம் கேட்டதும் கீழே பேசிக் கொண்டிருந்த நாலு பேருடைய கண்களும் அந்தப் பக்கம் நோக்கின. இறங்கி வருகிறவன் ராகவன் என்று அறிந்ததும் அவனுடைய பெற்றோர்களின் நெஞ்சில் சிறிது துணுக்கம் உண்டாயிற்று. 'ஏதாவது நாம் பிசகாகப் பேசிவிட்டோமோ? இதன் காரணமாக ஒருவேளை உத்தேசித்த காரியம் கெட்டுப் போய்விடுமோ?' என்ற கவலை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

இறங்கி வந்த பையனைக் கிட்டாவய்யர் கண்கொட்டாத ஆர்வத்துடன் பார்த்தார். அவனுடைய கம்பீரமான தோற்றமும், சுந்தரமான முகமும், அந்த முகத்தில் ஒளி வீசிய அறிவின் களையும் கிட்டாவய்யரின் மனத்தைக் கவர்ந்தன. 'இந்தப் பையன் மாப்பிள்ளையாகக் கிடைத்தால் நம்முடைய பாக்கியந்தான்; லலிதா அதிர்ஷ்டசாலிதான்!' என்று அவர் எண்ணிக் கொண்டார்.

ராகவன் கீழ் மச்சுப் படிக்கு வந்து தரையில் இறங்கும்வரையில் மௌனம் குடிகொண்டிருந்தது.

நாலு பேரையும் பொதுப்படையாக ஒரு முறை ராகவன் பார்த்துவிட்டு, ''ஏதோ கலியாணம் நிச்சயம் செய்து கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது!'' என்றான்.


''ஏதோ கல்யாணமாவது? உன்னுடைய கல்யாணத்தைப் பற்றித்

ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவாளின் இரட்டைமா நகர் விஜயத்தின்போது ஜகத்குரு திரு முன்னிலையில் 1968ல் செகந்திராபாத் ஸ்கந்த கிரி மலை அடிவாரத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மந்திர் பிரதிஷ்டையும், கும்பாபிஷேகமும் நடைபெற்றன. ஆதிசங்கரர் பாதுகை கர்ப்பக்கிருகத்தில் விளங்க, விமானம், பிராகாரம், முன்மண்டபம் கூடிய மந்திர் ரூ. 51,000 செலவில் பொதுஜனங்கள் ஆதரவுடன் கட்டி முடிக்கப் பெற்றது. நித்ய பூஜையுடன் மாதாந்திர பிரதோஷம் சிவராத்திரி, ஆவஹந்தி ஹோமம், தனுர்மாச பூஜை, சங்கர ஜயந்தி, பெரியவாள் ஜயந்தி முதலியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இன்னும் கல்யாண மண்டபம், பூசிப்பவர் விடுதி முதலியன பூர்த்தியாக வேண்டும். அதற்கும் நித்ய பூஜைக்கும் பக்தர்கள் பெருமளவில் உதவி புரிய வேண்டுகிறோம். மாதாந்திர நக்ஷத்திர பூஜை செய்ய வருஷம் ரூ. 15.

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மந்திர், ஸ்கந்த கிரி, செகந்திராபாத் - 25.

ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கர மந்திர், செகந்திராபாத்





காவலுக்குக் குளவி

தென், மத்திய அமெரிக்காவில் வாழும் ஒருவகை மாங்குயில்கள், நமது தூக்கணாங்குருவியைப்போல் தொங்கும் கூடுகள் கட்டுகின்றன. கூட்டில் உள்ள முட்டைகளையும் குஞ்சுகளையும் தின்னப் பல பிராணிகள் சமயம் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும். எனவே முட்டைகளையும் குஞ்சுகளையும் தனியே கூட்டில் விட்டு விட்டு இரை தேடப் போவது இந்த மாங்குயில்களுக்குப் பெரும் பிரச்னை ஆகிவிடுகிறது. இந்தப் பிரச்னையைச் சமாளிக்க இப்பறவைகள் நல்லதொரு யுக்தி கண்டுபிடித்து வைத்துள்ளன.

குளவிக் கூடுகள் உள்ள ஒருசில மரங்களில் மட்டுமே இவை தங்களது கூடுகளை அமைக்கின்றன. இதனால் கூட்டுக்கு நல்ல காவல். ஏனெனில் எதிரிகள் இக்கூடுகளை நெருங்கி வர, குளவிகளைத் தாண்டித்தான் ஆகவேண்டும். மாங்குயில்கள் கிளைகளில் கூடு கட்டி வசிப்பதைக் குளவிகள் பொருட்படுத்துவதில்லை. ஆனால் மரமேறித் தங்கள் வீட்டைத் தாண்ட முனையும் பிராணிகளைக் கடும் கோபத்துடன் அவை கொட்டி விரட்டி விடுகின்றன. - பத்மா ராஜகோபால்

தான் பேசிக் கொண்டிருக்கிறோம்!'' என்று சாஸ்திரிகள் தைரியமாக ஒரு போடு போட்டார். அந்நியர்களின் முன்னிலையில் ராகவன் மரியாதையாகப் பேசுவான் என்பது அவருக்கு நன்கு தெரிந்த விஷயம்.

''ஓகோ! அப்படியா சமாசாரம்? என்னைக் கேட்காமலே எனக்குக் கல்யாணம் செய்துவிடுவதாக உத்தேசமா?'' என்றான்.

''நன்றாயிருக்கிறது! உன்னைக் கேட்காமல் நிச்சயம் செய்கிறதா? எங்களை என்ன அப்படி நினைத்து விட்டாய், ராகவா?'' என்றார் சாஸ்திரிகள்.

''எல்லாம் உன்னைக் கேட்டுக் கொண்டு உன் அபிப்பிராயப்படி செய்வதாகவே உத்தேசம், குழந்தை! கல்யாணம் என்பது சாதாரண விஷயமா? இன்றைக்குச் செய்து நாளைக்கு மாற்றக் கூடிய காரியமா? உன்னைக் கேட்காமல் தீர்மானிப்பதற்கு நீ என்ன பச்சைக் குழந்தையா?'' என்றாள் காமாட்சி அம்மாள்.

''இந்தக் காலத்திலே பச்சைக் குழந்தையைக் கூடக் கல்யாண விஷயத்திலே கட்டாயப்படுத்த முடிகிறதில்லை! பத்து வயதுப் பெண் குழந்தை, 'எனக்கு இந்த ஆம்படையான் வேண்டாம்' என்று துணிச்சலாகச் சொல்லுகிறது'' என்றார் சுப்பய்யர்.


இதைக் கேட்டுவிட்டு எல்லோரும் சிரித்தார்கள். ராகவனுடைய முகம் கூட மலர்ந்தது.

அந்தச் சந்தோஷமான சந்தர்ப்பம் பார்த்துச் சாஸ்திரிகள் கூறியதாவது:

'' வெறுமனே சுற்றி வளைத்துக் கொண்டிருப்பானேன்? விஷயத்தைச் சொல்லிவிட்டால் போச்சு! ராகவா! நம்ம சுப்பய்யர் முன்னொரு தடவை சொன்னாரல்லவா? அந்த ராஜம்பேட்டைப் பண்ணையார் இவர்தான். பெண்ணுக்கு வரன் பார்க்க வந்திருக்கிறார். உன்னைக் கூப்பிடலாம் என்று நாங்கள் யோசனை பண்ணிக் கொண்டிருக்கும்போது நீயே வந்து விட்டாய். உன் அபிப்பிராயத்தைச் சொல்லிவிடு. பாக்கி விஷயங்கள் எல்லாம் 'ஸெட்டில்' ஆகி விட்டால் பெண்ணை இங்கேயே அழைத்துக் கொண்டு வந்து காட்டுவதாகச் சொல்கிறார். நல்ல குணம், நல்ல கோத்திரம். எனக்கும் உன் அம்மாவுக்கும் ரொம்பப் பிடித்தமான சம்பந்தம். ஆனால் எங்களுக்குப் பிடித்திருந்து என்ன பிரயோஜனம்? கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவன் நீ அல்லவா? பெண்ணை அழைத்துக் கொண்டு வரும்படி சொல்லி அனுப்பலாமா? உன் அபிப்பிராயம் என்னவோ சொல்லிவிடு! வெறுமனே இவர்களை அலைக்கழிப்பதில் பிரயோஜனமில்லை. உண்டு என்றால் உண்டு என்று சொல்ல வேண்டும்; இல்லை என்றால் இல்லை என்று சொல்லிவிடவேண்டும்.''

ராகவனுடைய முகத்தில் இருந்த புன்னகை மறைந்தது; கடுகடுப்புத் தோன்றியது. தகப்பனார் பேச ஆரம்பித்தவுடன் தலையைக் குனிந்துகொண்டவன் இப்போது தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தான். ''அப்பா! நான் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தால் இவர்களுடைய ஊருக்கு நானே போய்ப் பெண்ணைப் பார்த்துக்கொள்கிறேன். இங்கே அழைத்துக்கொண்டு வரவேண்டாம்!'' என்றான். (தொடரும்)

புதுமையின் பொலிவுக்கு
ஹமாம்



நாள்தோறும் ஹமாம் தேய்த்துக் குளியுங்கள்.
ஹமாம் தரும் நறுமணமுள்ள நுரை உங்கள்
சருமத்தை சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சி
யையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு
கவர்ச்சியான மெருகையும் ஊட்டுகிறது.
நெடுங்காலம்...நீடித்திருக்கும் ஹமாம்
டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.

அதிக காலம் நீடித்துழைக்கும் டாய்லெட் சோப்

டாடா
தயாரிப்பு

CMTH-14-203 TAM



திறமையற்ற கோழை போல எதற்கும் புறப் பெண்ணின் உதவியை நாடக்கூடாது என்ற முடிவுடன் பார்த்திபன் கடற்கரையை நோக்கிக் கிளம்பினான்.
என்ன பேய்க்காற்று? என்னையே கொண்டு போய் விடும் போலி ருக்கிறதே...
முடிவில்லாப் பிரயாணம். புயலால் ஆடைகள் கந்தலாயின. கடற்கரையோ தென்படவில்லை. பசியால் களைத்துப் போனான்.
பசி..பசி..பசி! எதையாவது சாப்பிட்டே தீர வேண் டும். இல்லா விடில் பைத்தியம் பிடித்து விடும்.
பசியால் மயக்கமடைந்து விழுந்த பார்த்திபனுக்கு மறுபடி நினைவு திரும்பிய போது புதிய தெம்புடன் விழித்தான். அப்போது தூரத்திலே...
அதோ ஒரு மலை ஆடு... என் பசிக்கு ஆண்டவனே அனுப்பி இருக்கிறார்.
உன்னை விட மாட்டேன்...நீ எங்கு ஓடி னாலும் சரி!
பார்த்திபனின் பசி வெறி மலையாட்டின் வேகத் துக்கு அவனை ஓட வைத்தது.
பாறைக்குப் பாறை தாவி ஓடிய ஆட்டைத் துரத்தி வந்த பார்த்திபனால் அதன் வேகத் துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. அதன் விளைவு...



என் வாழ்நாள் இன்றோடு முடிந்தது. நான் கீழே கீழே போய்க் கொண்டிருக்கிறேன். என் உடல் பாறையில் மோதி...
பார்த்திபனின் உடல் கீழே விழுந்த போது பாறையில் மோதவில்லை. இவனுக்கு முன்னால் கால் தவறிக் கீழே விழுந்து கிடந்த மிருதுவான மெத்தென்ற மலையாட்டின் உயிரற்ற உடல் மீது தான் அவன் விழுந்தான்.
மணிப்புற மங்கையே! என்னை மன்னித்து விடு. உன் உதவி இல்லாமல் என்னால் வெற்றி பெற முடியாது. 'புவனா, புவனா பறந்து வா, என் உதவிக்கு!'
பார்த்திபனின் பரிதாபமான அழைப்புக்கு இனிமையான சிரிப்பொலி கேட்டது எங்கிருந்தோ. அடுத்த வினாடி...
இளவரசே! மனந்தளர வேண்டாம். நீங்கள் வீரத்தில் குறைந்தவரில்லை. அந்த ஆடு என் அப்பாவினால் அனுப்பப்பட்ட மந்திர ஆடு.
உங்களை அலைக் கழித்துக் கொல்லுவதே அதன் நோக்கம். ஆனால் நீங்கள் அறியாமல் உங்களைத் தொடர்ந்து வந்த நான் தான் அதை மாய்த்து உங்களைக் காப்பாற்றினேன்.


கடற்கரையையே அடைய முடியாது என்றால் எப்படி...?
ஹ...ஹ...ஹா! நீங்கள் கடற்கரையில் தானிருக்கிறீர்கள். கண்களை ஒரு முறை மூடித் திறந்து பாருங்கள்.
ஆமாம்! கடற்கரை தான். அதோ ஒரு படகு கூட மிதக்கிறதே... இது என்ன மாயா ஜாலம்...?
சசாங்கனின் ஆட்சியில் மாயா ஜாலங்களுக்குப் பஞ்சமேது? இந்தக் கிண்ணத்தையும் கத்தியையும் எடுத்துக் கொண்டு அந்தப் படகில் போய் உட்காருங்கள். அதன் பிறகு செய்ய வேண்டியதைச் சொல்லுகிறேன்.
என்னைப் பிடித்து அந்தக் கத்தியால் என் தலையை வெட்டுங்கள். ஒரு சொட்டு ரத்தமும் கீழே விழாமல் அந்தக் கிண்ணத்தில் ஏந்திக் கொள்ளுங்கள். பிறகு என் உடலையும் தலையையும் கடலில் வீசி எறியுங்கள்.
ஐயோ, புவனா இது என்ன பயங்கரமான செயல்? என்னால் உன்னைக் கொல்ல முடியாது.
என்னைக் கொல்லாவிடில் உங்களுக்கு வாழ்வே கிடையாது. சொன்னபடி செய்யுங்கள். படகை கடுக் கடலுக்குச் செலுத்துங்கள்.
பார்த்திபன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு புவனா சொன்னபடி செய்தான்.
என் அருமைப் புவனாவை என் கைகளாலேயே... ஐயோ, இது கொடுமை.. கொடுமை...

தொடரும்


இடுக்கண்
களைந்திடும் நட்பு போல்

"ஜெய்பங்களா!"


கே. ஸ்ரீநிவாசன்





2. புயலுக்குப்பின் டாக்கா நகரம்

டாக்காவின் விமான கூடத்தில் விமானங்கள் ஓடும் தளத்தைப் பார்த்தால் இந்திய விமானப் படையில் உள்ள விமானிகள் சந்தேகமில்லாமல் அசகாய சூரர்கள் என்பது விளங்கும். ஏனென்றால் குறி பார்த்து 'ரன்வே' பாதையை ராக்கெட்டுகளால் தாக்கி விமானங்கள் அங்கிருந்து கிளம்புவதோ அல்லது இறங்குவதோ சாத்தியமில்லாமல் செய்து விட்டார்கள், இந்திய விமானிகள். பெருமாள் மாட்டின் மேல் பலவிதமான துணிகளால் ஒட்டுப் போட்ட போர்வை



போர்த்தப்பட்டது போல் இன்று விமானங்கள் ஓடும் பாதை பல டஜன் இடங்களில் செப்பனிடப்பட்டுப் புதிய தார்ப் பூச்சும் தெரிகிறது.

''உங்கள் ராணுவமும், ஆகாய விமானப் படையும் கடற்படையும் வெகு சாமர்த்தியமாகச் செயற்பட்டதால்தான் டாக்கா நகரத்தில் எவ்வித சேதமும் கிடையாது. நீங்களே நகரத்தைச் சுற்றிப் பாருங்கள்'' என்றார் வங்க தேச விமானகூட ஊழியர். சின்னஞ்சிறுவர்கள் முன்பின் பழக்கமில்லாத வேலையில் வெகு உற்சாகத்துடன் ஈடுபட்டு வேலை செய்கிறார்கள்.

'பாஸ்போர்ட்' என்ற சர்வதேசப் பிரயாணப் புத்தகத்தில் அதைக் கொடுக்கும் நாட்டின் முத்திரைகளும் பிரயாணி மற்ற நாடுகளில் இறங்கியதும் குத்தப்பட்ட அந்தந்த நாடுகளின் முத்திரைகளும் இருக்கும். 'டாக்காவுக்குச் செல்லும் இந்தியர்கள் பாஸ்போர்ட் கொண்டு செல்ல வேண்டும்' என்று இந்திய அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது. இதற்குக் காரணம் இந்தியாவிலிருந்து இந்திய வர்த்தகர்கள் வங்க தேசத்தின் மேல் படையெடுக்கக் கூடாது என்பது ஒன்று. மற்றொன்று, வங்க தேசத்தில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்த பாவிகள் — ரஜாக்கர்களும் அல்பாதர் ஸ்தாபனத்தாரும் — முக்தி வாஹினிக்குப் பயந்து இந்தியாவுக்குள் புகுந்துவிட முயற்சி செய்கிறார்கள். இதற்கு இடம் கொடுக்கக் கூடாது அல்லவா?

என் பாஸ்போர்ட்டை வாங்கிப் பார்த்த அப்துல் அஜீஸ் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார். அன்றுதான் அவர் வேலைக்கு வந்தவர். நான் எங்கு முத்திரை குத்தப்பட வேண்டும் என்று காட்டினேன். அவருக்கு ஆனந்தம். ''நாங்கள் வேலைக்குப் புதிது. சீக்கிரம் வேலையைத் தெரிந்துகொண்டுவிடுவோம்'' என்றார். மனம் இருந்தால் வழியுண்டு. தேவையானால் இரவு பகல் என்று பார்க்காமல் உழைக்கத் தயாராக இருக்கிறார்கள் இவர்கள்.

பாகிஸ்தானிகள் வெகுவாக நல்ல உத்தியோகங்களைச் சுருட்டிக் கொண்டு அல்ப வேலை வாய்ப்புக்களை மட்டுமே வங்காளிகளுக்குக் கொடுத்திருந்தார்கள். ஆகாய விமானப்


★ (மேலே) வங்கதேச அதிபர் ஜஸ்டிஸ் அபுஸயீத் சௌத்ரி.

★ பிரதமர் முஜிபுர் ரஹ்மான்.

★ (இடமே) முஜிபுர் ரஹ்மான் இல்லம் பாகிஸ்தான் 'பங்க'ரோடு!

★ இன்டர்கான்டினென்டல் ஹோட்டல்.





போக்குவரத்து பஞ்சாபி முஸ்லிம்களின் காணியாட்சி.

டாக்கா விமானக்கூடக் கட்டடம் கார் விபத்தில் சிக்கிய நபரைப் போல் தோன்றுகிறது. எப்படிக் கட்டடம் நிற்கிறது என்பதே ஆச்சரியம். விமானங்கள் ஓடும் தளத்தின் மேல் வீசிய ராக்கெட்டுகளின் அதிர்ச்சி காரணமாகச் சுவர்கள் அலர்ந்து நிற்கின்றன. விளக்குகளின் ரசகுண்டு போர்வைகள் சுக்குச் சுக்காகிவிட்டன. கதவுகள் நிலைகளிலிருந்து பறந்து விட்டன. டாக்கா விமானக்கூடம் இன்று வெகு தாற்காலிக ஏற்பாடுகளுடன் இயங்குகிறது. ''பரவாயில்லை. இப்பொழுது எங்களை அங்கீகரித்த நாடுகளின் விமானங்கள்தானே வந்து போகும்'' என்றார் விமானக் கூட தலைமை அதிகாரி. உண்மைதான்.



★ (மேலே) புனர்வாழ்வு மந்திரி சாமருஜ்ஜமான்.

★ கல்வி மந்திரி யுஸுஃப் அலி.

★ நிதி, திட்ட மந்திரி டாஜுஃடின் அகமத்.

★ உணவு மந்திரி பனி மஜுஃம்தார். இவர் ஒரு ஹிந்து.

★ அயல்நாட்டு மந்திரி அப்துல் ஸமாத் ஆஜாத்.


★ இந்திய எம். ஐ. ஜி. விமானங்கள் போரிடப் புறப்படுகின்றன.


★ (கீழே) பங்களா தேஷ் பிரதமருக்கு வரவேற்பு வளைவு.

எந்த நாட்டிலும் பொதுப் போக்குவரத்திலிருந்து அதன் பொருளாதாரம் தெளிவாகும். அமெரிக்காவில் ஒய்யார பியூக் கார்கள் டாக்ஸிகள். சொத்தை பாங்காக்கில் கூட 'பென் மெர்ஸிடிஸ்' டாக்ஸிகள். இந்தியாவில் லொடலொடா கோரங்கள் டாக்ஸிகள்.

டாக்கா விமானக் கூடத்தில் பல டஜன் சைக்கிள் ரிக்ஷாக்களே தென்பட்டன. தகர டப்பாக்களைப் போல் நான்கு ''டாக்ஸி''கள் இருந்தன. ''இன்டர்காண்டினென்டல் ஹோட்டலுக்கு எவ்வளவு?'' என்று கேட்டேன்.

'' டாக்ஸிக்குள் உட்கார்ந்து விடுங்கள். இல்லாவிட்டால் இதுவும் போய்விடும்'' என்றார் அப்துல் அஜீஸ். அவருடைய வற்புறுத்தலின் பேரில் இருபத்தைந்து ரூபாய் கேட்ட டாக்ஸி டிரைவர் பதினைந்து ரூபாய் வாங்கிக் கொள்ள இசைந்தார். விமான கூடத்துக்கும் ஹோட்டலுக்குமிடையே ஐந்து





மைல்கள்கூட இல்லை என்பதை ஞாபகப் படுத்துகிறேன்.

டாக்ஸிகள் என்றதும் ஒரு விஷயத்தை உடனே சொல்ல வேண்டும். பாகிஸ்தானில் கார்கள் தயாரிக்கப்படாததால் கார்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டன. ஜப்பானிய டோயோடா, ஜெர்மன் போக்ஸ்வாகன் பிரிட்டிஷ் மாரிஸ் கார்கள் ஆயிரக்கணக்கில் இருந்தனவாம். சென்ற வருடம் மார்ச்சு மாதம் வங்க தேசத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே மோதல் ஏற் பட்டதும் பாகிஸ்தானிகள் நாலாயிரம் கார் களுக்கு மேல் கப்பல்களில் கராச்சிக்குக் கொண்டு போய்விட்டார்களாம். எஞ்சியதில் அடிபட்டு உயிர் போனவைதாம் இன்று டாக்ஸிகள்.

நான் ஏறிய டாக்ஸிக்குக் கதவுகள் இருந் தன. ஆனால் தாழ்ப்பாள் இல்லை. ஆதலால், ஒரு சிறுவன் கதவைக் கையால் பிடித்துக் கொண்டே வந்தான். வழியில் பல இடங் களில் கொளுத்தப்பட்ட கார்களின் சடலங் களும் வீடுகளின் சுவர்களும் பரிதாபமாக நின்றன. அவைகளுக்கு வாய் இருந்தால் அவை கவி தாகூரைப்போல் அவற்றின் குறைகளை வாய்விட்டுச் சொல்லிக் கவிதை புனைந்திருக்கும்.

பாகிஸ்தான் துருப்புக்கள் பாரபட்ச மற்றவை. பொதுமக்களின் கார்களைக் கொளுத்தியவர்கள் ஷேக் முஜிபுர் ரஹிமானின் பத்திரிகாலயத்தில் இருந்த கார்களையும் கொளுத்தியுள்ளார்கள். ''மக்கள்'' என்ற அவருடைய பத்திரிகாலயம் வழியில் இருந் தது. கட்டடம் முழுவதும் தீக்கிரையாகியுள் ளது. கட்டடத்தைச் சுற்றிக் காட்டிய



இளைஞர் ஓர் அறையில் உள்ளதை வெளியே இருந்து பார்க்கும்படி சொன்னார். எட்டிப் பார்த்தேன். ஒரு மண்டையோடும், எலும்பு களும் கிடந்தன. ''பத்திரிகாலயத்தைக் கொளுத்தியபோது இந்த ஊழியர் உள்ளே மாட்டிக் கொண்டு விட்டார். அவர் ஜுவாலைக்குள் புகுந்து வெளியே வர முயன் றார். ஜன்னல் பக்கம் வந்ததும் ஒரு பாகிஸ் தானி ஜவான் அவரைத் துப்பாக்கிக் கட்டை யால் அடித்து உள்ளே தள்ளினார். அவர் மாண்டார்'' என்று தம் சகாவின் பரிதாப முடிவைப் பற்றிச் சொன்னவர் தேம்பித் தேம்பி அழுதார்.

பாகிஸ்தான் ராணுவம் செய்த அட்டூழி யங்களைப் பற்றி என் வாழ்நாள் முழுதும் கதைகள் எழுதுவதுபோல் எழுதலாம். அவ் வளவு சம்பவங்களைக் கேட்டு விட்டேன். டாக்கா கிளப்பில் என் பத்திரிகை சகா பல நாட்களாகத் தங்கியுள்ளார். அவர் தம் அறைக்கு வெளியே மூலையில் பல சடலங்கள் புதைக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்.

பீஹாரி முஸ்லிம்களுடைய நலம் பற்றி இன்று பலர் கண்ணீர்விடுகிறார்களே அவர்கள், இந்தச் சமூகத்தார் கிழக்கு வங்காளிகள் மேல் இழைத்துள்ள அநீதிகளைக் கேட்டால் அவர்களுடைய நலனுக்கு வக்காலத்து வாங் கிப் பேசமாட்டார்கள். என் சகா சொன் னார்: ''இங்கு புதைக்கப்பட்டுள்ளவர்கள் யார் தெரியுமா? அவாமி லீக் இளைஞர்கள். அவர்களைக் கும்பலாக பீஹாரி முஸ்லிம்கள் அழைத்து வந்து பாகிஸ்தான் ராணுவத்தா ரிடம் ஒப்படைத்தார்கள். பாக் ராணுவத் தார் காலம் தாழ்த்துவதில்லை. ஆளுக்கு ஒரு வேட்டு. கதை முடிந்தது.''

இன்று டாக்கா கிளப் நிர்வாகிகள் முக்தி வாஹினி இளைஞர்கள் தங்களை ஒழித்துக் கட்டிவிடுவார்களோ என்று அஞ்சுகிறார்கள். குற்றம் உள்ள நெஞ்சம் அல்லவா? ஆனால் அம்மாதிரி பழிக்குப் பழி வாங்கப்படவில்லை என்றால் அதற்குக் காரணம் வங்கபந்துவின் புத்திமதியே. ''தனிப்பட்ட முறையில் கொலைகள் கூடாது. குற்றவாளிகள் யார் என்று ஜாபிதா தயாரித்து அவர்களை நீதி மன்றத்தில் தண்டிப்போம்'' என்கிறார் வங்க பந்து.

டாக்கா நகரம் விரைவாக சகஜ நிலைக்கு வந்தது என்றால் அதற்குக் காரணம் இந்தியத் துருப்புக்கள். எக்காரணத்தைக் கொண்டும் தனிநபர் அளவில் கடுதல், கொலை செய்தலுக்கு இவர்கள் இடம் கொடுக்க வில்லை. குறிப்பாக ரஜாக்கர்களும் பீஹாரி முஸ்லிம்களும் பொதுமக்களின் ஆக்கிரத் துக்கு உள்ளாவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். முதல் இரு வாரங்களில் அவர்கள் உஷாராகச் செயல்பட்டார்கள். அதற்குப் பலனும் கிடைத்தது. ஆனால் அவர்கள் வங்க தேசத்தின் சொந்த விவகாரமான சட்டம், ஒழுங்குநிலைநாட்டுவதில் அதிகம் ஈடுபடக் கூடாது என்பதை ஓர் உயர்மட்ட ராணுவ அதிகாரி சுட்டிக்காட்டினார். உண்மையான விஷயம்.

விமான கூடத்துக்கு வெகு சமீபத்தில் உள்ள இன்டர்கான்டினென்டல் ஹோட்டல்


கூட வங்க தேச விடுதலைப் போராட்டத்தில் இடம் பெற்றது. ஏனென்றால் இறுதி கட்டத்தில் அந்நியர்கள் இங்கு தஞ்சம் புகுந்தார்கள். யுத்தம் நடந்த காலம் முழுதும் தர்மத்துக்கு அதிக இடம் கொடுத்த இந்திய அரசு இந்த ஹோட்டலை நடு நிலை ஸ்தலமாக ஒப்புக் கொண்டது.

இன்டர்கான்டினென்டல் ஹோட்டல் சர்வ தேச சங்கிலியில் ஓர் அணு. வெகு திறமையாக ஹோட்டல் நடத்துபவர்கள் இவர்கள். ஹோட்டலின் மொட்டை மாடியில் ஆகாயத்திலிருந்து பார்த்தால் தெளிவாகத் தெரியும்படி செஞ்சிலுவையை வர்ணத்தால் தீட்டியிருக்கிறார்கள்.

ஹோட்டலில் ஒரு கடிகாரம்கூடச் சரியான மணியைக் காட்டவில்லை. ஆனால் மின்சாரத்தால் இயங்கிக் கொண்டிருந்தது. ஏன் என்று விசாரித்ததில் விஷயம் தெரிந்தது. கடிகாரத்தைப் பராமரிக்கும் நபர்கள் பாகிஸ்தானிகள். அவர்கள் ஓடிவிட்டார்கள். "யுத்தத்தின் போது இந்த ஹோட்டல் தர்ம சத்திரத்தைப் போல ஆகிவிட்டது. விலை உயர்ந்த கம்பளங்களையும் அறைகளை அலங்கரிக்கும் சாதனங்களையும் ஹோட்டல் நிர்வாகிகள் அப்புறப்படுத்தி விட்டார்கள். நீங்கள் நிற்கும் ஒய்யார ஹாலில் படுக்கைகள் கால்மாடு தலைமாடாக விரிக்கப்பட்டுக் குப்பையும் கூளமுமாகக் கிடந்தது" என்றான், பணம் வாங்கி ரசீது கொடுக்கும் வங்க தேச ஊழியன்.

ஒரு கட்டத்தில், அதாவது பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே அகதிகள் விஷயமாக வாதப் பிரதிவாதம் கடுமையாகிக் கொண்டே போனபோது பாகிஸ்தான் ராணுவம் சுமார் இருநூறு வங்க தேச ஊழியர்களை இரவுக்கு இரவே கொன்று விட முடிவு செய்தது. இது பிரிட்டிஷ் மானேஜர் காதுக்கு எட்டிவிட்டது. உடனே அவர் ஹோட்டலில் தங்கியிருந்த இருநூறு அந்நியர்களை, பெரும்பாலும் பத்திரிகை நிருபர்களை அணுகி உதவி கோரினார். ஒவ்வொரு நபரும் வெகு ரகசியமாக ஓர் ஊழியரைத் தங்கள் காரில் வைத்து ஜன நெருக்கம் உள்ள நகரப் பகுதியில் கொண்டுபோய் விட்டு விட்டார்கள். இரவு பத்து மணிக்கு வங்க ரத்தம் குடிக்க ஆசைப்பட்டு வந்த பாகிஸ்தான் ராணுவத்தார் ஏமாந்தார்கள். ஆதலால், பிரிட்டிஷ் மானேஜரை உடனடியாக மேற்குப் பாகிஸ்தானுக்கு மாற்றினார்கள். அவர் ஏன் கவலைப்பட வேண்டும்? அடுத்த விமானத்தில் புறப்பட்டு பிரிட்டன் போய்ச் சேர்ந்தார்.

ஸ்ரீ ஜுல்பிகர் அலி பூட்டோ, ஸ்ரீ அப்துல் கய்யூம் கான் போன்ற மேற்குப் பாகிஸ்தான் தலைவர்கள் இந்த ஹோட்டலில் பத்தாவது மாடியில் உள்ள "ஸ்வீட்" என்று சொல்லப்படும் அறைத்தொடர்களில் தங்குவார்களாம். அப்பால் என்ற ஊழியர் எப்படி பூட்டோவுக்கு மது, மாது இரண்டின் மேலும் நாட்டம் என்பதை விளக்கி பாகிஸ்தான் இன்டர் நேஷனலில் பணி புரிந்த பணிப் பெண்களில் இருவர் எப்பொழுதுமே அவர் அறையில் இருப்பார்கள் என்றார்.



ஒரு நாட்டின் சரித்திரத்தில் இன்டர்கான்டினென்டலைப் போல் வேறெந்த ஹோட்டலும் பங்கு கொண்டதில்லை. சென்ற வருடம் மார்ச்சு மாதம் ஸ்ரீ பூட்டோ டாக்காவுக்கு வந்தபொழுது இந்த ஹோட்டலுக்குத்தான் வந்தார். ஹோட்டலுக்கு வெளியே வங்க தேசக் கொடி பறந்து கொண்டிருந்தது. "அதை முதலில் கீழே இறக்குங்கள்" என்று குதித்தார் ஸ்ரீ பூட்டோ. "அதை இறக்கிவிட்டால் இந்த ஹோட்டலை மூட வேண்டி வரும்" என்று எச்சரித்தார், மானேஜர். இறுதியில் ஸ்ரீ பூட்டோ உச்சாணியிலிருந்து கீழே இறங்கினார். ஸ்ரீ முஜிபுர் ரஹ்மான் அடிக்கடி இந்த ஹோட்டலுக்கு வந்து போவதுண்டு.

ஷேக் வெற்றிகரமாக வங்க தேசம் திரும்பியதும் டாக்காவே திரண்டு வந்து அவருக்கு அழைப்பைக் கொடுத்தது. இன்டர்கான்டினென்டல் ஹோட்டலுக்குப் பக்கத்தில் உள்ள ரேஸ்கோர்ஸ் (குதிரைப் பந்தயம்) மைதானத்தில் வெள்ளம் கரை புரண்டு ஓடுவதுபோல் ஜனசமூகம் குழுமிற்று. "அதோ சிலர் துப்பாக்கி ஏந்திப் பயிற்சி பெறுகிறார்களே, அங்கு ஒரு காளி கோயில் இருந்தது. அதை இந்தப் பாகிஸ்தானிகள்தான் இடித்துத் தள்ளினார்கள்" என்றார் நான் ஏறிச் சென்ற டாக்ஸி டிரைவர்.

எந்த மைதானத்திலிருந்து ஷேக் முஜிபுர் மாநில சுயாட்சிக்காகக் குரல் கொடுத்தாரோ, அதே மைதானம்தான் அவர் வங்க தேசத்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஸ்தானப் பிராப்திகூடக் கிடையாது என்று கர்ஜிப்பதைக் கேட்டது.

ஒன்பது மாத காலத்தில்தான் எவ்வளவு மாறுதல்? ஷேக் முஜிபுர் ரஹிமானைச் சிறைப் பிடித்தால் வங்க தேச சுயாட்சி கோஷம் ஒழிந்துவிடும் என்று மனப்பால் குடித்தார் ஜெனரல் யாஹ்யாகான். ஒரு ஷேக்குக்குப் பதில் பல லட்சம் ஷேக்குகள் தோன்றினர், பெரும்பாலும் இளைஞர்கள். ஷேக் மனம் வைத்தால் இன்றுகூட பாகிஸ்



பங்களா தேஷ் விடுதலையால் கிட்டியபடியால் இனி, பாகிஸ்தானை பஞ்சாபிஸ்தான் என்று அழைத்தால் என்ன?

-- எஸ். சௌரிராஜன்

தான் வங்க தேசத்துடன் பெயரளவில் தொடர்பு கொள்ளலாம் என்று ஸ்ரீபுட்டோ இன்னும் எண்ணுகிறார். "இன்று ஷேக் முஜிபுர் ரஹ்மான் கோரினால்கூட பாகிஸ்தானுடன் இணைப்பு என்பது இனி இல்லை" என்று முழங்குகிறார்கள் மாணவர்களுடைய பிரதிநிதிகள்.


ஷேக் முஜிபுர் ரஹ்மான் விடுதலையானது நமக்கு நல்லதுதான். ஏனென்றால், வங்க தேசம் முழுதும் அவர் நாவசைந்தால் நடனம் ஆடுகிறது. பாகிஸ்தானிகள் வங்க தேசத்தை மிகவும் க்ஷீணமான நிலைமையில் விட்டு விட்டுச் சென்றிருக்கிறார்கள். வங்க தேச அரசு பல முக்கிய திசைகளில் வெகு முக்கிய முடிவுகளை எடுத்தாக வேண்டும். வங்க தேசத்தில் முப்பது லட்சம் மக்கள் இறப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் மேல் என்னவிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது ஒரு பிரச்னை. இது சம்பந்தப்பட்டவரை சர்வதேச சம்பிரதாயம் என்ன என்பது பற்றி அமெரிக்கா குட்டை குழப்பும். ஏற்கனவே யுத்தக் கைதிகளாகிவிட்டவர்கள் மேல் எவ்வித விசாரணையும் நடத்த முடியாது என்பது ஒரு நோக்கு.

வங்க தேசத்தின் பொருளாதாரத்தைக் கைதூக்கிவிட எந்தவிதமான நடவடிக்கைகள் தேவை என்பதை முடிவு செய்ய வேண்டும். எந்தெந்த நாடுகளிடமிருந்து என்னென்ன விதமான உதவி பெறுவது என்ற முடிவு வங்க தேசத்துடையதாக இருக்க வேண்டுமே தவிர நம்முடையதாக இருக்கக் கூடாது. இன்று அமெரிக்காவும் சீனாவும் வங்க தேசத்துக்கு எதிரிகளாகத் தோன்றலாம். ஆனால் காலப் போக்கில் பணத்தை எதேஷ்டமாகக் கொடுத்து அமெரிக்கா தான் செய்த தவற்றை மறைத்துவிடலாம். ஜப்பான் இந்த விஷயத்தில் ஏற்கனவே உஷாராகி, நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது.

அடுத்தபடியாக, ஆயுத நடமாட்டம். வங்கதேச விடுதலை இயக்கம் மும்முரமான பொழுது ஆயுதங்களை மாணவர்கள் முதல் மீனவர்கள் வரை எல்லோருக்கும் தாராளமாக வழங்கினார்கள். இந்தியா கணிசமான ஆயுதங்கள் கொடுத்தது என்பது இன்று ரகசியம் அல்ல. இந்த ஆயுதங்களை எப்படி மீண்டும் வங்க தேச அரசு பெறுவது என்பது மிகப் பெரிய பிரச்னை. இன்று உள்ள நிலைமையில் வங்க தேசத்தில் நன்கு பயின்ற ராணுவம் கிடையாது. போலீஸ் படையையும் செப்பனிட்டாக வேண்டும். டாக்காவில் உள்ள போலீஸாரையும் அவர்கள் உடையையும் பார்த்தால் ரிக்ஷா ஓட்டி கூட மதிப்புக் கொடுக்கமாட்டான்.

இந்த நோக்குகளிலிருந்து பார்த்தால் ஷேக் முஜிபுர் ரஹ்மான் தாம் பிரதமராக முடிவு செய்தது நல்லதே. வங்க தேச மந்திரி சபைக் கூட்டத்தில் இது பற்றி நஸ்ருல் இஸ்லாமே பிரஸ்தாபித்தாராம். ஷேக்கும் உடனடியாக இசைந்தார். அதையடுத்து ஜனநாயக முறை அரசை ஓர் உத்தரவு மூலம் ஏற்படுத்தி விட்டார்கள். அடுத்தபடியாக, அரசியல் நிர்ணய சபை வங்க தேசத்துக்கு எந்தவிதமான அரசியல் அமைப்புத் தேவை என்பதை முடிவு செய்யும்.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் பிரதமரானதால் இந்தியா வெகு உஷாராகச் செயல்பட வேண்டும். வங்க தேசத்துக்கு இது நல்லது, அது நல்லது அல்ல என்பது பற்றி இந்திய அரசில் விவாதங்கள் நடந்து வந்துள்ளன. இந்த விவாதங்களை இதுவரை இவ்வளவு பலமாக, எல்லோருடைய காதுகளிலும் விழும்படியாக நடத்தியதே தவறு. "வங்க தேசம் சுதந்திர நாடு, இந்தியாவின் கைப் பிள்ளை அல்ல" என்று இரு தடவைகள் ஷேக் முஜிபுர் ரஹ்மான் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் அழுத்திச் சொன்னார். இதற்கு ஆழ்ந்த அர்த்தம் உள்ளது. இந்தியா நினைப்பது, நினைத்தது ஒன்று இறுதியில் உருவாவது மற்றொன்றாகலாம் என்பதற்குச் சூசகங்கள் ஏற்பட்டு வருகின்றன. (தொடரும்)



"சரியா கஞ்சிரா வாசிய்யா! தப்பு தப்புன்னே சத்தம் வரது!"
"ஆமாம்! உங்களுக்கு வாசிக்கிறது எவ்வளவு தப்புங்கிறதை வெளிப்படுத்திண்டிருக்கேன்!"



"இங்கே ஏண்டா நின்னுட்டிருக்கே?"
"வழியில் போகாமே போயிட்டிருந்த என்னைப் பார்த்து இந்தப் பூட்டு முறைக்குதுங்க!"


தங்கப் பதக்கம்

சிவாஜி நாடக மன்றத்தின் புதிய நாடகமான தங்கப் பதக்கம், பெரிய பண்ணையாரின் சவுக்கொலியுடன் ஆரம்பித்து (போலீஸ்) எஸ். பி சௌத்ரி யின் துப்பாக்கி வேட்டுக்களுடன் நிறைவு பெறுகிறது. இரண்டரை மணி நேரம் போனது தெரியாமல் அவையினர் அமர்ந்திருந்ததற்குக் காரணம் இதில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிரதான பாத்திரமேற்று சூப்பரின்டென் டென்ட் ஆஃப் போலீஸ் சௌத்ரியாகத் தோன்றி இருப்பதே.



பெரிய பண்ணையாரின் ஆர்ப்பாட்டங்களுக்கு முன்னே அமைதியாகத் தோன்றி, கொதித்துக் கொக்கரிக்கும் பண்ணையாரின் உறுமாலையே வாங்கி அவரது கரங்களைப் பின்னுக்குக் கொண்டு வந்து கட்டிக் கைது செய்யும் சௌத்ரி யாக, வெந்நீர்க் குளியலை மறக்காத எம். எஸ். ஏ.யின் மாமனார் தனிகா சலத்தை மடக்கி, உள்ளே தள்ளும் எஸ். பி. சௌத்ரியாக, ரௌடி மாயாண்டி விலங்கிடப்பட்ட கைகளோடு போலீஸ் ஸ்டேஷனையே கதிகலங்க வைத்துக்கொண் டிருக்கும்போது அவனை உள்ளே கூட்டிப் போய்க் 'கவனித்து', பின்னர் அவன் அலறியபடி வெளியே வந்து விழுந்து புரளும்படி செய்யும் சௌத்ரியாக - என்று இப்படிப் பாத்திரப் படைப்பை விளக்கிக் கொண்டு விறுவிறுப்பாக ஆரம்ப மாகிறது நாடகம். ஆனால்.....

மேலே கதை முன்னேறும்போது - சிவாஜி நாடக மன்றத்தாரின் படைப் பிலே புதிய கதையமைப்பை எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே ஏற்படுகிறது. கடமைக்காக உறவைத் தியாகம் செய்யும் கருத்து நமது திரைப்பட - நாடக உலகங்களுக்குப் புதிய விஷயம் இல்லையே.



தந்தை சௌத்ரியைத் தனது ஜன்ம விரோதியாக நினைக்கிறான் மகன் ஜகந்நாதன். அதற்கு அவன் சில காரணங்களைக் கூறுகிறான். ஆனால் அவை அவ்வளவு அழுத்தமான காரணங்களாக இல்லை.

"போலீஸ் உயர் அதிகாரியாக வரும் சிவாஜி கணேசனின் நடிப்பு மிடுக்குடன் கம்பீரமாக இருக்கிறது" என்று சொன்னால் சர்க்கரை இனிக்கும் என்று கூறுவதைப் போலத்தான். தம் மனைவி இறந்த செய்தியைக் கேட்ட சௌத்ரி தமக்கு மேலுள்ள அதிகாரியின் முன்னிலையிலிருந்து விடைபெற்றுப் போகும்போது அந்த நடை - அதில் காணும் தள்ளாடல்-அது நடிகர் திலகத்தின் முத்திரை.



சௌத்ரியிடம் எல்லோருக்குமே ஒரு பக்தி, பயம். அதைச் சுவைபடச் சித்திரித்திருக்கிறார்கள். மாமா இல்லாதபோது மருமகள் வீராப்பாகப் பேசு வதும், அவரை நேரில் கண்டதும் உளறிக் கொட்டியபடி அவர் காலில் விழு வதும் கரவொலி பெறும் காட்சி. குணம் கெட்ட கணவனைத் திருத்த முடி யாத விமலா மாமாவின் உயிரைக் காக்கக் கணவனின் குண்டை ஏற்றுச் சாகிறாள். விமலாவாக நடிக்கும் காமாட்சியின் நடிப்பு இயற்கையாக இருக் கிறது. சௌத்ரியின் மனைவி லட்சுமியாக வரும் சிவகாமியின் வேஷப் பொருத் தமும் நடிப்பும் சிறப்பாக இருக்கின்றன.

சௌத்ரியின் மகன் ஜகந்நாதனை ராஜபாண்டியன் நன்றாகப் பேசி நடிக்கிறார். முன்னுக்கு வரக்கூடிய துடிப்பைக் காண்கிறோம், அவர் நடிப்பிலே.



தம் மகனுடைய பிறந்த நாள் விழாவிலே சௌத்ரி பாடி ஆடுகிறார். இது ஒரு புதுமையான காட்சி. ஒரு போலீஸ் அதிகாரியின் கனமான குரலிலே ஆங்கில மெட்டிலே அழகாகப் பாடி அதற்கேற்றபடி நவீனமாக ஆடி ரசிகர் களின் பலமான கைதட்டலைப் பல நிமிஷங்கள் பெறுகிறார் சிவாஜி கணேசன். குடும்பப் பாச உணர்வு வேறு கடமை உணர்வு வேறு என்பதை அதே காட்சியில் மகனைக் கைது செய்யும் கட்டத்தில் காட்டியிருப்பது பாராட்டத் தக்கது.

இதே உத்தியை மகன் ஜகந்நாதனும் தன் தந்தையைப் பழிவாங்கும் கட்டத்தில் கையாளுகிறான். சௌத்ரிக்கு மிக உயர்ந்த கௌரவமான தங்கப் பதக்கம் அளிக்கப்பட்ட அதே மேடையில், தந்தைக்கு மாலையிட்டுப் பாராட்டிவிட்டு, வக்கீல் கோபால்சாமியைக் கொலை செய்த குற்றத்துக்காகக் கைது செய்ய வாரண்டுடன் போலீஸ் அதிகாரிகளையும் தன் பின்னாலேயே வரும்படி செய்கிறான் ஜகந்நாதன்.



கைது செய்யப்பட வேண்டியவர் உயர் போலீஸ் அதிகாரியான சௌத்ரி. கொலைக் குற்றத்துக்கான காரணம் காட்டி அரஸ்ட் வாரண்ட் தயாரிப்பதென்பது சில மணி நேர விவகாரமல்ல. கண்ணியமும் கடமை உணர்வும் கொண்ட சௌத்ரி போன்ற ஒருவர் மீது குற்றப் பத்திரிகை தயாரிப்பது லேசான விஷய மும் அல்ல. அதற்கு இரண்டொரு நாட்களாவது ஆகியிருக்க வேண்டும். அந்த நிலையில் அவருக்குத் தங்கப் பதக்கம் பரிசளிப்பதை அரசாங்கம் உடனே ரத்து செய்திருக்க முடியும். பரிசளிப்பும் பற்றி அறிவிப்பு செய்திருந்தாலும் கூட, பரிசு பெறுபவர் மீது கொலைக் குற்றச் சந்தேகம் வருமாயின் அவருக்குப் பரிசளிப்பதை நிறுத்தி வைக்கும் உரிமை அரசாங்கத்துக்கு உண்டே? "டிராமாடிக் எஃபக்ட்" என்று எண்ணி ஏதோ குளறிவிட்டார்கள் போலும்

தங்கப் பதக்கம் நாடகத்தின் கதை வசனங்களை மகேந்திரன் செய்திருக் கிறார். பல இடங்களில் கைதட்டலோடு பாராட்டும் பெறுகிறது வசனம். டைரக் ஷன் பொறுப்பைத் திறம்படச் செய்திருக்கும் திரு எஸ். ஏ. கண்ணன், இந் நாடகத்தின் நகைச் சுவைப் பாத்திரமான கான்ஸ்டபின் கந்தராமாகவும் நடித்து அமோகமான அப்ளாஸ்களைப் பெறுகிறார்.

போலீஸ் அதிகாரி சௌத்ரி பெறும் பதக்கத்தின் மதிப்பு 22 காரட். அது சிவாஜியின் நடிப்புக்குப் பொருந்தும். நாடகம் பதினாறு காரட்தான் என்றாலும் தங்கம் தங்கம்தானே!

\- கேனசிகன்

19. ஜகத்தாத்ரி

துர்காதேவி! நினைத்த மாத்திரத்தில் மக்களின் அச்சத்தை அகற்றுகிறாய். அச்சம் நீங்கிய இன்ப வாழ்வில் உன்னை ஸ்மரித்தால் நன்மதி அளிக்கிறாய். வறுமையும், துயரமும், பயமும் நீக்குபவளே! சதாகாலமும் நனைந்த நெஞ்சுடன் சகல உபகாரமும் புரிய உன்னையன்றி எவர் உளர்?

— துர்கா சப்த சதீ 4.17



அம்மா

ரா. கணபதி

ஊரெல்லாம் சிம்மவாஹினியின் புகழ் பேசப்பட்டது. சாரதாமணிக்கு உடல் உபாதை வந்து நிவாரணமானதில் ஊரிலேயே பக்தி தழைத்தது! இதற்காகத்தான் அவளுக்கு நோய் வந்து, அவளும் தம்பி வார்த்தையைப் பொருட்படுத்தி, நோயை அலட்சியப்படுத்தாமல் தேவிக்கு நேர்ந்துகொண்டாளோ?


இந்த நிகழ்ச்சியைப் பிற்காலத்தில் நினைவுகூரும்போது அன்னை, ''எனக்கு மருந்து கிடைச்சது; ஊர் முழுதுக்கும் அநுக்கிரகம் கிடைச்சது'' என்பாள்.

எவ்வளவு பொருள் பொதிந்த வாசகம்!

நம் கையில் இல்லாத ஒரு விஷயத்தில் மகா சக்தியே கதி என்று விட்டுவிட்டால் நிச்சயம் அந்தச் சக்தி அருள் புரிந்தே தீரும் என்று இச்சம்பவம் உலகுக்கு நிரூபித்துக் காட்டுகிறது. உடற்பிணி தீருதல், பணக் கஷ்டம் தீருதல் முதலியவற்றைக் கடவுளிடம் கோரக் கூடாது என்பார்கள். ஆயினும் உயர்பக்குவம் பெறாதவர்கள், தங்கள் வாழ்க்கைப் பிரச்னைகளையும்கூட அந்த சக்தியிடம் நம்பி ஒப்புக் கொடுத்தால் அது வழிகாட்டிக் காக்கும் என்பதை சாரதை மெய்ப்பித்துவிட்டாள்!

தன் மகிமையை மறைத்து மறைத்தே வாழ்ந்த நமது அம்மா பிற்காலத்தில் ஒரு முறை தன்னையுமறியாமல் சொன்னாள்: ''**மற்றவாளுக்கு ஒரு ஆதர்சமான உதாரணத்தைக் காட்டறத்துக்கு எவ்வளவு தேவையோ அதைவிட அதிகமாகவே செஞ்சு காட்டிவிட்டேன்.**'' அவளது எளிமை, அன்பு, உழைப்பு இவை மட்டுமின்றி உடல் நோய் தீருவதற்காக உறுதியுடன் அம்பாளிடம் அவள் நேர்ந்துகொண்டதும்கூட மக்களுக்கு ஓர் உதாரணமாகிறது. நம்பிக்கையின் சக்தியை அது எடுத்தியம்புகிறது.


நம் அம்மாவுக்கு ஆயுள் உள்ளளவும் சிம்மவாஹினி



யிடமிருந்த பக்தி சொல்லத்தரமன்று. அந்த ஆலயத்து மண்ணை ஒரு பேடகத்தில் போட்டு அதனை எப்போதும் தன்னுடன் வைத்திருந்தாள். சில சமயங்களில் அதில் சில தூள்களை வாயில்கூடப் போட்டுக் கொள்வாள்.

பெண்களுக்குப் பக்தி வேண்டும்; பொறுமை வேண்டும். பக்தியின் அவசியத்தை ஒரு நோய் மூலம் நிரூபித்த சாரதைக்கு இன்னொரு நோயைத் தந்து பொறுமையின் பெருமையை நிரூபித்தாள் அம்பிகை.

சாரதைக்கு வழக்கமான மலேரியாக் காய்ச்சல் கண்டு, எக்காரணத்தாலோ அவளது மண்ணீரல் வீங்கியது. அந்தக் காலத்தில் காயாபட்-பதன்கஞ்ஜ் என்ற ஊரில் அதற்கு ஒரு ராட்சத வைத்தியம் செய்வார்கள். அதாவது நோயாளியை சிவாலயத்தில் தீர்த்தமாட்டுவித்துப் படுக்க வைப்பார்கள். வயிற்றின்மீது ஒரு வாழை இலையைப் போடுவார்கள். வைத்தியர் எரிகின்ற இலந்தைக் கொள்ளிக் கட்டையால் வாழையிலை மேல் கொடுரமாகத் தேய்ப்பார். கீழே உள்ள சதையே பிய்ந்து போவது போல வெந்து விடும். பிறகு ஈரல் வீக்கம் தணியும் என்று நம்பிக்கை. நம்பிக்கைதானே ஒழிய. இந்தப் பயங்கர மருத்துவத்துக்கு ஆளான எவராவது நடைமுறையில் குணமடைந்தாரா என்பது சந்தேகமே.



சாரதாமணி துணிச்சலுடன் கொள்ளிக் கட்டை வைத்தியத்துக்கு உடன்பட்டாள். அன்னையை அழைத்துக்கொண்டு காயாபட்-பதன்கஞ்ஜுக்குப் போனாள். சிவாலயத்தில் முழுகினாள்,

ஒரு சில நோயாளிகள் இந்தக் குரூரமான வைத்தியத்துக்கு ஆளாகித் துடிதுடிப்பதைப் பார்த்தாள் சாரதை. அந்த நோயாளிகளைப் பலர் அழுத்திப் பிடித்துக் கொண்டும், அவர்கள் கொள்ளிக் கட்டை எரிச்சல் தாளாமல் திமிறுவதையும் பார்த்தாள்.

சாரதையின் முறை வந்தது. சியாம சுந்தரி பொறி கலங்கி அருமை மகளைப் பார்த்தாள். 'இந்தப் பாவியின் வயிற்றில் வந்து பிறந்ததற்காக இந்தப் பெண் படுகிற அவஸ்தைகளுக்கு எல்லையே இல்லையா?' என்று எண்ணி உடல் துடிக்க நின்றாள்.

சாரதையிடமோ சிறிதும் துடிப்பு இல்லை. நிதானமாக மருத்துவரை நோக்கி நடந்தாள். அவளை அழுத்திப் பிடித்துக் கொள்வதற்காகச் சிலர் முன்வந்தனர்.

''அதெல்லாம் அவசியமில்லை'' என்று பளிச்செனச் சொல்லிவிட்டு, நீள நெடுகப் படுத்தாள் சாரதாமணி.

சிகித்சை என்ற பெயரில் சித்திரவதை நடந்தது. விசித்திரமான சகிப்புத் தன்மையோடு அதைத் தாங்கிக் கொண்டாள் தேவி. 'ஹ்ம்' என்று ஒரு முனகல்கூட அவளிடமிருந்து பிறக்கவில்லை. கொள்ளிக்

கட்டைக்குக் கீழே மரக் கட்டையாகப் படுத்திருந்தாள்.

வைத்தியத்தின் பலனோ, பொறுமையின் பலனோ, ஈரலும் சுருங்கிவிட்டது. சாரதை ஆரோக்கியம் பெற்றாள்.

மனத்தாலோ, உடலாலோ ஏதோ ஒரு விதத்தில் அவளைத் துன்புறுத்திப் புடம் போட்டுக் கொண்டேயிருந்தாள் பராசக்தி. இதனிடையில் தக்ஷிணேசுவரத்திலிருந்து துயரச் செய்தி வந்தது — சந்திரமணி தேவி காலமாகிவிட்டாள்! சாரதை எத்தனையோ பரிவுடன் பணிவிடை செய்து அன்பு செலுத்திய மாமியின் உடலைக்கூட அவள் தரிசிப்பதற்கில்லாமல் உத்தரக்கிரியை யாவும் ஆகிவிட்டன! அந்திம சமயத்தில் அம்மாவுடன் இருந்து அவளை வாரிப் போடாத தான் இப்போது எதற்காக தக்ஷிணேசுவரம் போக வேண்டும் என்று சாரதை எண்ணினாள் போலும்! அவளது அதிசயக் கணவரும் அவள் வர வேண்டும் என்று சொல்லி அனுப்பவில்லை.

அம்பிகையின் 'விஷமங்'களை எண்ணியபடி சாரதை ஜயராம்பாடியில் காலம் தள்ளிக் கொண்டிருக்கையில் குதூகலத்துக்குரிய ஒரு லீலையை நிகழ்த்தினாள் அந்த அம்பிகை!

நகர வாழ்வில் அவரவருக்கும் தமது குடும்ப அலுவல்களுக்கே பொழுது போதுமாயிருப்பதில்லை. எனவே, நகர மக்களுக்குப் பொதுவாகப் பிற குடும்பங்களுடன் விசேஷப் பற்றுதலும் இருப்பதில்லை, துவேஷமும் இருப்பதில்லை. கிராம மக்கள் இப்படியல்ல. அங்கு குடும்பங்கள் நெருங்கிப் பழகும். இதனாலேயே பல குடும்பங்களிடை மிகுந்த சௌஜன்யம் நிலவினாலும் சில குடும்பங்களிடையே ஆழ்ந்த துவேஷமும் ஏற்படுவதுண்டு. இது பல தலைமுறைகளுக்கு நீடிக்கவும் செய்யும். நவ முகர்ஜியின் குடும்பத்துக்கும் ராமசந்திர முகர்ஜியின் குடும்பத்துக்கும் இடையே இப்படியொரு பூசல் இருந்து வந்தது.

நவ முகர்ஜியின் வீட்டில் விமரிசையாகக் காளி பூஜை நடத்த ஏற்பாடாயிற்று. ஊராரெல்லாம் அந்தப் பூஜைக்கு புஷ்பம், பழம், பணியாரம் முதலியன சமர்ப்பித்தனர். பால்போன்ற மனம் கொண்ட சியாமசுந்தரிக்கு நவமுகர்ஜி குடும்பத்திடம் வைரம் பாராட்ட முடியவில்லை. காளிக்கு நிவேதிப்பதற்காக அன்னம் செய்து நவமுகர்ஜியின் வீட்டுக்கு எடுத்துச் சென்றாள்.

இவளுக்குப் பகை உணர்ச்சி இல்லாவிட்டாலும் அந்த மனிதருக்கு மனம் மாறுமலே இருந்தது. "இந்த நிவேதனத்தை இங்கே சேர்ப்பதற்கில்லை" என்று நிஷ்டுரமாகக் கூறிவிட்டார்.

ஊரெல்லாம் விழாக் கொண்டாடும்போது சியாமசுந்தரி தேவி துக்கத்துக்கும் அவமானத்துக்கும் ஆளாகி, சோற்றுப் பாத்திரத்தை வீட்டுக்கே திரும்பத் தூக்கி வந்தாள்.

கதறிக் கதறி அழுதாள். 'அம்மா, எத்தனையோ தரித்திரத்தில் கஷ்டப்பட்டு அரிசி சேர்த்து உன் பக்தர்களுக்கென்று அன்னம் தயாரித்தேன். மறுத்துவிட்டாயே!' என்று வாய்மொழியில் சொல்லாமல், கண்ணீரால் சொல்லிக் கொண்டு படுத்தாள்.

காளிக்காகச் சமைத்த அன்னத்தை வீட்டில் யாரும் புசிக்கவில்லை. அனைவரும் காய்ந்த வயிற்றோடும் காய்ந்த மனத்தோடும் படுத்தனர்.

'இத்தனை அன்னத்தை வீண் செய்கிற அந்தஸ்து இந்தப் பிச்சைக்காரர்களுக்கு வந்துவிட்டதா? ஆனாலும் நீ இதை ஏற்றாலன்றி எங்களுக்கும் இது வேண்டியதில்லை' என்று சூள் உரைத்துவிட்டுக் கண் அயர்ந்தாள் சியாமசுந்தரி.

தன்னை யாரோ தட்டி எழுப்ப, துணுக்குற்றுக் கண் விழித்தாள். கதவருகே கால் மேல் காலை மடித்துப் போட்டுக் கொண்டு கன கம்பீரமாக அமர்ந்திருந்தாள் செக்கச் சிவந்த சிங்காரி ஒருத்தி.

சியாமசுந்தரி முன்பு அழுது கன்னத்தில் காய்ந்திருந்த கண்ணீர்ச் சுவட்டிலே புதுக் கண்ணீர் வழியலாயிற்று.

"ஏன், அழறே! காளியோட அன்னத்தை நான் சாப்பிடறேன். வருத்தப்படாதே" என்றாள் சிவப்புச் சிங்காரி.

அவள் யார் என்று சியாமையின் உள் மனத்துக்குத் தெரிந்தது. இருந்தாலும் அவளது நாவு, "நீ யாரும்மா?" என்று வினவியது — அந்தச் சிங்காரியின் செம்பவள வாயிலிருந்தே அவளது அடையாளம் வெளியாக வேண்டும் என்ற ஆசையில் போலும்!

"நான்தான் ஜகன்மாதா. இந்தப் பிரபஞ்சத்துக்கெல்லாம் அம்மா. பிரபஞ்சத்தை எல்லாம் படைச்சுத் தாங்குகிற ஜகத்—தாத்ரி நான்தான், ஜகத்தாத்ரியாக இருந்து உன் பூஜையை நான் அங்கீகரிக்கிறேன்" என்று அழுத்தந்திருத்தமாக விடை வந்தது.

காட்சி மறைந்தது.

மறு நாள் காலை சியாமசுந்தரி மகளிடம் கேட்டாள்: "செக்கச்செவேல்னு கால் மேல் கால் போட்டுண்டு இருக்கற தேவதை யாரு?"

சாரதை பளிச்சென்று பதில் சொன்னாள்: "கண்டிப்பா ஜகத்தாத்ரிதான்."

தான் தரிசித்த தேவதையிடமே அடையாளம் தெரிந்துகொண்ட பின்னும் மகளிடம் அதை உறுதிப்படுத்திக் கொள்ள விழைகிறாள் சியாமை. ஏதும் தெரியாதவள் போலிருக்கும் மகளும் உடனுக்குடனே உறுதிப்படுத்துகிறாள்!

அன்றிலிருந்து ஜகத்தாத்ரி பூஜைக்கான ஏற்பாடுகளில் இறங்கி விட்டாள் சியாமா. எப்போது பார்த்தாலும் அவளுக்கு அதுவே பேச்சாகவும், காரியமாகவும் ஆகிவிட்டது. விசுவாஸ் குடும்பத்தினருக்கு விசுவாசமாக உழைத்து, அவர்களிடமிருந்து நானூறு ராத்தல் நெல் பெற்றாள், நிவேதனத்துக்காக.

வீட்டு வாயிலில் நெல்லைப் பாயில் பரப்பிக் காயப் போட்டுவிட்டு இவள் உள்ளே வந்தாளோ இல்லையோ, மழை கொட்டத் தொடங்கியது.

"என் அம்மா, இந்த அபலையை ஏன் இப்படிச் சோதிச்சு எடுக்கறே?" என்று சோகித்தபடி வாசலுக்கு ஓடி வந்தாள் சியாமசுந்தரி.

அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அந்தக் காட்சியைக் கண்ட மற்றவர்களாலும் நம்பத்தான் முடியவில்லை. ஆனால் அம்பிகையின் கருணைக்கு நாம் எல்லை கட்ட முடியுமா? நம்ப முடியாதது நடந்தது.

சுற்றிலும் எங்கும் மழை பொழியும்போது, சியாமசுந்தரி நெல் பரப்பியிருந்த பாயில் மட்டும் ஒரு தூறல்கூட விழவில்லை. அதன் மீது திண்ணென்னச் சூரிய வெளிச்சம் விழுந்து கொண்டிருக்கிறது! (நமது திருநெல்வேலி ஸ்தல புராணத்திலும் இதே அநுக்கிரம் கூறப்படுகிறது.)

நெல் காய்ந்தது: நெஞ்சம் குளிர்ந்தது.

களி மண் காளி விக்கிரகமாயிற்று: அதற்கு வர்ணம் தீற்றப்பட்டது. பூஜைக்கு நாளும் வைத்தாயிற்று.

"இந்தப் பூஜைக்கு அத்திம்பேர் அவசியம் நம்மோடு இருக்கணும்டா. அவரை அழைச்சுண்டு வா" என்று கூறித் தம்பி பிரஸன்னகுமாரைத் தக்ஷிணேசுவரத்துக்கு அனுப்பினாள் சாரதை.

ராமகிருஷ்ணர் சேதி கேட்டுக் கும்மாளி போட்டார். "பயலே, பிரஸன்னு! அம்மாவே பிரஸன்னமாகப் போறா, ஆமாண்டா, சாட்சாத் அம்மா பிரஸன்னமாகப் போறா. பேஷான காரியம் பண்ணறேள். அது சரி... ஆனா, அன்புக் குழந்தே, உங்க குடும்பம் ரொம்ப தரித்திரத்திலே திண்டாடறதுன்னு கேள்விப்பட்டேனே, ஆராதனைக்கு எப்படித் திரவியங்கள் சேகரிச்சேள்?" என்று வினவினார்.

தாயாரின் தளராத உழைப்பாலேயே பூஜையை விமரிசையாகச் செய்ய முடிகிறது என்று பிரஸன்னு கூறினான். "நீங்க நிச்சயமாக வரணும் அத்திம்பேர். உங்களை அழைச்சுண்டு போகத்தான் வந்திருக்கேன். அக்கா அதுக்காகத்தான் அனுப்பிச்சா" என்றான்.

"நான் அங்கேயே இருக்கற மாதிரிதான்" என்று கூறிக் கலகலவென நகைத்தார் ராமகிருஷ்ணர். 'அக்கா அனுப்பினாள்' என்றவுடன் அவர் அப்படிக் கூறியதன் உள்ளர்த்தம் பிரஸன்னுவுக்கு எப்படிப் புரியும்? ஜகத்தாத்ரி, சாரதை, ராமகிருஷ்ணர் இவர்களது தொடர்பை ('தொடர்பு' என்றாலும் போதாதுதான்!) அவன் அறியமுடியுமா? 'அத்திம்பேர்' வரவேண்டும் என்று பிடிவாதம் செய்தான். அவரோ அதை விடப் பிடிவாதம் பிடித்தார். "பேஷான

காரியம்! போய் பூஜையை ஆரம்பி, உங்களுக்கெல்லாம் சகல மங்களமும் உண்டாகும்'' என்று கூறி மைத்துனனைத் திருப்பி அனுப்பினர்.

ஜகத்தாத்ரி பூஜை கோலாகலமாக நடந்தது. நவமுகர்ஜி வீட்டுப் பூஜையைக் காட்டிலும் அதிசிறப்பாக இங்கு பூஜை நடத்திக் கொண்டாள் தேவி. பிச்சைக்காரியான சியாமசுந்தரி ஊராருக்கெல்லாம், வெளிக் கிராமங்களிலிருந்து வந்தவர்களுக்கும்கூட, அம்பாள் பிரசாதத்தை வயிருரப் படைத்துப் பூரித்தாள்.

பூஜை முடிவில் தேவியின் பிரதிமை நீர் நிலையில் விசர்ஜனம் செய்யப்படும்.

அன்று வியாழக் கிழமை. நம் சீமையில் சுக்ரவாரத்தைச் சொல்வதுபோல் வங்கத்தில் வியாழனைப் பரம லக்ஷ்மீகரமான தினமாகக் கருதுவர். (நம் அம்மா அவதரித்ததும் குருவாரத்தில் தான்.) இந்தச் சுபதினத்தில் பிரதிமையை விசர்ஜனம் செய்யலாகாது என்று சாரதை கூறிவிட்டாள். மறு நாள் மாதத்தின் கடைசி தினமாக இருந்தது. எனவே, அன்றும் விசர்ஜனம் தள்ளிப் போடப்பட்டது. அதற்கு மறு நாள் மாதப் பிறப்பு என்பதால் அன்றும் விசர்ஜனமில்லை. இவ்விதமாக ஜகத்தாத்ரி அதிகப்படியாக மூன்று நாட்கள் சியாமசுந்தரியின் கிருகத்தில் தங்கிக் கிருபை பொழிந்தாள்.

பதுமையைத் தீர்த்தத்தில் சேர்க்கின்ற கடைசி நிமிஷத்தில் சியாமசுந்தரி அதனிடம் நெருங்கி வந்து, அதன் காதோடு தன் வாயை வைத்துக் கொண்டு, ''என் பிரியே, ஜகாயி! அடுத்த வருஷமும் இதே மாதிரி வாடியம்மா. இன்னியிலிருந்து அடுத்த வருஷ பூஜைக்காக ஏற்பாடு ஆரம்பிச்சுடறேன்'' என்றாள்.

எத்தனையோ துன்பங்களுக்கு ஆளான சியாமைக்கு இப்படி இன்பத்தைப் பொழிந்தாள், நம் சீமையில் 'ஜக்கம்மா' எனப்படும் ஜகாயி! அன்றிலிருந்து சியாமசுந்தரி உழைக்கும் போதெல்லாம் வீட்டுக்காகச் செய்கிறோம் என்பது மட்டுமின்றி, அம்பாளுக்காகச் செய்கிறோம் என்ற ஆனந்த நினைவும் இழையோடி உற்சாக மூட்டியது.

''இந்தப் பூஜையால் சகல மங்களமும் ஏற்படும்'' என்று ராமகிருஷ்ணர், ஜகத்தாத்ரிக்கு முந்திக் கொண்டு தந்த வரம் பலித்தது. பிரஸன்னகுமாருக்குக் கல்கத்தாவில் 'வபை' உள்ள சில குடும்பங்களில் புரோகிதத் தொழில் கிடைத்தது. அடுத்த இரு தம்பியரான காளிகுமாருக்கும், வரதாப் பிரசாதுக்கும் விவசாயத்தில் புதிதானதோர் ஊக்கம் பிறந்து அவர்கள் குடும்பத்து நிலத்தை மீண்டும் விளைச்சலுக்குக் கொண்டு வந்தனர். கடைசிப் பிள்ளையும், அனைவரிலும் புத்திசாலியுமான அபய சரணன் பள்ளிப் படிப்பு பெறுவதற்கான உபகாரத்தை உறவினர் தாமாக முன் வந்து அளித்தனர்.

அடுத்த வருடத்துப் பூஜை தினம் நெருங்கி வந்தது.

சியாமை சாரதையிடம் வந்து, ''இந்த வருஷத்துப் பூஜையிலே உன் பங்கும் இருக்கணும்'' என்றாள்.

அம்பாள் ஆராதனை என்ற பெயரில் கூடப் பிறந்தகத்துக்குச் சல்லிக்காசும் சேர்க்கக் கூடாது என்று சாரதைக்குப் பிடிவாதம் இருந்தது போலும்!

''இந்த உபத்திரவமெல்லாம் எனக்கு வேண்டாம். உனக்கும்கூட வேண்டாம். ஏதோ ஒரு வருஷம் திருப்தியா பூஜை பண்ணினே. அம்பாள் கைகொடுத்து நம்ப மானத்தைக் காப்பாத்தினு. மறுபடி என்னத்துக்குச் சிரமங்களை வாரிச் சிரசுலே போட்டுக்கறே? இதெல்லாம் அவசியமே இல்லே. நீ என்ன பண்ணுவியோ பண்ணிக்கோ. எனக்கு இதிலே சம்பந்தப்பட முடியாது'' என்று தன் இயற்கைக்கே விரோதமான, விநோதமான கண்டிப்புடன் கூறினள் சாரதை.

அன்றிரவு அவள் ஒரு கனவு கண்டாள். மூன்று தேவ ரூபங்கள் அவள் முன் காணப்படுகின்றன. மத்தியிலே செக்கச் சிவந்த சொக்கி கால்மீது கால் போட்டு வீற்றிருக்கிறாள். அவளுக்கு இருபுறம் இரு தேவியர் பணிப் பெண்களாக நிற்கிறார்கள்.

''நல்லது; அப்போ நாங்க போகலாமா?'' என்று அவர்கள் சாரதையைக் கேட்கிறார்கள்.

முன்பு சியாமைக்கு அடையாளம் சொன்ன அதே சாரதை இப்போது இவர்களிடம், ''நீங்கள் யாராக இருக்கக் கூடும்?'' என்று வினவுகிறாள்.

நடுநாயகமாக இருந்த நாயகி, ''நான்தான் ஜகத்தாத்ரி. இதோ வலது பக்கம் இருப்பவள் ஜயா, இடது பக்கம் இருப்பவள் விஜயா' என்கிறாள்.

சாரதைக்கு உடல் வெடவெடக்கிறது. ''போறதா? நீங்கள்ளாம் என்னை விட்டுட்டுப் போறதா? ஊஹூம், கூடாது! என்னை விட்டுட்டு எங்கே போவேள்? போகாதேள். கெஞ்சிக் கேட்டுக்கறேன், இங்கேயே இருங்கோ! நான் உங்களைப் போகச் சொல்லவே மாட்டேன்'' என்று கண்ணீர் சொரிந்து மன்றாடினாள்.

கனவு மறைந்தது; அதன் நினைவு நிறைந்தது நெஞ்சகத்திலே.

''அம்மா, ஜகத்தாத்ரி பூஜைக்கு ஏற்பாடெல்லாம் செய்வோம்'' என்றுள் சாரதை மறு நாள் காலே.

அந்த ஆண்டும், அதற்குப் பிறகு பல்லாண்டுகளும், ஜயராம்பாடியில் ஜகத்தாத்ரி ஆராதனே சம்பிரமமாக நடந்து வந்தது.

இதில் சாரதையின் பங்கு என்ன தெரியுமா? அவள் கணவரைக் கேட்டுக் கால் காசுகூட வாங்கித் தந்ததில்லே. ஆனல் வேறென்று செய்தாள். பூஜைப் பாத்திரங்களும், சமையல் பாத்திரங்களும் மலேயாகக் குவிந்திருக்கும். அவற்றைத் துலக்க வேலேக்காரி வைத்துக் கூலி கொடுப்பதற்குப் பதிலாக நம் அம்மாளே தன் கை அயர, தோள் தளரத் தேய்த்துப் போடுவாள். இது ஆரம்ப காலத்தில். பிற்பாடு நம் அம்மா கேளாமலே அவளிடம் பக்தர்களின் காணிக்கை குவியத் தொடங்கியபோது அவள் திரவிய கைங்கரியமும் செய்தாள். ஆனல் அப்போதும் தேக கைங்கரியத்தை விட்டாளில்லே!

முதல் நாலாண்டுகள் சியாமசுந்தரியின் பெயரில் சங்கற்பித்து ஜகத்தாத்ரி பூஜை செய்யப்பட்டது. அடுத்த நான்காண்டுகள் சாரதாமணியின் பெயரில் வழிபாடு நடத்தப்பட்டது. அதன் பின் நாலாண்டுகள் சாரதையின் சிற்றப்பா நிலமாதவரின் பெயரில் இவ்வாராதனே நடைபெற்றது.

அதோடு பூஜையை நிறுத்திவிடப் போவதாக சாரதை அறிவித்தாள்.

அன்றிரவே தேவி அவளது சொப்பனத்தில் தோன்றினள். ''சரி, நீதான் பூஜையை நிறுத்தப் போறேன்னுட்டே. மது முகர்ஜியோட அத்தைக்கு ஜகத்தாத்ரி பூஜை நடத்தணும்னு ஆசை வந்திருக்கு. நான் போகட்டுமா? ம்....நான் போகட்டுமா? என்னே, உன்னேத்தான் கேட்கிறேன், போகட்டுமா?'' என்று மும்முறை கேட்டாள் சாரதையை.

சாரதைக்கு அடிவயிறு துடித்தது. 'ஜகத்தாத்ரி பூஜையை நிறுத்த நினைக்கிறேன் அற்பமான நான். அப்படியிருந்தும் சாக்ஷாத் ஜகத்தாத்ரி என்னிடம் வந்து என் சம்மதத்தைக் கேட்டே போவது என நிச்சயித்து மும்முறை அநுமதி கேட்கிறுள்; எப்பேர்ப்பட்ட அபசாரம், அபராதம் செய்தேன்?'

தேவியின் பாதங்களேச் சிக்கெனப் பிடித்துக் கட்டிக்கொண்டாள் சாரதை. ''அம்மா, இனி ஒரு நாளும் உன்னேப் போகச் சொல்லவே மாட்டேன். பிரதி வருஷமும் நானே உனக்குப் பூஜை பண்ணுவேன்'' என்று தேம்பினள்.

பிற்பாடு சாரதா தேவிக்கு அடியார்கள் தாமாகப் பொன்னும் பொருளும் பூமியும் வழங்கிய காலத்தில் அவள் மூன்றரை ஏக்கர் நிலம் வாங்கி, அதனே மூலதனமாக வைத்து ஜகத்தாத்ரி பூஜைக்கென்றே ஒரு நிவந்தம் ஏற்படுத்தினள். இப்போதும் பேலூர் ராமகிருஷ்ண மடத்தினர் ஜயராம்பாடியில் உள்ள நமது அம்மாவின் ஆலயத்தில் ஜகத்தாத்ரி பூஜை நடத்தி வருகின்றனர். அபிநவ ஜகத்தாத்ரியாம் சாரதாமணிக்கும் சேர்த்து வழிபாடு நடத்தப்படுகிறது.

(தொடரும்)

படித்துப்பாருங்கள்

இன்ப இல்லம்

முக எழிலேப் பாதுகாக்க, மேனிப் பொலிவை நீடிக்கச் செய்ய, பளபளக்கும் பட்டுக் கூந்தலேப் பேண, நகங்களேச் சீர்ப்படுத்த, அகன்ற கண்களேப் பெற, புருவ அழகைக் கூட்ட, இவ்வளவுக்கும் மேலாகக் கணவனேக் கவர எந்தப் பெண்மணிக்குத் தான் ஆசை இராது? மேற்கூறியவைகளில் வெற்றி பெற்ற பிறகு ஒரு பெண்மணிக்குச் சிறந்த முறையில் விதவிதமான உணவு வகைகளேத் தயாரித்துக் கணவனேயும் விருந்தினர்களேயும் திருப்திப் படுத்த வேண்டும் என்றும் ஆசை இருப்பதும் இயல்பே அல்லவா? இதிலும் தேர்ச்சி பெற்ற பிறகு அழகான மகப் பேற்றை அடைந்து அந்த மழலேச் செல்வத்தை நல்ல முறையில் வளர்த்து இன்ப வாழ்க்கை வாழ வேண்டும் என்று அந்தப் பெண் விரும்புவதில் தவறில்லே அல்லவா? இதிலும் வெற்றி பெற்றபின்பு வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அந்தப் பெண் நிச்சயம் விரும்புவாள். பிறகு குழந்தையை நோய் அண்டாமல் வளர்க்க அநுபவ வைத்திய முறைகள் தெரிந்திருந்தால் நல்லது என்று நினைப்பாள். அந்த மாதிரி எண்ணம் வரும் ஒரு குடும்பப் பெண்ணின் கையில் இந்நூலேத் தந்துவிட்டால், சகல சௌபாக்கியங்களேயும் பெற்று விட்டது போல் மகிழ்வாள். ஏனென்றால் இல்லறத்தை நல்லறமாக நடத்துவதற்கு வேண்டிய அத்தனே இன்றியமையாத விஷயங்களேயும் 193 பக்கங்களில் தொகுத்து 'இன்ப இல்ல'மாகத் தந்திருக்கிறர் ஆசிரியை.

இந்நூலே இயற்றியவர் ஒரு பெண்மணி என்ற நினேப்பு நமக்கு ஏற்படும் விதத்தில் இன்ப இல்லத்தில் பெண்ணுக்குத்தான் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது.

ஒரு வார்த்தை: இந்நூலில் கூறியிருக்கும் கருத்துக்கள் அனேத்தையும் தெரிந்து கொண்டு பயன் படுத்தி இன்ப இல்லம் அமைத்துக் கொண்டு இன்ப வாழ்வு வாழ முற்படும் பெண்மணிகள், இந்நூலின் அட்டைப் படத்தில் காணும் நவநாகரிகக் கவர்ச்சிக் கன்னியின் அலங்கோலமான ஆடை அலங்காரத்தை மட்டும் பின்பற்றுமலிருப்பார்களாக!

ஆசிரியை: ''ருக்மிணி'' ராஜேசுவரி; பிரசுரம்: ராஜ்ஸ்ரீ பதிப்பகம், 8, ராமச்சந்திர அய்யர் தெரு, தியாகராய நகர், சென்னே-17. விலே: ரூ. 3-50.

இழைவிலும், வளப்பத்திலும், மென்மையிலும் சிறந்தது **பிரவுன் & போல்ஸன்** வெரய்டி கஸ்டர்டு. பலவகை புட்டிங்குகளையும் தின்பண்டங்களையும் தயாரிக்க எப்போதும் உங்கள் வசம் **பிரவுன் & போல்ஸன்** வெரய்டி கஸ்டர்டு பவுடர் இருக்கட்டும். இது அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப் பட்டதால், வெரய்டி கஸ்டர்டு பவுடர்களில் மிகவும் சிறந்தது.

பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் சைவ உணவுக்காரர்களுக்கு முற்றிலும் உகந்தது—முட்டை கலவாதது.

ஒவ்வொரு பேக்கெட்டிலும் இனிமையான
6 சுவை வகைகள்.



பக்குவ முறை:

$\frac{1}{4}$ கிலோ துருவிய காரட்டு. $\frac{1}{2}$ லிட்டர் பால். 1 கோப்பை சர்க்கரை. 1 பேக்கெட் பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் (எந்த சுவையும் இருக்கலாம்). 1 தேக்கரண்டி ஏலக்காய்ப் பொடி.

துருவிய காரட்டை $\frac{1}{4}$ லிட்டர் பாலில் மிருதுவாகும் வரை வேக வைக்கவும். மத்து அல்லது எலெக்ட்ரிக் மிக்ஸரால் நசுக்கவும். அத்துடன் சர்க்கரை சேர்த்து, தணிந்த சூட்டில் 10-15 நிமிடங்கள் வரை சமைக்கவும். கிளறவும். கஸ்டர்டு பவுடரில் சிறிது குளிர்ந்த பாலை சேர்த்து விழுதுபோல் ஆக்கிக் கொள்ளவும். அதில் மிஞ்சியுள்ள பாலையும் விடவும். அதை சமைத்த காரட்டுடன் கலந்து, இளம் சூட்டில் கொதி நிலைக்குக் கொண்டு வரவும். (கிளறவேண்டியது அவசியம்). பிறகு அடுப்பிலிருந்து இறக்கி, ஏலக்காய்ப் பொடியைத் தூவவும். (விரும்பினால் சீவிய பாதாம் பருப்பு மற்றும் செர்ரிப் பழத்தால் அழகு படுத்தவும்). குளிர வைத்துப் பரிமாறவும்.

இதுபோல் இன்னும் பல வகையான தின்பண்டங்கள் தயார் செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின்வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்!

இலவசம்! பக்குவ முறை நூல் இன்றே ஒரு பிரதிக்கு எழுதுங்கள்,
(கவரின்மீது முகவரியை ஆங்கிலம் / இந்தியில் மட்டுமே எழுதவும்).
பப்ளிஸிடி டிபார்ட்மெண்ட், டெ. K-3

கார்ன் பிராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1 (பி.ஆர்.)
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: **பாரி & கம்பெனி,** டேர் ஹவுஸ், சென்னை-1.
மற்றும் அவர்களது கிளைகள்.

SHB-8471 TH

சுதர்சனம் தன் பெண் பிரேமாவின் கல்யாண விஷயத்தில் தீவிரமாக இறங்கிய நாளன்றே ஓர் இருநூறு பக்க நோட்டுப் புத்தகத்தைக் கையில் வாங்கி வைத்துக் கொண்டார். திருமணம் சம்பந்தமான ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தேவையான பொருள்களுக்கு ஒரு ஜாபிதா எழுதிக் கொண்டார். அவைகளுக்கு எதிரே உத்தேசமான விலைகளையும் அவ்வப்போது கேட்டுக் குறித்துக் கொண்டார்.

சுதர்சனம் 'வருமுன் காப்போன்' ரகத்தில் சேர்ந்தவருமில்லை. 'சிக்கனக்காரரர்' 'கக்காஞ்செட்டி' என்ற பெயர் எடுத்தவருமில்லை. எதையும் முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்ய வேண்டும். எந்தச் சிறு காரியத்தையும் செய்வது என்று முடிவு செய்துவிட்டால், அதைப் பளிச்சென்று பிரகாசிக்கும்படி செய்ய வேண்டும் என்ற கொள்கைகள் உடையவர். அரைகுறையாக எந்த விஷயத்தையும் 'செய்தால் போச்சு!' என்ற அலட்சிய சுபாவத்துடன் அணுக மாட்டார்.

சமீபத்தில் அவர் உறவினர் ஒரு வீட்டுக் கல்யாணத்துக்குப் போய்விட்டு வந்தபோது பல அனுபவபூர்வமான பாடங்களைக் கற்றுக் கொண்டு வந்திருந்தார். உக்கிராண அறையை மேற்பார்க்கச் சரியான நபரைப் போடாததால், மூன்று நாட்கள் தேவையைச் சமாளிக்க ஏராளமாக வாங்கிப் போடப்பட்டிருந்த சாமான்கள் அத்தனையும் முகூர்த்தச் சாப்பாட்டுடன் காலி. சமையல்காரர்கள், வாங்கிப் போட்டிருந்த அயிட்டங்களை அநியாயமாகப் பாழ்படுத்தியிருந்தார்கள். பாத்திரம் தேய்க்கும் வேலைக்கு வந்திருந்தவர்கள் கைக்கு அகப்பட்டதைச் சுருட்டியிருந்தார்கள். நூறு லிட்டர் பால் கவனிப்பாரற்றுத் திரிந்து போய், காப்பி புரோகிராமையே நிலைகுலைய வைத்தது. இந்த விஷயங்கள் எல்லாம் சுதர்சனம் மனத்தில் நன்கு பதிந்து விட்டிருந்தன. தன் வீட்டுக் கல்யாணத்தில் இத்தகைய தகராறுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் விரும்பினார்.

நோட்டுப் புத்தகத்தில் பிள்ளையார் சுழி போட்ட பத்து நாட்களில் அவர் ஒரு சரியான திட்டத்தை உருவாக்கிக் கொண்டார்.


சுதர்சனத்தின் ஆசையெல்லாம் 'கல்யாணம் முடிந்த மறுநாள் கல்யாண மண்டபத்திலிருந்து, காலணா ஒருவருக்குப் பாக்கி என்ற நிலை இல்லாது கையை உதறிக் கொண்டு வீட்டுக்கு வர வேண்டும்' என்பதுதான்.

"ஒரு கல்யாணம் என்றால் ஆயிரம் இரண்டாயிரம் முன்னே பின்னேதான் ஆகும்! இந்த நோட்டைக் கட்டிக் கொண்டு; இப்படிப் பாராயணம் செய்தால் ஆச்சா?" என்று அவர் மனைவி இடித்துக் காட்டும் போதெல்லாம், "அப்போ இந்த நோட்டே

ஸ்பெஷல் பாண்டு கோஷ்டி







அவசியமில்லையே! கடன் அயிட்டங்களை யெல்லாம் மொத்தமாகக் கூட்டிப் பார்த்து விட்டு அப்புறம் மாதக் கணக்கில் விழித்துக் கொண்டிருக்கலாமே!'' என்று வாயை அடக்குவார்.

சுதர்சனம் ஒரு வகையில் அதிருஷ்டசாலி. அதிகம் அலையாமல் மாப்பிள்ளையைத் தேடிக் கண்டு பிடித்துவிட்டார். வரதராஜன் தோற்றத்தில் எவ்வளவு பொருத்தமாக இருந்தானோ அத்தனை பொருத்தமாக அமைந்திருந்தது அவன் ஜாதகமும்! நல்ல பையன். நல்ல உத்தியோகம்.

கல்யாணப் பேச்சுப் பேசி நிச்சயதார்த்தத்துக்கு ஏற்பாடு செய்ய சுதர்சனம் வரதராஜனின் வீட்டுக்குப் போனார். பேச்சுத் தொடங்கியது. ஒன்றிரண்டு சிறு அயிட்டங்களில் சுதர்சனம் விட்டுக் கொடுத்தார். ஒன்றிரண்டு அயிட்டங்களில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசினார். அவர் மனத்தில் எதையும் வைத்துக் கொண்டு பேசும் ஏமாற்றுக்காரர் இல்லை என்பதைப் பிள்ளை வீட்டுக்காரர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்களுக்குப் பேரம் பேசும் வாய்ப்பு இல்லையே என்ற குறை தான். ஆனாலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஒரு சுமுகமான முடிவுக்குச் சீக்கிரமே வந்தார்கள்.

''கல்யாணம் வெகு கௌரவமான முறையில் நடக்கும். நான் ஒப்புக் கொண்ட விஷயங்களை நூற்றுக்கு நூறு செய்து விடுவேன். ஒப்புக்கொள்ளாத

கல்யாணக் கதைகள்-5



கோமதி ஸ்வாமிநாதன்

எந்தச் சிறு விஷயத்தையும் அவசரத்துக்காகவோ, நெருக்கடிக்காகவோ செய்ய மாட்டேன். நான் பிடிவாதக்காரன் என்று நீங்கள் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது. இதையொட்டி கல்யாணத்தில் சிறு வாக்குவாதமும் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

மறுவாரமே நிச்சயதார்த்தம் நடந்தது. முகூர்த்தத் தேதியும் குறிப்பிட்டாயிற்று. கல்யாண மண்டபம், மேளக்காரர், சமையற்காரர் முதலிய ஏற்பாடுகளில் சுதர்சனம் இறங்கினார்.

சுதர்சனம் வாழ்க்கையை ரசித்து அனுபவிக்கும் ஆத்மா, சம்பிரதாய இசைப் பிரியர் என்று நாயனக்காரருக்குத் தெரிந்தபோது அவர் உற்சாகமாக ஜானவாச ஊர்வலத்தில் எந்தெந்த இடத்தில் என்னென்ன கீர்த்தனைகள், திரைப்படப் பாடல்கள், ஆராதனை ஹிந்திப் படப் பாடல்கள் வாசிக்கலாம் என்று ஒரு நிகழ்ச்சி நிரலே கொடுத்து விட்டார். அந்த நிகழ்ச்சி நிரலும் சுதர்சனத்தின் நோட்டுப் புத்தகத்தில் இடம் பெற்றது.

ஜானவாச மோட்டார், சமையற்காரர், பூக்காரன், தேங்காய் வியாபாரி எல்லாமே ஏற்பாடாகி விட்டன. அட்வான்ஸ் கொடுத்தது போக ஒவ்வொருவருக்கும் முகூர்த்தத்துக்குப் பிறகு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதைத் தனித் தனியாகக் கவர் போட்டு எடுத்தும் வைத்து விட்டார் சுதர்சனம். எல்லாம் ஆயிற்று. கொத்தவால்சாவடி கறிகாய் அயிட்டங்கள்தான் பாக்கி.

முகூர்த்த தினத்துக்கு நான்கு தினங்கள் முன்னால் ஒரு நல்ல நாளில் முறைப்படி பிள்ளை வீட்டாரைப் போய்க் கல்யாணத்துக்கு அழைக்க வேண்டும் என்ற சம்பிரதாயத்தைக் கல்யாணி நினைவூட்டினாள். அன்று மாலையே பெரம்பூருக்குக் குடும்ப சகிதம் கிளம்பினார் சுதர்சனம்.

அப்போதுதான் மாப்பிள்ளை வரதராஜன் தன் பெரியப்பா பிள்ளை கப்புரத்தினத்தைச் சுதர்சனத்துக்கு அறிமுகப்படுத்தினான்.

பேச்சின் இடையே கப்புரத்தினம் திடீரென்று சுதர்சனத்தைப் பார்த்து ''ஏன் சார்! ஜானவாச ஊர்வலத்துக்குப் பாண்டு வாத்தியம் ஏற்பாடு பண்ணி விட்டீர்களா? அது ஏ ஒன்றாக இருந்தால்தான் ஜானவாச ஊர்வலம் களை கட்டும்'' என்று கூறி வைத்தான். சுதர்சனத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. பாண்டு வாத்திய அயிட்டத்தை அவர் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. காரணம் அவருக்குப் பாண்டு கோஷ்டி ஒலி பிடிக்காது. நாயனத்துடன் மாறி மாறி பாண்டு பிடாரித்தனமாக ஒலி எழுப்பி நாயனத்தின் இனிமையையே விரட்டி விடுகிறது என்று நினைப்பவர். எத்தனையோ ஜானவாச ஊர்வலங்களில் இந்தப் பரிதாப நிலைமை உருவாவது பற்றிப் பச்சாதாபப் பட்டிருக்கிறார். அந்த மேலை நாட்டுப் பாணி ஒலி நம் சம்பிரதாயங்களுக்கு ஒத்து வராது என்று நினைப்பவர்.

''இல்லை. பாண்டு கிடையாது. முதல்தரமான நாயனத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்று விவகாரத்தை அத்துடன் முடிக்கும் வகையில் 'பட்' என்று பதில் சொன்னார் சுதர்சனம். ஆனால் கப்பு அத்துடன் விட்டுவிடுவதாகத் தெரியவில்லை.

''பாண்டு அவசியம் வேண்டும் சார்! அது எங்கள் குடும்ப சம்பிரதாயம். காசியாத்திரை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் பாண்டு வாத்தியம்! ஏற்பாடு செய்துடுங்கோ! உங்களுக்குத்தான் எத்தனையோ சாமர்த்தியமான சிநேகிதர்கள் இருக்கிறார்களாமே! வரதராஜன் சொன்னான்'' என்று கப்பு சாமர்த்தியமாக மாப்பிள்ளையையும் தன் வலையில் இழுத்துப் போட்டுக் கொண்டான். 'பாண்டு எதற்கு?' என்று வரதராஜன் சொல்ல மாட்டானா என்று சுதர்சனம் ஆவலுடன் எதிர்பார்த்தார். ஹூஹூம்! மாப்பிள்ளைப் பையன் அவர் பக்கம் திரும்பிப் பார்க்கவேயில்லை.

பட்ஜெட்டில் நூறு ரூபாய் கூடவே ஆகும் என்பதற்காகச் சுதர்சனம் கவலைப்படவில்லை. இந்த நெருக்கடியில் நல்ல கோஷ்டி ஏதும் அகப்படாது. அப்படியே அகப்பட்டாலும் நாதஸ்வரக்காரர் கொடுத்த புரோகிராம் பாதிக்கப்படும். பாதி நேரத்தைப் பாண்டு கோஷ்டி விழுங்கி விடும். மேலும் சுதர்சனத்தை நன்கு அறிந்த அவர் நண்பர்கள் 'என்னடா இந்த மனுஷன் பாண்டு வைச்சு ஜானவாசம் நடத்துகிறார்' என்று கேலி வேறு செய்வார்கள்.

சுதர்சனம் விடைபெறும் கட்டத்தில் ஊர்வலக் கார் பற்றிப் பேச்சு வந்தது. இப்போதும் கப்புதான் கேட்டான். ''ஏன் சார்! ஜானவாசத்துக்குப் பெரிய காரா ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?'' என்றான். அந்த நேரத்தில் கப்புவின் குழந்தை ஒன்று அவன் மடியில் வந்து விழுந்து புரண்டது. சுதர்சனம் அதைக் கவனித்தார்.

''இல்லை! ஹெரால்ட் கார்தான்! ஒரு கண்டிஷனோடு என் நண்பர் கொடுத்து உதவச் சம்மதித்திருக்கிறார். மாப்பிள்ளையும் டிரைவரும்தான் காரில் இருக்கலாமாம்! அவர் சொல்றதும் நியாயம்தானே! ஒரு டஜன் குழந்தைகளை ஏற்றி மாப்பிள்ளையை மறைத்து ஊர்வலம் நடத்துவதில் என்ன பிரயோசனம்? அதற்குப் பதில் மாப்பிள்ளையைக் கோவிலிலிருந்து நாலு பேர் பார்க்கும்படி நடத்தியே அழைத்து வரலாமே!... அன்று ஏகப்பட்ட முகூர்த்தங்கள் இருப்பதால் வாடகைக்குத் திறந்த கார்கள் வேறு சுலபமாகக் கிடைக்காது!''

மனதார ஒரு பொய்யைச் சொல்கிறோமே என்று சுதர்சனத்தின் உள்ளம் உறுத்தியது. கார் வாடகைக்கு ஏற்பாடானதுதான். பாண்டு வாத்தியப் பிரச்னை அவர் மனத்தில் ஆவேசத்தை உண்டாக்கி விட்டிருந்ததால் சூடாகச் கப்புவுக்குப் பதில் சொல்ல விரும்பியதன் விளைவு அந்தப் பதில். அவர் காரியாலயத்தைச் சேர்ந்த பலராமனிடம் பாண்டுக் கோஷ்டி அமர்த்தும் பொறுப்பை விடலாம் என்ற நம்பிக்கையுடன் கிளம்பினார்.

மறுநாள் அவர் காதில் ஒரு செய்தி விழுந்தது. கப்புவின் கல்யாணத்தின்போது பாண்டு வாத்தியமும் பெரிய காரும் ஏற்பாடு செய்திருப்பதாக அவனுடைய வருங்கால மாமனார் சொல்லி யிருந்தாராம். ஆனால் கடைசி நேரத்தில் இரண்டுமே இல்லையாம்.



நன்றி- நீடித்த டூலக்ஸுக்கு

டூலக்ஸ், முற்றிலும் அப்பழுக்கற்ற ஒரே சீராக அழகுடன் ஆண்டுக்கணக்கில் நீடித்திருக்கின்றது

உங்கள் வீட்டிலும் நீடித்திருக்கின்ற டூலக்ஸ் பெயின்ட் பூசியிருக்கிறீர்களா? அதன் செலவு, நீங்கள் நினைப்பதைவிட குறைவுதான்.

★ **பரந்த பரப்பிற்கு பூசக்கூடியது:** ஒரு லிட்டர் டூலக்ஸ் கொண்டு அப்பழுக்கில்லாமல் விரிவாக பரந்த இடத்திற்குப் பூச முடியும்-இதனை குறைவாக உபயோகிக்கிறீர்கள் ஏனெனில், உங்கள் தேவை குறைந்துள்ளது.

★ **பூரணமாகக் கழுவக்கூடியது:** சோப்பு-நீர் கொண்டு கறைகள், தூசு அழுக்கு ஆகிய வற்றை சுலபமாகக் கழுவிவிடலாம்.

★ **மங்காத, உரிந்துபோகாத முற்றிலும் ஒரே சீரான பரப்பு:** தரப்பரிசோதனை செய்யப்பட்ட கூட்டுப்பொருள்களினாலானது டூலக்ஸ்.

தேர்ந்தெடுக்க 121 வண்ணஜாலம்: உங்களுக்குகந்தது எந்த நிறம் என்று நீங்கள் எப்பொழுதாவது எண்ணியதுண்டா? தேர்ந்தெடுக்கப்பட்ட அநேகவித நிறங்களுள் உங்கள் வீடு அழகுடன் திகழ்வதற்கு உள்ளம் உற்சாகமூட்டும் எண்ணிறந்த நிறத் திட்டங்கள் இருக்கின்றன. உங்கள் கன்ட்ராக்டருடன் கலந்து பேசி அவரது ஆலோசனையைக்கேட்டு டூலக்ஸ் நிறவகை அட்டையைப் பாருங்கள்.



டூலக்ஸ்–தயாரிப்பவர்களும் விற்பனையாளர்களும்:
தி ஆல்கலி அண்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

டூலக்ஸ்-இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், லண்டனின் டிரேட் மார்க். பதிவுபெற்று உபயோகிப்பவர்கள்: தி ஆல்கலி அண்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா. லிமிடெட்

ACCI(P) 6667

சிறிய கார்கூட இல்லாமல் பழைய கோச்சு வண்டி ஊர்வலம் நடந்ததாம் திண்டுக்கல் லில். தன் ஏமாற்றத்தை இப்படித் தன் ஒன்றுவிட்ட தம்பி கல்யாணத்தில் பழி தீர்த்துச் சமாளித்துக் கொள்ள விரும்புகிறான் என்பதுதான் அந்தச் செய்தி. சுதர்சனம் தமக்குத் தாமே சிரித்துக் கொண்டார். 'மதுரையிலே அடி வாங்கினானாம்; மானாமது ரையிலே மீசை துடித்ததாம்' என்ற வசனம் அவருக்கு நினைவுக்கு வந்தது.

பலராமன் இரண்டு நாட்கள் அலைந்துவிட்டு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பி வந்தான். "சார்! ரொம்பக் கஷ்ட மாப் போச்சு. எல்லாப் பாண்டுக்காரர்களும் அங்கங்கே ஒத்துக்கிட்டாங்களாம். கடைசி யிலே முன்னாலே கார்ப்பரேஷன் பாண்டு கோஷ்டியிலே கிளாரினெட் வாசிக்கக்கிட் டிருந்த கண்ணுசாமியைப் பிடிச்சேன். எங்கேயிருந்தாவது இன்னும் ஐந்து பேரைப் பிடிச்சுக்கிட்டு வந்துடறதாக ஒத்துக்கிட் டாரு. நூறு ரூபாய் பேசி முப்பது ரூபாய் அட்வான்ஸ் கொடுத்துட்டேன். சுமாராத் தான் இருக்கும்" என்றான் சுதர்சனத்திடம். "பேஷ்! அவன் குழாய்களிலிருந்து சத்தம் வந்தால் போதும், சங்கீதம் வேண்டாம்!" என்றார் அவர்.

கோவிலுக்கு எல்லோரும் போய்விட் டார்கள். ஜானவாசம் கிளம்ப வேண்டும். பாண்டு கோஷ்டி இன்னும் வந்து சேர்ந்த பாடில்லை. கப்பு சாயங்காலத்திலிருந்து மூன்று தடவை பாண்டு பற்றிக் கேட்டு விட்டான். பலராமனோ, சுதர்சனத்திடம், "நீங்க கவ லைப்படவே வேண்டாம்! கண்ணுச்சாமி டிரம் அடிக்கிறவனைத் தேடிக்கிட்டுப் போயிருக் காராம் டாக்ஸியிலே. எல்லாரோடேயும் கோவில் வாசலுக்கே கரெக்டா வந்துடுவார்" என்றான் உறுதியாக.

கடைசியில் கோவில் வாசலில் பாண்டு சத்தம் கேட்டது. கப்பு ஜெயித்துவிட்டான். நாயனக்காரர் தனக்கும் பாண்டு கோஷ்டிக் கும் இடைவெளி வேண்டும் என்று சொல்லி விட்டார். ஆகவே ஊர்வலக் காருக்கு நூறு கஜம் முன்பாகவே பாண்டு கோஷ்டி நடந் தது. அதற்குப் பின்னால் நாயனக் கோஷ்டி. அதன் பின் நண்பர் குழாம். அப்புறம் கார். நாயனக்காரர் அந்தத் தெரு முழுதும் கல்யாணி ராகத்தை அலசி விட்டு அடுத்த தெருவில் நுழைந்ததும் கீர்த்தனையைப் பிடித் துக் கொண்டார்.

ஊர்வலக் கார் பக்கத்தில் வந்துகொண் டிருந்த சுதர்சனத்திடம் கப்பு வந்தான். "சார்! மேளக்காரரைக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லிவிட்டு பாண்டு கோஷ்டியை இங் கிலீஷ் நோட்டு வாசிக்கச் சொல்லுங்கோ!... எங்க பாட்டி கேட்கணுமாம்" என்றான்.

"இங்கிலீஷ் நோட்டுத்தானே! வாசிப் பான்! ஆனால் நீங்க பாண்டுக்காரன்கிட்டே போயிடணும்! இந்தப் பகுதியிலே எல்லாம் கொஞ்சம் ஹைகிளாஸ் ஆசாமிகள். கொஞ்சம் நாதஸ்வரம், கொஞ்சம் பாண்டுன்னு கேட்க விரும்ப மாட்டார்கள். மேளம் கேட்பவர்கள் மேளம் கேட்பார்கள். பாண்டு கேட்பவர்கள் பாண்டு கேட்பார்கள்" என்று சொல்லிக் கொண்டே வெகு அக்கறையாகக் கப்புவின்



திருவாவடுதுறை ஆதீனம் திருமந்திர மகா நாடு ஜனவரி மாதம் பதினாறாம் தேதி ஆரம்பமாகி நான்று தொடங்கியது. விழாவுக்குத் தலைமை வகித்த திரு மீ. ப. சோமசுந்தரம் ("சோமு") அவர்களுக்கும், விழாவைத் தொடங்கி வைத்த சென்னை உயர்மன்ற நீதிபதி திரு எஸ். மகராஜன் அவர்களுக்கும், ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அம்பல வாண பண்டார சந்நிதி அவர்கள் பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கி அருளினார்கள்.

கையிலிருந்த இரண்டு வயதுக் குழந்தையை வாங்கி ஊர்வலக் கார் டிரைவர் பக்கம் உட் காரவைத்தார். அப்போது காரில் வேறு எந் தக் குழந்தையும் இல்லை. சுதர்சனம்தான் டிரைவரிடம் சொல்லி வைத்திருந்தாரே!

கப்புவுக்குப் பரம ஆனந்தம். பாண்டை மறந்து, காரில் உட்கார்த்திவைக்கத் தன் மற் றொரு குழந்தையைத் தேடிக் கொண்டு பின் னால் போனான். ஊர்வலம் நகர்ந்து அடுத்த மாட வீதியில் நுழைந்தது. பாண்டு டிரம் எங்கோ தூரத்தில் ஒலித்தது. நாயனக் காரர் சுரசுரப்பிரியாவில் நுழைந்திருந்தார்.

இரண்டாவது குழந்தையைக் கொண்டு வந்தபோது டிரைவர் முறைத்தான். "சார்! இந்தக் குழந்தையையும் தூக்கிக் கொள் ளுங்கள். எங்க முதலாளி வீடு இந்தத் தெரு விலே இருக்கு" என்று சொல்லி விட்டான். சுதர்சனத்தின் தலை தட்டுப்படவில்லை. அதற் குள் கல்யாண மண்டபம் வந்துவிட்டது. பாண்டு சப்தம் இல்லை. மேள ஒலியுடன் எல்லாரும் உள்ளே போய்விட்டார்கள். மற்ற நிகழ்ச்சிகள் காத்திருந்தன.


அன்றிரவு சாவகாசமாகத் தம் நோட்டுப் புத்தகத்தில் சுதர்சனம் அடித்தல் திருத்தல் செய்து கொண்டிருந்தார். பாண்டு கோஷ்டி என்ற அயிட்டத்தின் நேராக அட்வான்ஸ் முப்பது; கொடுக்க வேண்டியது எழுபது என்று இருந்தது. எழுபதை அடித்தார். கண் ணுச்சாமி துணைக்கு நாலு பேரைச் சேர்க்க முடியாமல் வழியில் போன நாலு பேர் கையில் காலாவதியாகிச் சத்தம் எழுப்பாத பித்தளைக் குழாய்களைக் கொடுத்து அவன் மாத்திரம் கிளாரினெட் வாசித்தான். அவன் அப்பா டிரம் அடித்தார். இதற்கு முப்பது போதும் என்று அவனே சொல்லி விட்டான். கப்புவுக்கு இந்தப் பாண்டு போதும் என்று சுதர்சனமும் நினைத்து விட்டார்!

(இக் கதையில் வரும் சம்பவங்கள் உண்மை; பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளன.)

உங்கள் குழந்தைக்கு 3 மாதம் ஆயிற்று...

சீக்கிரம்...பாரெக்ஸ்® புத்தகம்* பெறுவீர்

இலவசம்



இது புதிய தாய்மார்களுக்கு அவசியம்!

*குழந்தையின் சீரான உடல வளர்ச்சிககு உதவும் முதல் திட உணவு பற்றிய எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளுங்கள். அதுதான பாரெகஸ்...குழந்தையின் மென்மையான ஜீரண சக்திக்கு ஏற்ற சரியான புரதச் சத்து அடங்கியது.

இந்தக் கூப்பனுடன் 25 பைசா தபால் தலை இணைத்து, டிபார்ட்மெண்ட் K-I, த.பெ. 16558, பம்பாய் 18 (WB). என்னும் முகவரிக்கு இன்றே அனுப்புக. (எந்த மொழியில் வேண்டுமென்று தெரிவிக்கவும்).

உங்கள் பெயர் ______________________

(கொட்டை எழுத்துக்களில்)

முகவரி ______________________

(கொட்டை எழுத்துக்களில்)

____

குழந்தையின் வயது ____________ மொழி ____________

K-I

CMGF-24-202 TM



"கல்கியின் அட்டைப்படத்தில் ஸ்ரீ ராஜம் ஐயர் எழுதிய கமலாம்பாள் சரித்திரத்தில் ஒரு நிகழ்ச்சியை ஓவியர் "விஜயா" அவர்களின் கைவண்ணத்தில் கண்டு மகிழ்ந்தோம். ஒரு சிறிய தவறு செய்து விட்டார் ஓவியர். 1893ம் வருடத்துக்குத் தக்கபடி ஒன்பது கெஜப் புடவை, விபூதிப் பட்டை, பஞ்சகச்சம் என வரைந்தவர் கதாநாயகனுக்குக் கையில் 'ரிஸ்ட் வாட்ச்' அணிவித்திருக்கிறாரே! 1893ம் வருடம் ரிஸ்ட் வாட்ச் உபயோகத்துக்கு வரவில்லை. 'பாக்கெட் வாட்ச்' தான் உண்டு.

புதுதில்லி-5
22—1—72 மது நடராஜன்

"மாதம் ஓர் உதவி" என்ற அரிய நோக்கத்துடன் நாங்கள் இருபத்தைந்து பெண்கள் சேர்ந்து "மண்டே கிளப்" (Monday Club) என்ற சங்கத்தை இரண்டு வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்தோம். அண்மையில் ஆண்டு விழா கொண்டாடினோம். மாதம் மூன்று ரூபாய் வசூலிக்கப்பட்டு அந்தப் பணம் பலவித நல்ல காரியங்களுக்குச் செலவழிக்கப்படுகிறது. மாதம் முதல் திங்கட்கிழமை '9, பிருந்தவி அவின்யூ' என்ற விலாசத்தில் வீட்டு வேலைக்கு எவ்விதத் தொந்தரவுமின்றிக் காலை 11 மணியிலிருந்து 12 மணிக்குள் சந்திப்போம். எல்லாப் பெண்மணிகளும் அநேகமாக நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஜூலை மாதத்தில் பள்ளிக்கூடப் புத்தகங்கள், தை மாதத்தில் திருமணம் செய்துகொள்ளும் ஏழைப் பெண்ணுக்குத் திருமாங்கல்யம், புடவை முதலியன, தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ நாட்களில் அநாதை இல்லங்களில் உள்ளோருக்கு அறுசுவை விருந்து, ஏழை நோயாளிகளுக்கு மருந்து, குளிர் நாட்களில் கம்பளி என்று இப்படிப் பலப்பல உதவிகள் செய்து வருகிறோம். அடையாறு ஆர்தோபிடிக் ஆஸ்பத்திரிக்கு "செரிப்ரல் பால்ஸி" நாற்காலி வாங்கிக் கொடுத்தோம்.

ஜகத்குரு சங்கராசாரியார் அவர்கள், தங்கள் பத்திரிகையின் மூலமாய் மக்களுக்கு அளிக்கும் நல்வாக்கில், சேவை என்று பிரபலமாகச் செய்யாமல், ஒரு வட்டத்தில் பலர் ஒன்று சேர்ந்து தங்களால் இயன்றதைப் போட்டு அடக்கமாகப் பணியாற்றலாம் என்று கூறியிருந்ததைச் சமீபத்தில் படித்த பொழுது மிக்க மகிழ்ச்சி அடைந்தோம். எங்கள் "மண்டே சாரிடி கிளப்" இந்த விதமாகத்தான் எளிமையாக நடக்கிறது.

சென்னை—18
26—1—72 ஸ்ரீமதி சாவித்திரி வைத்தி

"அரசியலிலிருந்து இப்போது வெளியேறி ஆண்டவனின் பாதத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொள்வோம்" என்கிறார் ராஜாஜி.

நமக்கு அரசியல் கிடையாதா?

உண்டு. ஆனால் நாம் அரசியல்வாதிகள் அல்ல;

இருநூறு ஆண்டுகாலமாக அடிமைப் பட்டுக் கிடந்த நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்து விட்டு,
அதற்குப் பரிசாகப் பிரதமராகவோ, ஜனாதிபதியாகவோ ஆகாமல் —
அந்த மாபெரும் வெற்றியை போஸ்டர் போட்டுப் பிரகடனப்படுத்தத் தெரியாமல் —

அதற்கு ஈடாகவோ, மாற்றாகவோ எந்த ஒரு பல்கலைக் கழகத்திலும் டாக்டர் பட்டம் வாங்கிக் கொள்ளாமல் —
மலர்க் கிரீடம் சூட்டிக் கொண்டு மகிழத் தெரியாமல் —

கேவலம், ஒரு முழத் துண்டைக்கூட ஒரு தனிமனிதனிடம் பெற்றுக் கொள்ளாமல் —
போய்ச் சேர்ந்தாரே ஓர் அப்பாவி
அவர் வம்சத்திலே வந்த நமக்கு அரசியல் உண்டு.

அவர் அரசியல் வாதி அல்ல;
ஆனால் அவருக்கு அரசியல் இருந்தது.
அரசியல் என்றால்
கொடி பிடித்து, கோஷம் போட்டு
போஸ்டர் ஒட்டி, போராட்டம் நடத்துகின்ற
அரசியல் அல்ல!

நமது அரசியலில் —
மூன்று படி வித்தை கிடையாது; மொழி கிடையாது; பிரிவினை கிடையாது;
சினிமா நடிகர்கள் கிடையாது!

நமது அரசியல் ஓர் ஒழுக்கம்! (ஒரு Moral) ஆளுபவனுக்கும் ஆளப்படுபவனுக்கும், படிப்பவனுக்கும் படிப்பிப்பவனுக்கும் வாங்குபவனுக்கும், விற்பவனுக்கும், வேலை கொடுப்பவனுக்கும், செய்பவனுக்கும், இடையே ஒரு சமூகப் பொறுப்பு (Social Responsibility) நிலவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமே —

இந்தியனாகப் பிறந்தவனுக்கு ஆன்மநேயம் வேண்டும் என விழைகின்றோமே —
அந்தத் தார்மிகம்தான் நமது அரசியல்!
இதைச் சில இளைஞர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

இன்னும் பலர் உணர வேண்டும்.

கோவை
20-1-72 மாலன்

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் எண்பத்தொன்பது

வஸந்தம் வந்தது!

மதுராந்தக உத்தம சோழத் தேவரின் முடிசூட்டு விழா நடந்து ஒன்றரை மாதத்துக்கு மேலாயிற்று. பின் பனிக் காலம் வழக்கத்தை விட விரைவாக விடைபெற்றுக் கொண்டு சென்றது. தென்றல் என்னும் தெய்வ ரதத்தில் ஏறிக்கொண்டு வஸந்த காலம் வந்தது. பைங்கிளிகள் மா மரங்களின் குங்கும நிறத் தளிர்களுக்கு அருகில் தங்கள் பவள வண்ண மூக்குகளை வைத்து ஒத்திட்டுப் பார்த்தன. அரச மரங்களின் தங்க நிறத் தளிர்கள் இளங் காற்றில் அசைந்தாடி இசை பாடின. புன்னை மரங்களிலிருந்து முத்துப் போன்ற மொட்டுக்களை உதிர்த்துக் கொண்டு குயில்கள் கோலாகலமாகக் கூவின. இயற்கைத் தேவி உடல் சிலிர்த்தாள். பூமாதேவி குதூகலத்தினால் பொங்கிப் பூரித்தாள். இலைகள் உதிர்ந்து மொட்டையாகத் தோன்றிய மரங்களில் திடீரென்று மொட்டுக்கள் அரும்பிப் பூத்து வெடித்தன. மாதவிப் பந்தல்களும் மல்லிகை முல்லைப் புதர்களும் பூங்கொத்துக்களின் பாரம் தாங்க முடியாமல் தவித்தன. நதிகளில் பிரவாகம் குறைந்து விட்டது. கரையோரமாகப் பளிங்கு போன்ற தெளிந்த நீர் சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தது.

சோழ நாட்டு மக்கள் அகமும் முகமும் மலர்ந்து விளங்கினார்கள். வயல்களில் விளைந்திருந்த செந்நெல்லை அறுவடை செய்து களஞ்சியங்களிலே கொண்டு போய்ச் சேர்த்தாகிவிட்டது. அரசியல் சம்பந்தமான நிச்சயமற்ற நிலைமை நீங்கிக் கவலை தீர்ந்து விட்டது. நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் காமன் பண்டிகை கொண்டாடுவதற்கு மக்கள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். ஆலயங்களில் வஸந்த உற்சவம் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்றன. வீதிகள் சேருமிடங்களிலெல்லாம் நாடக மேடைகள் அமைக்கப்பட்டு வந்தன.

இந்த இனிய காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு வல்லவரையன் பழையாறை நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இந்தத் தடவை அவன் மறைந்தும் ஒளிந்தும் மாறுவேடம் பூண்டும் அந்த மாநகருக்குள் பிரவேசிக்கவில்லை. திறந்திருந்த பிரதான நகர் வாசல் வழியாகத் தங்கு தடையின்றிப் புகுந்து இளையபிராட்டி குந்தவை தேவியின் அரண்மனையை அடைந்தான்.

இளைய பிராட்டி குந்தவை, வானதி முதலிய தன் தோழிகள் பலர் புடைசூழ அரண்மனை வாசலுக்கு வந்து அவனுக்கு முகமன் கூறி வரவேற்றாள்.

நெடுந்தூரம் பிரயாணம் செய்து வந்த களைப்புத் தீர்ந்த பிறகு தன்னை அரண்மனை உத்தியான வனத்தில் வந்து சந்தித்துப் பிரயாண விவரங்களைக் கூறும்படி சொல்லி விட்டுச் சென்றாள்.

வந்தியத்தேவன் இளைப்பாறுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. ஸ்நான பானங்களையும் அதி விரைவில் முடித்துக் கொண்டு உத்தியான வனத்



துக்குச் சென்றான். அங்கே இளைய பிராட்டி அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஒருவரை யொருவர் சந்திப்பதில் யாருக்கு அதிக ஆர்வம் என்று சொல்ல முடியாமலிருந்தது. ஒருவரிடம் ஒருவர் பல செய்திகளைக் கேட்டு அறிவதில் இருவரும் ஆர்வம் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய பரபரப்புக்கு அது மட்டும்தானா காரணம்? தங்கள் வருங்கால வாழ்க்கையைப் பற்றி நிச்சயித்துக் கொள்ள விரும்பியதும் காரணமாக இருக்கலாமல்லவா? அசேதனப் பொருள்களிடத்திலும் கிளர்ச்சியை உண்டாக்கிய இளவேனில் உணர்ச்சி நிறைந்த அவர்களுடைய உள்ளங்களிலும் ஒரு பரபரப்பை உண்டாக்கியிருக்கலாம் அல்லவா?

''ஐயா! தாங்கள் சென்றிருந்த காரியத்தில் பூரண வெற்றியடையவில்லை என்று அறிகிறேன். அது உண்மையா?'' என்று கேட்டாள் இளையபிராட்டி.

''உண்மைதான் தேவி! இதுவரையில் நான் ஏற்றுக் கொண்ட எந்தக் காரியத்திலேதான் பூரண வெற்றியடைந்திருக்கிறேன்?'' என்று வல்லவரையன் கூறிப் பெருமூச்சு விட்டான்.

''அப்படிச் சொல்ல வேண்டாம். என் தம்பியை ஈழ நாட்டிலிருந்து கொண்டு வந்து சேர்த்தீர்கள் அல்லவா? அச்சமயம் அருள்மொழி



வர்மன் வந்ததினால்தானே இந்த வரைக்கும் சோழநாடு தப்பிப் பிழைத்தது?'' என்றாள் குந்தவை.

''அருள்மொழி வர்மருக்கு அநாவசியமான அபாயத்தை உண்டாக்கி, அவரைக் கடும் குளிர் சுரத்துடன் குற்றுயிராகக் கொண்டு வந்து சேர்த்தேன். அதுவும் பூங்குழலி மகாராணியின் உதவியினால்தான். சேந்தன் அமுதனிடமும் பூங்குழலியிடமும் என் நண்பரை ஒப்புவித்து நாகப்பட்டினத்துக்கு அழைத்துப் போகும்படிசொன்னபோது அவர்கள் தஞ்சைபுரிக்கு வந்து இந்தச் சோழ சாம்ராஜ்யத்தில் சிங்காதனம் ஏறி மணி மகுடம் சூட்டிக்கொள்ளப் போகிறார்கள் என்று கனவிலும் நான் கருதவில்லை.....''

''உத்தம சோழ சக்கரவர்த்தியின் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்தவர் தாங்கள்தான் என்பதை நான் மறந்துவிடவில்லை. அவரும் மறந்துவிடவில்லை. பெரிய பழுவேட்டரையருக்குப் பதிலாகத் தங்களைச் சோழ நாட்டின் தனாதிகாரியாக்கிவிட வேண்டும் என்று உத்தமச் சோழர் விரும்பினார்...''

''நல்ல வேளை! தப்பிப் பிழைத்தேன்!''

''அது என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி பதவி சாமான்யமானதா? முதன் மந்திரி பதவியைக் காட்டிலும், மாதண்ட நாயகர் பதவியைக் காட்டிலும் பெரியதாயிற்றே? தனாதிகாரியின் தயவு இல்லாமல் சக்கரவர்த்திகூட எந்தக் காரியமும் செய்ய முடியாதே?''

''தேவி! பெரிய பழுவேட்டரையரின் பாதாளப் பொக்கிஷ நிலவறையில் ஒரு முறை நான் ஒளிந்திருக்க நேர்ந்தது. அப்போது அங்கே கும்பல் கும்பலாகக் கொட்டியிருந்த பொற்காசுகளின் ஒளியில் ஒரு சிலந்திப் பூச்சியின் வலையைப் பார்த்தேன். இறந்து போன மனிதனின் மண்டை எலும்பையும் பார்த்தேன். இனிமேல் அந்தப் பொக்கிஷ நிலவறைப் பக்கமே போகக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன்...''

இளைய பிராட்டி புன்னகை புரிந்துவிட்டு, ''தாங்கள் தனாதிகாரியானாலும் பொக்கிஷ நிலவறைக்குள் போக வேண்டிய அவசியம் நேராது. அந்த நிலவறையில் இருந்த பொருள்களை யெல்லாம் செலவு செய்து பெரியதொரு கடற்படை கட்ட அருள்மொழி தீர்மானித்து விட்டான். புதிய சக்கரவர்த்தியின் அநுமதியையும் பெற்று விட்டான்!'' என்றாள்.

''புதிய சக்கரவர்த்தியும் அவருடைய பட்டமகிஷியும் அருள்மொழி வர்மருடன் கோடிக்கரைக்குச் சென்றிருப்பதாகத் தஞ்சையில் அறிந்தேன்.''

''ஆம். அவர்கள் போகும்போது தங்களையும் உடன் அழைத்துப் போக முடியவில்லையே என்று மிக்க வருத்தப்பட்டுக் கொண்டு போனார்கள்.''

''நான் அதைப் பற்றி வருத்தப்படவில்லை. இப்போதுகூடக் கோடிக்கரை போய் அவர்களுடன் சேர்ந்து கொள்வேன். அருள்மொழி வர்மர் நான் இல்லாத சமயம் பார்த்துக் கொடும்பாளூர் இளவரசியைக் கல்யாணம் செய்து கொண்டது பற்றித்தான் வருந்துகிறேன்.''

''ஏன் ஐயா! தங்கள் நண்பர் என் தோழியை மணந்து கொண்டது தங்களுக்குப் பிடிக்கவில்லையா?''

''தெய்வமே! அம்மாதிரி நான் சொல்லவில்லை. நான் அந்தத் திருமணத்துக்கு இல்லாமற் போனது பற்றித்தான் வருத்தப்படுகிறேன். வானதியை மணந்துகொள்ளக் கொடுத்து வைத்தது அருள்மொழி வர்மரின் பூர்வ ஜன்ம பாக்கியம். தங்கள் தோழி வானதியும் பாக்கியசாலிதான். ஆனால் எதற்காக அவ்வளவு அவசரப்பட்டார்கள்?''

''அவர்கள் அவசரப்படவில்லை. நான் தான் அவசரப்பட்டேன். என் தந்தையும் தாயும் காஞ்சிக்குப் புறப்பட்டுப் போக விரும்பினார்கள். அவர்கள் புறப்படுவதற்குள் திருமணம் நடந்துவிட வேண்டுமென்று சொன்னேன். இதனால் கொடும்பாளூர் பெரிய வேளாரின் மனமும் நிம்மதி அடைந்தது. மகுடாபிஷேக தினத்தில் திடீரென்று தங்கள் நண்பர் உத்தம சோழரின் தலையில் சோழநாட்டுக் கிரீடத்தை வைத்தது பெரிய வேளாருக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியிருந்தது.''

''இன்னும் பலரும் அப்போது அதிர்ச்சி அடைந்திருப்பார்கள்.''

''எங்கள் எல்லோருக்குமே அது வியப்பாகத்தான் இருந்தது. நண்பர்கள் இருவரும் அந்தச் செய்தியை மிக மிக இரகசியமாக வைத்திருந்தீர்கள்...''

''தேவி! தங்களிடம் மட்டுமாவது சொல்லியிருப்பார் என்று நினைத்தேன்.''

''சில மாதங்களுக்கு முன்னதாக இருந்தால் சொல்லித்தான் இருப்பான். என்னிடம் கேளாமல் அருள்மொழி எந்தக் காரியமும் செய்தது கிடையாது.''

''இப்போது ஏன் மாறிவிட்டார்?''

''சகவாச தோஷம்தான்! தங்களுடன் சேர்ந்த பிறகுதான் என் அருமைத் தம்பி இவ்வாறு மனம் மாறி விட்டான். உள்ளும் புறமும் ஒன்றாக

இருந்தவன் கபட நாடகத்திலும் தந்திர மந்திரத்திலும் தேர்ந்து விட்டான்!''

''தேவி! என்பேரில் வீண் பழி சுமத்த வேண்டாம். உத்தம சோழருக்கு முடி சூட்டிய கபட நாடகத்துக்குத் தங்கள் தம்பிதான் முழுதும் பொறுப்பாளி. இப்படி எல்லாரையும் ஏமாற்றலாமா என்று நான் விவாதித்துப் பார்த்தேன். இராமபிரான் அயோத்தி ஜனங்களை ஏமாற்றி விட்டு இரவுக்கிரவே காட்டுக்குச் சென்றதை அருள்மொழி உதாரணமாக எடுத்துக் காட்டினார். தங்களிடமாவது சொல்ல வேண்டாமா என்று கேட்டேன். தம் வாழ்க்கையில் ஒரு முறையாவது தங்களிடம் யோசனை கேளாமல் ஒரு காரியத்தைச் செய்து தங்களிடம் பிற்பாடு 'சபாஷ்' வாங்கப்போவதாகச் சொன்னார். தேவி! இளவரசர் செய்தது தங்கள் மனத்துக்கு உகந்த காரியம்தானே?''

''இதைக் காட்டிலும் எனக்கு உகந்த காரியத்தை இனி யாரும் செய்ய முடியாது. என் தம்பிக்குத் தாங்கள் இக்காரியத்தில் உதவி செய்ததற்கு மிக்க நன்றி!'' என்றாள் இளையபிராட்டி.

''தேவி! அருள்மொழி வர்மர் சிங்காதனம் ஏறி மணிமகுடம் சூடி உலகாளுவதைப் பார்க்கத் தாங்கள் ஆவல் கொண்டிருந்ததாக நினைத்தேன்.''

''முன்னம் அப்படி நான் ஆசை கொண்டிருந்தது உண்மைதான். என் தோழி வானதி அத்தகைய சபதம் செய்த பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். மேலும், தமையன் கொலை செய்யப்பட்டு மாண்ட பின் உடனடியாகத் தம்பி சிங்காதனம் ஏறினால் உலகத்தில் என்ன நினைப்பார்கள்?''

''ஆம் தேவி! இலங்கை இராஜ வம்சத்தில் நடந்திருக்கும் பயங்கரமான செயல்கள் அருள்மொழி வர்மருக்கு இது விஷயத்தில் பெரிதும் கலக்கத்தை உண்டாக்கியிருந்தன. ஆனால் அதைப் பற்றிக்கூட அவர் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. என்பேரில் அந்தக் கொடிய கொலைக் குற்றத்தைச் சிலர் சுமத்த முயன்றபோது, என்னைக் காப்பாற்றுவதற்காகவே சோழ சிம்மாதனத்தில் ஏற அவர் உறுதி கொண்டிருந்தார். நல்ல வேளையாகப் பெரிய பழுவேட்டரையர் அந்தக் குற்றத்தைத் தம்பேரில் போட்டுக்கொண்டு என் மீது அந்த வீண் பழி விழாமல் காப்பாற்றினார்.''

''பாவம்! அந்தக் கிழவர் ஒருவர் இல்லாதபடியால் சோழ நாடே வெறிச் சோடிப்போனதாகத் தோன்றுகிறது.''

''தமையனைத் தொடர்ந்து தம்பியும் போய்விட்டதை நினைத்துப் பார்த்தால் மிக்க வருத்தமாயிருக்கிறது.''

''ஐயோ! சின்னப் பழுவேட்டரையரும் இறந்தே போய்விட்டாரா? நிச்சயந்தானா?'' என்று கேட்டாள் குந்தவை.

''நான் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டபோது அவருக்கு உயிர் இருந்தது. ஆனால் நூற்றைம்பது அடி உயரம் செங்குத்தான மலையிலிருந்து கீழே விழுந்து விட்டவர் எப்படிப் பிழைக்க முடியும்? இறந்து போயிருக்கத்தான் வேண்டும். சின்னப் பழுவேட்டரையரின் மரணத்துக்கும் நானே ஒரு விதத்தில் காரணமாயிருந்தேன் என்று நினைக்கும்போது என் உள்ளம் துடிக்கிறது'' என்றான் வந்தியத்தேவன்.

''ஐயா! அதைப் பற்றியெல்லாம் எனக்கு விவரமாகச் சொல்லுங்கள். மகுடாபிஷேக தினத்தன்று சின்னப் பழுவேட்டரையரைச் சபா மண்டபத்திலிருந்து வெளியேற்றுவதற்குத் தாங்களும் என் தம்பியும் சூழ்ச்சி செய்தீர்கள் அல்லவா? அதிலிருந்து விவரமாகச் சொல்லுங்கள். அதைப் பற்றி என் தம்பியிடம் நான் விவரம் கேட்கவே முடியாமற் போயிற்று. தங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்றே இருந்தேன். 'பெண்களிடத்தில் இரகசியம் எதையும் சொல்லக் கூடாது' என்று எண்ணித்தான் முன்னாலேயே என்னிடம் சொல்லவில்லை. இப்பொழுதாவது சொல்லலாம் அல்லவா?''

''தேவி! அந்தக் காரணத்துக்காகத் தங்களிடம் சொல்லாமல் இல்லை. தங்களை ஒருமுறையாவது ஆச்சரியப்படச் செய்ய வேண்டுமென்று இளவரசர் விரும்பினார்.''

''அப்படியொன்றும் நான் ஆச்சரியப்பட்டு விடவில்லை. நீங்கள் இருவரும் சேர்ந்து இவ்விதம் ஏதோ சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று ஊகித்தேன். ஏதாவது தவறு நேர்ந்துவிடக் கூடாதே என்று சிறிது கவலைப்பட்டுக் கொண்டுமிருந்தேன்.''

''உண்மையில் தவறு நேர்ந்துதான் விட்டது. மிக முக்கியமான காரியம் நிறைவேறி விட்டாலும் அதன் மூலம் நேர்ந்த வேறு விபரீதத்தைத் தடுக்க முடியாமல் போயிற்று. ஒருவேளை தங்களிடம் யோசனை கேட்டிருந்தால் இந்த மாதிரி நேர்ந்திராது!'' என்றான் வந்தியத்தேவன்.

பின்னர் சேந்தன் அமுதனாகிய புதிய மதுராந்தகத் தேவருக்குப் பட்டம் கட்ட வேண்டுமென்று பொன்னியின் செல்வர் தீர்மானித்ததிலிருந்து அவர்கள் போட்ட திட்டங்கள், செய்த சூழ்ச்சிகள்,

நடத்திய காரியங்கள் எல்லாவற்றைப் பற்றியும் விவரமாகக் கூறினன்.

* * *

மதுராந்தகத் தேவருக்கு முடி சூட்டப் போவதாக முன்னுலேயே சொன்னுல் அதற்குப் பல ஆட்சேபங்களும் இடையூறுகளும் ஏற்படும் என்று அருள்மொழிவர்மர் எண்ணினர். கொடும்பாளூர் வேளாரும் திருக்கோவலூர் மலையமானும் முன்போலவே அந்த யோசனையை எதிர்ப்பார்கள். பெரிய பழுவேட்டரையரோ மரணத் தறுவாயில் பொன்னியின் செல்வருக்கே முடிசூட்ட வேண்டும் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றவே அவரைச் சேர்ந்தவர்கள் விரும்புவார்கள். சின்னப் பழுவேட்டரையர் தமது மருமகன் உண்மையான மதுராந்தகன் அல்லவென்று தெரிந்து கொண்டு விட்டார். படகோட்டியின் மகளான பூங்குழலியைச் சிங்காதனத்தில் அமர்த்துவதில் அவருக்கு உற்சாகம் இருக்க முடியாது. செம்பியன் மாதேவி, சேந்தன் அமுதனுகிய மதுராந்தகத் தேவன், பூங்குழலி எல்லோருமே ஆட்சேபணை செய்வார்கள். அவர்களுடைய ஆட்சேபணைகளைப் புறக்கணிக்கச் சுந்தர சோழரும் விரும்பாதவரா யிருக்கலாம். இந்தக் காரணங்களை யெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டுதான் பொன்னியின் செல்வர் தாம் செய்யத் தீர்மானித்த காரியத்தைக் கடைசி நிமிஷம் வரையில் இரகசியமாக வைத்திருக்க விரும்பினர். மகுடாபிஷேக சமயத்தில் தம்மிடம் கொண்ட அன்பினுலோ அல்லது மதுராந்தகனிடம் கொண்ட பொறுமையினுலோ ஆட்சேபணை கிளப்பித் தடை செய்யக் கூடிய பரபரப்புக்காரர்கள் எல்லாரையும் ஒவ்வொருவராக வெவ்வேறு காரணங்களைச் சொல்லி வெளியூர்களுக்கு அனுப்பி வைத்தார். தமக்கு உதவி செய்ய ஒருவர் வேண்டுமே என்பதற்காக வந்தியத் தேவனிடம் மட்டும் தமது அந்தரங்க நோக்கத்தைச் சொல்லியிருந்தார். இருவரும் கலந்து யோசித்துத் திட்டங்கள் வகுத்துக் காரியங்களும் கவனமாகச் செய்து வந்தார்கள்.

இளஞ் சம்புவரையன் கந்தமாறன், பார்த்திபேந்திரப் பல்லவன் ஆகியவர்களை ஊரை விட்டே அனுப்பியாகி விட்டது. ஆனுல் சின்னப் பழுவேட்டரையரை ஊரை விட்டு அனுப்புவது சாத்தியம் இல்லை. அவர் கையினுல் பொன்னியின் செல்வரின் சிரஸில் மணிமகுடத்தைச் சூட்டுவது என்ற பேச்சும் ஏற்பட்டு விட்டது. அந்தச் சமயத்தில் சேந்தன் அமுதனுகிய புதிய மதுராந்தகர் தலையில் முடிசூட்டச் சொன்னுல் அவர் தடை சொல்லாமல் இருப்பாரா? அவர் மறுதளித்தால் அது பெரிய அபசகுனமாகக் கருதப்படும்; அதிலிருந்து வேறு பல குழப்பங்களும் ஏற்படலாம். ஆகையால் முடிசூட்டுகிற சமயத்தில் அவரை மண்டபத்திலிருந்து வெளியேற்றுவதற்கு ஏதேனும் யுக்தி செய்ய வேண்டும் என்று நண்பர்கள் இருவரும் யோசித்தார்கள். முழுதும் திருப்திகரமான யுக்தி எதுவும் தோன்றவில்லை. இச்சமயத்தில் ஆழ்வார்க்கடியான் வந்து ஒரு விசித்திரமான செய்தியைக் கூறினன்.

பாண்டிய நாட்டு ஆபத்து உதவிகளான ரவிதாஸன் கூட்டத்தார் எங்கே போனுர்கள், நந்தினி தேவி இன்னமும் அவர்களுடனே இருக்கிருளா, திருப்புறம்பயம் காட்டில் நள்ளிரவில் முடி சூட்டப்பட்ட சிறுவன் எங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கிறன் என்னும் செய்திகளை அறிந்து வருவதற்காக முதன் மந்திரியின் சம்மதத்துடன் ஆழ்வார்க்கடியானை அருள்மொழி வர்மர் அனுப்பியிருந்தார். பாதாளச் சிறையிலிருந்து தப்பிச் சென்ற கருத்திருமன் அவர்களுடன் சேர்ந்து கொண்டிருக்கிறுனு, கந்தமாறன் வந்து சொன்னபடி பழைய மதுராந்தகன் இறந்தது உண்மையா, அல்லது அவனும் தப்பிப் பிழைத்துச் சதிக் கூட்டத்தாருடன் சேர்ந்திருக்கிறுனு என்று தெரிந்து கொண்டு வருவதற்கும் திருமலை நம்பி சென்றிருந்தான். அவன் இச்செய்திகளை அறிந்து வருவதற்கு வெகு காலம் ஆகும் என்று எண்ணி யிருந்தார்கள். ஆனுல் ஆழ்வார்க்கடியான் சில தினங்களிலேயே திரும்பி வந்து விட்டான்.

ரவிதாஸன் கூட்டத்தைச் சேர்ந்தவனும் படகோட்டி முருகையன் மனைவியுமான ராக்கம்மாளைக் கொல்லி மலைக்கு அருகில் அவன் பார்த்தான். அவள் எங்கே போகிருள் என்பதைக் கவனித்து அவளைத் தொடர்ந்து சென்ருல் ரவிதாஸன் கூட்டம் இருக்கும் இடத்தைச் சேரலாம் என்று ஆழ்வார்க்கடியான் எண்ணினுன். ஆனுல் ராக்கம்மாள் தஞ்சைபுரிக்குச் செல்லும் மார்க்கத்தில் சென்றது அவனுக்கு வியப்பு அளித்தது. ஆயினும் அவளைத் தொடர்வதே ஆபத்துதவிகளைப் பற்றி அறிவதற்கு உபாயம் என்று எண்ணி மாறுவேடம் பூண்டு அவன் அறியாதபடி பின் தொடர்ந்து சென்ருன். உறையூருக்கு அருகில் வந்த பிறகு, தஞ்சையில்



எழில் கொஞ்சும் தங்க, வைர நகைகள்
சோட்டாபாயின் கைவினைச் சிறப்புப் படைப்பு
சோட்டாபாய் & கம்பெனி
அரசினர் அங்கீகாரம் பெற்ற மதிப்பாளர்கள்
தங்க, வைர, நகை வியாபாரிகள்
191, நேதாஜி போஸ் ரோடு
சென்னை-1.
போன்: 32024



பொன்னியின் செல்வருக்கு நடக்கப் போகும் முடிசூட்டு விழாவைப் பார்ப்பதற்காக மக்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ராக்கம்மாளும் கலந்து கொண்டாள். ஆயினும் ஆழ்வார்க்கடியான் அவளை விடாமல் பின் தொடர்ந்து தஞ்சை வரைக்கும் வந்தான். ராக்கம்மாள் கூட்டத்தோடு கூட்டமாகத் தஞ்சைக் கோட்டைக்குள்ளும் புகுந்து சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனையைச் சுற்றி வட்டமிட்டதைக் கண்டதும் அவனுக்கு மிக்க வியப்பு உண்டாயிற்று. உடனே அருள்மொழிவர்மரிடமும் வந்தியத்தேவனிடமும் போய் இச் செய்தியைத் தெரிவித்தான். ராக்கம்மாளைச் சிறைப்படுத்தி விடலாமா என்று முதலில் அவர்கள் யோசனை செய்தார்கள். அப்படிச் செய்ய வேண்டாம் என்றும், அவள் எதற்காக வந்திருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்வதே முக்கியமான தென்றும் தீர்மானித்தார்கள். சின்னப் பழுவேட்டரையரின் மகளுக்கு அவள் ஏதோ செய்தி கொண்டு வந்திருக்க வேண்டும் என்றும் ஊகித்தனர். சின்னப் பழுவேட்டரையரிடம் இப்போது அதைச் சொல்ல வேண்டாம் என்றும், முடிசூட்டு விழாவின்போது அவரைச் சபா மண்டபத்தி லிருந்து அப்புறப்படுத்துவதற்கு அதை உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் முடிவு செய்தார்கள்.

ஆழ்வார்க்கடியான் மறுபடியும் சின்னப்பழுவேட்டரையரின் அரண்மனைக்கு அருகில் சென்றபோது ராக்கம்மாளைக் காணவில்லை. முடிசூட்டு விழாவுக்காக வந்த ஜனக் கூட்டம் மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டிருந்தது. ஆழ்வார்க்கடியான் அந்தக் கூட்டத்தில் கலந்து நின்று அரண்மனை வாசலைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு பெண்கள் அரண்மனையிலிருந்து வெளியில் வந்தார்கள். அவர்களில் ஒருத்தி இடுப்பில் குழந்தையையும் வைத்துக்கொண்டிருந்தாள். வந்தவர்களில் ஒருத்தி ராக்கம்மாள் என்று உடனே தெரிந்து விட்டது. இன்னொருத்தி தலையில் முக்காடிட்டு முகத்தைப் பாதி மறைத்துக் கொண்டிருந்தாள். அவள் சின்னப் பழுவேட்டரையரின் மகளாக இருக்கலாம் என்று திருமலை நம்பி ஊகித்தான். அவர்களைத் தடுத்து நிறுத்துவதா, அல்லது எங்கே போகிறார்கள் என்று பார்ப்பதா என்பதை அவனால் நிச்சயிக்க முடியவில்லை. இதற்குள் அவர்கள் ஜனக் கூட்டத்தில் புகுந்து மறைந்து விட்டார்கள். கோட்டை வாசலை நோக்கித்தான் அவர்கள் போயிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டு ஆழ்வார்க்கடியான் அங்கே போனான். கோட்டை வாசலுக்கு அப்பால் சிறிது தூரத்தில் வைத்திருந்த பல்லக்கில் அவர்கள் ஏறுவதையும் குதிரை வீரர்கள் புடைசூழப் போவதையும் பார்த்து விட்டான். இனிச் சின்னப் பழுவேட்டரையரிடம் இந்தச் செய்தியைச் சொல்லாமல் தாமதிக்கக் கூடாது என்று சபா மண்டபத்துக்கு வந்தான்.


அந்தச் சமயம் பொன்னியின் செல்வர் தமிழ்ப் புலவரைப் பார்த்துப் பேசும் சமயமாயிருந்தது. சின்னப் பழுவேட்டரையரிடம் ஆழ்வார்க்கடியான் செய்தியைச் சொன்னதும் அவர் உடனே அவனுடன் கிளம்பினார். தமது அரண்மனைக்குச் சென்று மகளைத் தேடினார். மகள் இல்லை என்று அறிந்து திடுக்கிட்டார். ஆழ்வார்க்கடியான் கூறும் செய்தி உண்மையாகவே இருக்கவேண்டும் என்று தீர்மானித்தார். திரும்பி அவர் சபா மண்டபம் வருவதற்குள்ளே ''மதுராந்தக உத்தமச் சோழ சக்கரவர்த்தி வாழ்க!'' என்ற கோஷங்கள் கிளம்பின. சபா மண்டபத்தில் நடந்ததை அறிந்தபிறகு இனி தமக்கு அங்கே வேலை இல்லை என்பதை உணர்ந்து கொண்டார். சில அந்தரங்கமான ஆட்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு ஓடிப்போன தம் மகளைத் தேடிக்கொண்டு புறப்பட்டார். தம்முடைய புதல்வி சோழ குலத்தின் பரம்பரைப் பகைவர்களான பாண்டிய குலத்து ஆபத்துதவிகளுடன் சேர்


வதா என்று எண்ணியபோது அவருடைய நெஞ்சம் கொதித்தது. அதைக் காட்டிலும் அத்தகைய மகளைத் தம் கையினலேயே கொன்றுவிடுவது மேல் என்று எண்ணி விரைந்து சென்ருர்.

அன்றிரவு உத்தமச் சோழ சக்கரவர்த்தியின் பட்டாபிஷேக ஊர்வல வைபவங்கள் கோலாகலமாக நடந்து முடிந்த பிறகு ஆழ்வார்க்கடியான் நம்பி அருள்மொழி வர்மரிடம் அன்று மத்தியானம் நடந்த விவரங்களைக் கூறினன். அருள்மொழி வர்மர் வந்தியத்தேவனேடு கலந்து யோசித்தார். ரவிதாஸன் கூட்டத்தார் தந்திர மந்திரங்களிலே எவ்வளவோ கைதேர்ந்தவர்கள் என்பது அவர்கள் மூவருக்கும் தெரிந்திருந்தது. முன் கோபக்காரரான சின்னப் பழுவேட்டரையரால் அவர்களுடைய தந்திரத்தை வெல்ல முடியாது என்றும், அவர்களிடம் சிக்கிக் கொண்டு ஆபத்துக்குள்ளாவார் என்றும் எண்ணினர்கள். தமது அருமை மகளையே கொல்லுவது போன்ற விபரீதமான காரியத்தைச் செய்யக் கூடியவர் என்றும் நினைத்தார்கள். ஆகையால், சின்னப் பழுவேட்டரையரைக் காப்பாற்றி அழைத்து வருவதற்கும், பாண்டிய நாட்டு ரவிதாஸன் கூட்டத்தார் எங்கேயிருக்கிறர்கள், என்ன திட்டமிட்டிருக்கிறர்கள் என்பதை அறிந்து வருவதற்கும்வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் புறப்பட்டுப் போவது நலம் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இவ்வாறு சின்னப் பழுவேட்டரையர் தமது மகளையும் அவளைத் தம்மை அறியாமல் அழைத்துச் சென்ற சதிகாரர்களையும் பின்தொடர்ந்து போக, அவர் சென்ற வழியை ஆங்காங்கு விசாரித்துக்கொண்டு வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் சென்ருர்கள். சின்னப் பழுவேட்டரையர் குறுக்கும் நெடுக்குமாக அங்குமிங்கும் அலைந்துவிட்டுச் சென்றிருக்க வேண்டும் என்று பின்னல் சென்ற இருவரும் கண்டார்கள். இதிலிருந்து அவருடைய மகளைக் கொண்டு போனவர்கள் வேண்டுமென்று அவரை ஏமாற்றி வேறு வழியில் போகச் செய்ய முயன்றிருக்க வேண்டும் என்றும் முடிவு கட்டினர்கள். காவேரிக் கரையோரமாக மேற்கு நோக்கி நெடுந் தூரம் பிரயாணம் செய்த பிறகு, அமராவதி நதி காவேரியுடன் கலக்கும் இடத்தில் திசை மாறி, அந்தக் கிளை நதிக் கரை வழியாகத் தென் மேற்குத் திசையில் பிரயாணம் செய்தார்கள். சேர நாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் எல்லையாக அமைந்திருந்த ஆனை மலைப்பிரதேசத்தை அடைந்தார்கள். ஆனைமலையின் அடிவாரத்தை அடைந்த பிறகு பிரயாணம் மிகக் கடினமாகி விட்டது. அந்த வனப் பிரதேசத்தில் மரங்கள் மிக அடர்த்தியாகவும் செழிப்பாகவும் வளர்ந்திருந்தன. வன விலங்குகளின் பயங்கர உறுமல் நாலா திசைகளிலும் கேட்டது. குதிரைகளைச் செலுத்திக் கொண்டு போவது மிகவும் சிரமமாக இருந்தது. குதிரைகளை விட்டு விட்டுக் கால்நடையாகப் போனல் காட்டு மிருகங்களுக்கு அவை இரையாகி விடலாம் என்ற பயமும் இருந்தது.

கடைசியில் நண்பர்கள் இருவரும் மேலே குதிரையைச் செலுத்திப் போக இயலாத மிக அடர்ந்த காட்டுப் பிரதேசத்தை அடைந்தார்கள். சமீபத்தில் எங்கேயோ வேறு ஒரு குதிரை கனைக்கும் சத்தம் கேட்டது. அந்த இடத்தைத் தேடிப் பிடித்து அடைந்தபோது சின்னப் பழுவேட்டரையர் ஏறி வந்த குதிரை அங்கிருப்பதையும், அதைக் காவல் புரிய ஆள் ஒருவன் இருப்பதையும் கண்டார்கள். சின்னப் பழுவேட்டரையரும் அவருடன் வந்த மற்ற மூவரும் அங்கிருந்து கால்நடையாகச் சென்றிருப்பதாக அந்த ஆள் தெரிவித்தான். தங்கள் குதிரைகளையும் அந்த ஆளைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு நண்பர்கள் மேலே போனர்கள். சூரிய வெளிச்சமே உள் நுழையாத கனுந்தகாரம் நிறைந்த காடுகளின் வழியாக அவர்கள் வெகு தூரம் சென்ருர்கள். பின்னர் மரமடர்ந்த மலைப் பாதைகளில் ஏறிப் போனர்கள். பத்து அடி தூரத்துக்கு அப்பால் என்ன இருக்





அசல் இஞ்சின் ரயில் அல்ல. அறுபத்தாறு வயதை எட்டிவிட்ட எர்னஸ்ட் டிக்ஸன் என்பவர் 10,736 வத்திக் குச்சிகளைக் கொண்டு செய்த பொம்மை. இதை இவர் செய்வதற்கு எடுத்துக்கொண்ட நாட்கள் 376. டிட்பிட்ஸ் - பிரின்ஸ்.

கிறது என்று தெரிந்து கொள்ள முடியாத பாதைகளில் அவர்கள் போகவேண்டியிருந்தது.

கடைசியில் சற்று வெளிச்சம் தெரிந்த ஓர் இடத்தை அடைந்தார்கள். அங்கே மலை மீதிருந்து அருவி ஒன்று செங்குத்தாக விழுந்து கொண்டிருந்தபடியால் இந்த இடைவெளி ஏற்பட்டிருந்தது. அதற்கு அப்பால் தொடர்ந்து பிரயாணம் செய்வது இயலாத காரியமாகத் தோன்றியது. ஏனெனில் மலைச் சுவர் அங்கே அவ்வளவு செங்குத்தாக மேலெழுந்தது. எவ்வளவு தேடிப் பார்த்தும் மேலே ஏறப் பாதை எதுவும் தென்படவில்லை. அருவியில் குளித்துச் சிறிது இளைப்பாறிவிட்டுத் திரும்பிப் போக வேண்டியதுதான் என்று நண்பர்கள் தீர்மானித்தார்கள். சின்னப் பழுவேட்டரையரும் அவருடன் வந்த ஆட்களும் வன விலங்குகளுக்கு இரையாகியிருக்க வேண்டும் என்று எண்ணினார்கள்.

இந்தச் சமயத்தில் அவர்கள் எதிர்பாராத அதிசயமான காட்சி ஒன்றைக் கண்டார்கள். மலைமேலே அருவியின் நெடுவீழ்ச்சி எங்கிருந்து ஆரம்பமாயிற்றோ, அங்கே இரண்டு மனித உருவங்கள் தெரிந்தன. போரிட்டுக் கொண்டே அவர்கள் அருவி விழும் இடத்தை நெருங்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களை உற்றுப் பார்த்ததில், இருவரும் தங்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவர்கள்தான் என்று தெரிந்தது. ஒருவர் சின்னப் பழுவேட்டரையர்; இன்னொருவர் அவருடைய மகளை மணந்தவரான பழைய மதுராந்தகர். ஆகா! சண்டை என்ற வார்த்தையைக் கேட்டாலே முகத்தைச் சுளுக்கிக் கொண்டிருந்த மதுராந்தகர் இதற்குள் இவ்வளவு லாகவமாக வாளைக் கையாளக் கற்றுக் கொண்டு விட்டது என்ன விந்தை? காலாந்தக கண்டருடன் சரிசமானமாகக் கத்திச் சண்டை இடுகிறாரே? ஐயோ! காலாந்தக கண்டர் பின்வாங்குகிறாரே? உண்மையிலேயே களைப்புற்றுப் பின்வாங்குகிறாரா? அல்லது எப்படியும் தமது மருமகப் பிள்ளையாயிற்றே என்று தயங்கிப் பின்வாங்கி வருகிறாரா? எப்படி இருந்தாலும் அபாயகரமான அருவி விழும் முனையை நெருங்கி வருகிறாரே! ஐயோ! அங்கே செங்குத்தான அருவிப் பள்ளம் என்பது அவருக்குத் தெரியாதுபோலிருக்கிறதே!

வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் பெருங் கூச்சல் போட்டு அவருக்கு எச்சரிக்கை செய்ய முயன்றார்கள். அவர்களுடைய முயற்சி பயன்படவில்லை. அருவி விழும்போது எழுந்த 'சோ' என்ற சத்தம் நூறு சிங்கங்களின் கர்ஜனையையும் இருநூறு யானைகளின் பிளிறல்களையும் விழுங்கிவிடக் கூடியது. இந்த இரண்டு மனிதர்களுடைய குரல் அந்தச் சத்தத்தை அடக்கிக் கொண்டு மேலே எழக் கூடுமா, என்ன?

ஆகவே, அவர்கள் கண் முன்னாலேயே அந்தக் கோர சம்பவம் நிகழ, அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டியதாயிற்று. எதிரியாகிய மருமகனைப் பார்த்துப் போரிட்டுக் கொண்டு சிறிது சிறிதாகப் பின் வாங்கி வந்த சின்னப் பழுவேட்டரையர் அருவி முனைக்கு வந்து கால்கள் நழுவிச் செங்குத்தான அருவிப் பள்ளத்தில் விழுந்துவிட்டார்! அவருடனே போரிட்டுக் கொண்டு வந்த பழைய மதுராந்தகன் பாறை முனையில் வந்து எட்டிப் பார்த்துவிட்டு மறு நிமிடம் மறைந்துவிட்டான்.

சின்னப் பழுவேட்டரையர் கால் நழுவிய இடத்திலிருந்து கீழேயிருந்த பள்ளம் சுமார் முக்கால் தென்னை மரம் உயரம் இருக்கும். இவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தவர் உயிர் பிழைப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. ஆயினும் அந்த மகாவீரருடைய உடலையாவது பார்க்க

லாம் என்று எண்ணி நண்பர்கள் இருவரும் அருவிப் பள்ளத்தின் அருகில் ஓடினார்கள். சின்னப் பழுவேட்டரையரின் உடலைக் காணவில்லை. அருவி விழுந்து விழுந்து அங்கே பெரும் பள்ளமாகித் தண்ணீர் ததும்பிச் சுற்றிலும் இருந்த பாறைகளில் மோதிக் கொண்டிருந்தது. சின்னப் பழுவேட்டரையருடைய உடல் அந்த ஆழமான அருவிக் குளத்தில் முழுகியிருக்க வேண்டும் என்று ஊகித்தார்கள். ஒருவிதத்தில் இது நல்லதுதான். கரையில் பாறைகளின் மீது விழுந்திருந்தால் அந்த மகா வீரரின் உடல் சின்னாபின்னமாகப் போயிருக்கும். ஆழமான குளத்திலே விழுந்தபடியால் அந்தக் கதியிலிருந்து தப்பிவிட்டார். விரைவில் அவருடைய உடலை அருவி நீர்ச் சுழல் வெளியிலே கொண்டு வந்து தள்ளும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.


அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சின்னப் பழுவேட்டரையர் வெளியில் வந்தார். நண்பர்கள் இருவரும் விரைந்து குளத்தில் குதித்து அவரைக் கரையில் கொண்டு வந்து சேர்த்தார்கள். முதலில் உயிரற்ற உடல் என்றுதான் எண்ணினார்கள். ஆயினும் ஒரு வேளை உயிர் இருக்கக் கூடாதா என்ற இலேசான நம்பிக்கையும் அவர்கள் உள்ளத்தில் இருந்தது. ஆகையால் தண்ணீரில் முழுகியவரை உயிர்ப்பிப்பதற்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார்கள். வெகு நேரத்துக்குப் பின்னர் சின்னப் பழுவேட்டரையர் மூச்சு விட்டுக் கண் விழித்துப் பார்த்தார். அவரால் அதிகம் பேச முடியவில்லை. ஆயினும் சொல்ல வேண்டியதைச் சில வார்த்தைகளில் சொல்லி விட்டார்.

மிகப் பிரயாசையின் பேரில் காலாந்தக கண்டர் அந்த மலை உச்சியை அடைந்தார். அங்கே ஏறக்குறைய நூறு பேருக்கு நடுவில் அவருடைய மகள் இருந்தாள். ரவிதாஸன் காலாந்தக கண்டரைத் தங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி அழைத்தான். அவருடைய மருமகனே பாண்டிய நாட்டுக்கு உரியவன் என்றும், அவனுக்குப் பட்டம் கட்டப் போவதாகவும், சேர மன்னனும் இலங்கை அரசன் மகிந்தனும் புதிய பாண்டியனுக்கு உதவி செய்ய முன்வந்திருப்பதாகவும் கூறினான். அவர்கள் உத்தேசங்களை அறிவதற்காக முதலில் சின்னப் பழுவேட்டரையர் ரவிதாஸன் கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார்.

பின்னர், அவர்கள் மீது சதிகாரர்கள் என்று குற்றம் சுமத்தித் தம் குமாரியைத் தம்முடன் அனுப்பிவிடும்படி கேட்டார். "உம்முடைய மகள், உம்முடன் வந்தால் அழைத்துப் போகலாம்!" என்றான் ரவிதாஸன். சின்னப் பழுவேட்டரையர் மகளுடைய முகத்தைப் பார்த்தார். அவள் தன் கணவனுடைய கதி தனக்கும் ஆகட்டும் என்று கூறி அவருடன் வர மறுத்துவிட்டாள். "உன்னை இவர்களுடன் விட்டுப் போவதைக் காட்டிலும் என் கையினாலேயே கொன்று விடுகிறேன்!" என்று கூறிக் காலாந்தக கண்டர் வாளை ஓங்கினார். அதுகாறும் மறைவாக இருந்த மதுராந்தகன் அச்சமயம் திடீரென்று தோன்றி, "என் மனைவியைக் கொல்வதற்கு நீ யார்?" என்று கூறி வாட்போர் தொடங்கினான். இதனால் காலாந்தக கண்டருக்குச் சிறிது திகைப்பு உண்டாயிற்று. தம் மருமகனைத் தம் கையினாலேயே கொன்று தம் குமாரியைக் கைம்பெண் ஆக்குவது நியாயமா என்ற ஐயம் அவர் மனத்தில் உதித்துவிட்டது. இவ்வாறு மனத்தில் ஏற்பட்ட குழப்பத்தினால் தீவிரமாகப் போர் செய்ய முடியவில்லை. யோசித்துக்கொண்டே பின் வாங்கினார். பின்னால் அருவிப் பள்ளம் இருப்பது தெரியாமல் அதில் விழுந்து விட்டார்.

இதையெல்லாம் தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்துவிட்டு, "நான் இனி உயிர் பிழைக்கப் போவதில்லை. என் முடிவு நெருங்கி விட்டது. என்னை இங்கேயே விட்டுவிட்டு நீங்கள் விரைந்து செல்லுங்கள். சேர நாட்டின் மீதும் ஈழ நாட்டின் மீதும் உடனே சோழ சைன்யம் படை எடுத்துச் செல்லட்டும். பொன்னியின் செல்வரை மதுரைக்கு அழைத்துச் சென்று, 'சோழ பாண்டியன்' என்ற அபிஷேகப் பெயரைச் சூட்டிப் பட்டம் கட்டச் செய்யுங்கள். இந்த மூன்று காரியங்களையும் உடனே செய்யாவிட்டால், சோழ சாம்ராஜ்யத்துக்குப் பேரபாயம் உண்டாவது நிச்சயம். மறுபடியும் பழையபடி பாண்டிய ராஜ்யம் தனியாகப் பிரிந்துபோய்விடும்! உடனே விரைந்து செல்லுங்கள்!" என்று காலாந்தக கண்டர் கூறினார். அவரை இந்த நிலையில் அநாதையாக விட்டு விட்டுப் போக நண்பர்களுக்கு மனம் வரவில்லை. ஆகையால் இருவரில் ஒருவர் அவரைப் பார்த்துக் கொள்வது என்றும், இன்னொருவர் தஞ்சைக்குப் போவதென்றும் தீர்மானித்தார்கள். இருவரில் வேகமாகக் குதிரை விடக் கூடியவன் வந்தியத் தேவன் ஆதலால், அவனே புறப்பட வேண்டியதாயிற்று.

(தொடரும்)



இரு இல்லத்தரசிகளின் சந்திப்பு

இவ்வாரம்
உரையாடலில் பங்கு கொள்வோர் :

ஸ்ரீமதி
சரஸ்வதி வெங்கட்ராமன்
ஸ்ரீமதி
ஜெயலக்ஷ்மி பைதல் நாயர்

மாலை மங்கும் நேரம். மயிலாப்பூர் கபாலீசுவரர் கோபுர விளக்குகள் பிரகாசிக்கத் தொடங்கின.


வடக்கு மாட வீதியிலிருக்கும் டி. கே. மூர்த்தி அண்டு கோ. நிறுவனம். ஒருபுறம் நகைத் தொழிலாளர்களின் கைவண்ணத்தில் விதம் விதமாகத் தங்க-வைர நகைகள் உருவாயின. இன்னொருபுறம் 'ஷோ கேஸ்'. வாடிக்கையாளருக்காகப் போடப்பட்டிருக்கும் வரிசையான நாற்காலிகளுள் ஒன்றில் இல்லத்தரசிகள் அமர்கின்றனர்.

ஸ்ரீமதி சரஸ்வதி வெங்கட்ராமன்: எப்படி இன்றைக்கு இவ்வளவு சாவகாசமாக வர முடிந்தது? ஞாயிற்றுக் கிழமைகூட இல்லையே?

ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி பைதல் நாயர் : இன்றைக்கு வார லீவு. உங்களைப் பார்த்து விட்டு அப்படியே கோயிலுக்கும் போகலாம் என்றிருக்கிறேன். ஆபீசோ கடையோ என்றால் ஞாயிறு லீவுகிடைக்கும். எங்கள் வீட்டுக்காரர் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் இருப்பவராச்சே!...

சர : இப்போது பேர் மாறிப் போச்சே ! பல்லவா போக்குவரத்துக் கழகம்னு!

ஜெய: ஆமாம்! பழக்கம் காரணமாக இன்னும் பழைய பெயர் தான் சொல்ல வந்து விடுகிறது.



திரு வெங்கட்ராமன்



திரு பைதல் நாயர்

சர: கேரளாவை நீங்கள் விட்டு வந்து எவ்வளவு வருஷங்களாகின்றன ?

ஜெய: அவர் எஸ். எஸ். எல். ஸி. வரை படிச்சுட்டு வேலைக்காக மெட்ராஸ் வந்தார். டிரான்ஸ்போர்ட்டில் வேலை கிடைச்சதும் சேர்ந்து விட்டார். பஸ் கண்டக்டராகி ஒன்பது வருடங்கள் இன்றோடு முடிந்துவிட்டது.

நகை விற்பனையில் உங்கள் வீட்டுக்காரருக்கு எத்தனை வருட அனுபவம்?

சர: சுமார் இருபது வருடங்கள். இன்று இந்த டி. கே. மூர்த்தி நிறுவனத்தில் பிரதான ஊழியராக இருக்கிறார். எங்கள் பாடு தேவலை. டிரான்ஸ்போர்ட்டில் டூட்டி நேரங்கள் மிகவும் தொல்லை பிடிச்சதாக இருக்குமே?

ஜெய: முதல் ஷிப்டு அதிகாலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகும். அதற்குப் போக அதிகாலையில் மூணு மணிக்கே எழுந்துவிடுவார். பகல் ஷிப்டு பிற்பகல் இரண்டு மணிக்கு. டூட்டி முடிஞ்சு வர இரவு பதினொரு மணியாகும். சிரமம்தான்.

சர: தினசரி படிச் செலவு? அதாவது 'பேட்டா' உண்டா?

ஜெ: இரண்டு ரூபாய். ஆனால் காப்பிச் செலவு போக மீதியை அப்படியே கொண்டுவந்து கொடுப்பார். இப்படிச் சேர்த்தால்தான் ஏதாவது சின்ன நகை வாங்கலாம்!

இந்தக் காலத்தில் பழங்கால நகை டிசைன்களை விரும்பறாங்களா?

சர: இப்போதெல்லாம் பணக்கார வீட்டுப் பெண்கள் பழங்கால நகைகளுக்குத் திரும்பி விட்டார்களென்று எங்கள் வீட்டுக்காரர் சொல்லுகிறார். மாங்காய் மாலை, அட்டிகை, முதலிய பழைய நகைகள்தான் பாஷனும்! மெட்ராஸ் மட்டுமில்லாமல், பம்பாய், டில்லி, கல்கத்தா போன்ற வடநாட்டு நகரங்களிலும் விரும்புகிறார்களாம். 'ஆன்டிக் ஸ்டைல் ஜுவெல்'லுன்னு புதுசா நாமகரணம் சூட்டியிருக்காங்க. அதாவது பழங்கால மோஸ்தர் நகைகள்னு அர்த்தம். அது சரி இப்போதெல்லாம் லேடீஸ் ஸ்பெஷல்னு விடறாங்களே, இதில் கண்டக்டர்களாகப் போகிறவர்களுக்கு விசேஷப் பயிற்சி கொடுத்தால் நல்லதில்லையா?

ஜெய : நான்கூடக் கேட்டேன் — ஒரு தடவை. அப்படி விசேஷப் பயிற்சி ஒன்றும் கிடையாது என்கிறார்.

சர: பஸ்களில் கூட்டம் அதிகமாக இருக்கும்போது ஜேப்படிகள் நடக்குமே...

ஜெய: போன மாசம்கூட நடந்தது. மந்தவெளியிலிருந்து வட பழனி போகும் 12-பியில் இரவு ஏழரை மணி சுமாருக்கு மாம்பலம் பாரதி நகரில் ஒரு வயதானவர் ஏறினாராம். பெரியார் ரோட்டில் 'ஐயோ! பர்ஸைக் காணுமே'ன்னு

அலறினாராம். நூற்று நாற்பது ரூபாய் இருந்ததாம் அதில்.

எங்க வீட்டுக்காரர் 'லாங்' விசிலடிச்சதும் பஸ் கோடம்பாக்கம் ஓவர்பிரிட்ஜில் நின்று விட்டதாம். ஸ்டாப்பிங்கில் பெரியவர் ஏறினாரே தவிர அதன் பின் பஸ்ஸிலிருந்து யாரும் இறங்கவில்லையாதலால் ஜேப்படிக்காரன் பஸ்ஸில்தான் இருக்கணும்னு தெரிஞ்சு எல்லாரையும் 'செக்' பண்ண வேண்டும் என்றாராம் என் கணவர். இல்லையென்றால் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகணும். எல்லாப் பயணிகளுக்கும் கால தாமதம் ஆகும், இடைஞ்சல் என்று சுட்டிக் காட்டினாராம்.

பர்சை எடுத்தவன் முன் பக்கம் டிரைவர் உட்கார்ந்திருந்த பகுதியில் அதை நைஸாகப் போட்டு விட்டான் யாரும் கவனியாதபோது. பணம் பத்திரமாக இருந்தது.

டிபார்ட்டியில் இறங்கிய அந்தப் பெரியவர் பர்ஸ் கிடைச்சதுக்கு ஒரு நன்றிகூடச் சொல்லாமல் போயிட்டாராம். படிச்சவர் மாதிரியும் இருந்ததாம். அன்று இரவு இதைச் சொல்லி வருத்தப்பட்டார்.

தோஷங்களுக்குப் பரிகாரமாகச் சிலர் கற்களை மோதிரங்களுக்குக் கட்டிக் கொள்ளுகிறார்கள் என்று கேள்விப்பட்டேனே, அது உண்மையா?

சர: ஆமாம். நவக்கிரகங்களுக்குப் பிரீதியாக நவரத்தினக் கற்களைக் கட்டிக் கொள்வதுண்டு. உங்களுக்கு இது மாதிரி விஷயங்களில் நம்பிக்கை உண்டா?

ஜெய: ஓரளவு உண்டு. என் வீட்டுக்காரர் நல்ல சகுனம் கண்டால்தான் புறப்படுவார். அபசகுனம் ஏற்பட்டால் உட்கார்ந்து, தண்ணீர் சாப்பிட்டு விட்டுப் புறப்படுவார். வேலைக்குப் புறப்படும்போது குருவாயூரப்பன், வேங்கடாசலபதி, சபரிமலை சாஸ்தா — படங்களை வணங்கி விட்டுப் புறப்படுவார்.

அது சரி, வெளியூர்களிலிருந்து கூட நகைகளுக்கு ஆர்டர் தருவார்கள் என்றீர்களே, அவை தயாரானதும் எப்படி அனுப்புவீர்கள்?

சர: அடிக்கடி கடை முதலாளி மூர்த்தி அவர்களே பம்பாய், டில்லி, கல்கத்தா போன்ற ஊர்களுக்குப் போவார். அப்போதெல்லாம் கடையை இவர்தான் பொறுப்பாகக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

ஜெய: பெரிய பொறுப்புத்தான்.

சர: பஸ் கண்டக்டர்கள் எரிந்து விழுவதாயும், சரியாக நடந்து கொள்வதில்லை என்றும் பத்திரிகைகளில் புகார்க் கடிதங்கள் வருகின்றனவே?

ஜெய: அதற்கென்ன செய்ய? சுபாவத்தில் ரொம்ப சுமுகமாக இருப்பவர்கள்கூடச் சில சமயம் பஸ்ஸில் கூட்டம் நெரியும்போது பொறுமை இழந்து விடத்தான் செய்கிறார்கள். இது இயற்கை. இவர்கூட எப்போதும் ஜன நெரிசலில் போய்க் கொண்டிருப்பதாலோ என்னவோ வீடு திரும்பும்போது சலித்துக் கொண்டுதான் வருவார்... நைட் டியூட்டி முடிந்து வந்ததும் சாப்பிடாமல்கூட 'அப்பாடா' எனப் பெருமூச்சு விட்டபடி படுத்து விடுவார்.... எனக்குப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும்...

கல்யாணத்துக்குத் தாலி திருமங்கல்யம் செய்து வாங்கிப் போகும்போது, சாமி படத்தில் வைத்துத் தருவார்களாமே, வாஸ்தவமா?

சர: உண்மைதான். அதோடு கல்யாணத் திருமங்கல்யத்தை என் வீட்டுக்காரர், முதலாளியே தம் கைப்படத் தரவேண்டும் என்று சொல்லுவாராம். அவர் கைராசிக்காரராம்!

ஆமாம், சென்னைக்குத் தினமும் புதியவர்கள் ஏராளம் வருகிறார்களே; 'ரூட்' தெரியாமல் பஸ்ஸில் ஏறிவிட்டால் சரியான வழி சொல்லி, வேறு பஸ் பிடித்துப் போகச் சொல்வதுண்டா உங்கள் கணவர்?

ஜெய: நிஜமாகவே வெளியூர்க்காரர் என்று தெரிந்தால் ரூட் சொல்வார். வேணுமென்றே சிலர் வெளியூர்க்காரர் மாதிரி நடித்து ஓசி பஸ் பயணம் செய்ய நினைப்பார்கள். அவர்களிடம் ஏறினதுக்குப் பத்து பைசா டிக்கட் தந்துவிடுவார்.

நீங்கள் உங்கள் நகைகளை அடிக்கடி டிசைன் மாற்றிச் செய்யச் சொல்லிக் கொடுப்பதுண்டா?

சர: சிவ சிவா! நாங்கள் என்ன நகைக் கடையே வைத்திருக்கிறோமா என்ன? — இஷ்டம் போல டிசைன் மாற்றிக் கொண்டிருக்க! நகைக் கடையில் வேலைதானே பார்க்கிறார் என் கணவர்... இதைச் சொல்லுங்கள்... உங்கள் கணவர் டியூட்டியில் இருக்கும்போது அதே பஸ்ஸில் நீங்கள் ஏறிப் போனதுண்டா?

ஜெய: இரண்டு மூன்று தடவை கல்யாணம் ஆன புதுசில் இப்படிப் போய் வந்திருக்கிறேன். முகம் பாராமல் மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோல் டிக்கட்டு கொடுத்துவிட்டுப் பிறகு சற்று மூச்சு விட அவகாசம் கிடைத்தபோதுதான் என்னைக் கண்டுகொண்டார்.

சர: இந்தக் கண்டக்டர் வேலைக்குப் பிறகு அவருக்கு என்னென்ன பிரமோஷன் கிடைக்கும்?

ஜெய: இத்தனை நாட்கள் செக்கிங் இன்ஸ்பெக்டர் ஆகியிருக்க வேண்டியவர்தான்... ஏனோ மேலிடத்தில் தயவு பிறக்கவில்லை. அதை அடுத்து டிராபிக் இன்ஸ்பெக்டர், டிராபிக் மானேஜர் என்றெல்லாம் கூடப் பதவி உயர்வு பெற முடியும்.

செக்கிங் இன்ஸ்பெக்டராக இருக்கும் ஒருவர் வேலை பார்த்துக் கொண்டே எம். ஏ. படிக்கிறாராம். பதவி உயர்வு பெறத் தகுதியைத் தேடிக் கொள்கிறார் என்று என் வீட்டுக்காரர் சொன்னார். கேரளாவில் பி. ஏ. படித்தவர்கள் பலர் எங்களுக்குத் தெரிந்து பஸ் கண்டக்டர்களாக வேலை பார்த்து வருகிறார்கள்....


சர: எந்த வேலையானாலும் என்ன? உழைப்பும் நேர்மையும்தான் வேண்டும்.

காந்தியடிகள் சொன்ன மாதிரி உழைப்பில் கௌரவம் பார்க்கக் கூடாது. உயர்வு தாழ்வு பார்க்கக் கூடாது.

(இத்தருணத்தில் இதுவரை இன்னொரு பக்கத்தில் பேசிக்கொண்டிருந்த திரு வெங்கட்ராமனும் பைதல் நாயரும் வருகின்றனர். கிளம்புவோமா நாழியாகிறது என்று பைதல் நாயர் கூற, தம்பதி விடைபெறுகின்றனர்.)

உரையாடல் தொகுப்பு: ஏ. சுவாமிநாதன்.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon